Koviloor Digital Library

குமரக் கடவுள் அகத்தியருக்கு

உபதேசித்த

ACC.NO.44952
R689



சோதிட ஒயில் கும்மி

மூலமும் உரையும்

தாமரை நூலகம், சென்னை - 600 026.

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

குமரக்கடவுள்

அகஸ்தியருக்கு உபதேசித்த

சோதிட ஒயில் கும்மி

பதிப்பாசிரியர்
ஆர்.சி. மோகன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44952

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண் : 53

முதல் பதிப்பு : ஜனவரி 2001

இரண்டாம் பதிப்பு : ஜூலை 2013

மூன்றாம் பதிப்பு :அக்டோபர் 2020

பதிப்புரிமை பெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	சோதிட ஒயில் கும்மி
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	அக்டோபர் 2020
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி
அச்சுத்தாள்	:	16 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	104
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரூ.50/-
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

Koviloor Digital Library

பதிப்புரை

மிக அரியதாகக் கிடைத்த ஒரு கையெழுத்துப் பிரதியை நண்பர் L.S.சேவுக மூர்த்தி கொண்டு வந்து காட்டியபோது - படித்துப் பார்த்து வியப்படைந்தேன்.

சோதிடக் கலையின் பனிரெண்டு பாவங்களுக்குரிய பலன்களை சாதாரணமாகக் கூறியதோடு நில்லாமல் மேலும் பல நுட்பமான விஷயங்களும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

எடுத்துக் காட்டாக தனபாவமாகிய இரண்டாம் பாவத்திற்குப் பலன் சொல்லுமிடத்து ஆயிரம் பொன் சம்பாதிக்கக் கூடியவன், மூவாயிரம் பொன் சம்பாதிக்கக் கூடியவன், வெகுதனம் சம்பாதிக்கக் கூடியவன் என்று யோக லட்சணங்கள் விவரித்துச் சொல்லப்பட்டுள்ளன.

இதே போல் ஒவ்வொரு பாவத்திற்கும் சொல்லப்பட்டுள்ளன. அரிய பலன்கள் சோதிடர்க்குப் பெரிதும் உதவக் கூடியவையாகும்.

இந்த அரிய நூல் அழியாமல் காப்பாற்றப்பட்டு இப்பொழுது டாக்டர் சேவுக மூர்த்தியின் உதவியால் லோட்டஸ் வெளியீடாக மலர்கிறது.

பாலஷண்முகானந்தா

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

91/4

Koviloor Digital Library

முற்றும்

Koviloor Digital Library

சோதிட நூல்கள்

1. சாதக சூடாமணி– மூலமும் உரையும்
ரூ.35.00

2. திருவள்ளுவ நாயனார் ஏலேல சிங்கருக்கு உபதேசித்த
பெரிய சுந்தரசேகரம்.
கேள்வி பதில் ரூபமாகச் சோதிடத்தை விளக்கும் அரிய நூல். ரூ.35.00

3. குமரக் கடவுள் அகத்தியருக்கு உபதேசித்த
சோதிட ஒயிற்கும்மி.
இதில் காணப்படும் அரிய விஷயங்கள் ஆச்சரியமானவை. ரூ.35.00

4. சோதிட கணித சாஸ்திரம்
பஞ்சாங்க கணனம். ரூ.60.00

5. சோதிடப் பேரகராதி. ரூ.65.00

6. மச்சமுனி சோதிடம். ரூ.20.00

7. பீராங்கி முனிவர் சோதிடம் ரூ.15.00

8. ஆதி சங்கரர் அருளிய
சோதிட காவியம் 12000 ல்
புத்திர பாவகம் ரூ.30.00
போக பாவகம் ரூ.40.00
களத்திர பாவகம் ரூ.60.00

9. சுந்தரானந்தர் சோதிட காவியம் ரூ. 135.00

தாமரை நூலகம்

7,N.G.O. காலனி,
வடபழனி,சென்னை–600 026.

Koviloor Digital Library

1. உயிர் காக்கும் சித்த மருத்துவம்:

ஆத்ம ரக்ஷாமிர்தம் என்னும் வைத்திய சார சங்கிரஹம் என்ற பெயரில் வெளிவந்த நூல். மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு பாடபுத்தகமாக உதவிய நூல். சித்த மருத்துவம் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கியது.

ரூ. 250.00

2. விஷ வைத்திய ஆருட நூல்கள்:

சிவபெருமான், உமாதேவி, பதஞ்சலி, தன்வந்திரி, கௌசிகர், உரோமரிஷி முதலானோர் பாடிய ஒன்பது நூல்கள்.

சகல விதமான விஷப் பிராணிகளின் குணங்களும், அவற்றின் விஷத்தை நீக்குவதற்கான மருந்துகள், மாந்திரிகம் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கிய அற்புதமான நூல்.

ரூ. 150.00

3.சித்தர்கள் வரலாறு:

எஸ். பி. இராமச்சந்திரன் அவர்கள் எழுதிய ஆய்வு நூல். முழுமையான மிக அரிய நூல். சித்தர் நூல்களின் பெருமைகள், அவற்றில் உள்ள அரிய விஷயங்களும் அடங்கிய நூல்.

ரூ. 100.00

4.அகஸ்தியர் பஞ்சகாவியத்திற்குக் குருநூல் என்னும் சௌமிய சாகரம் 1200:

மதுரை தமிழ்ச்சங்கம் உதவிய ஓலைச் சுவடி- இது வரை வெளிவராத இரகசியங்களைக் கொண்ட அரிய நூல்.

ரூ. 80.00

தாமரை நூலகம்

7,N.G.O. காலனி,

வடபழனி,சென்னை-600 026.

Koviloor Digital Library

ஓம்

சிவானந்த சித்தகுருவே நம:

குமரக்கடவுள் அகத்தியருக்கு உபதேசித்த சோதிட ஓயிற் கும்மி- எனும் துவாதச பாவ பலன்-

விநாயகர் துதி

வெண்பா- ஓயில் சந்தக்கும்மி

சிந்தா மணியென்னும் சோதிடநூ விற்சிறந்த
செந்தேன் பெருக்கிற் சிறுதுளியைச் - செந்தமிழாற்
சீர்தருநற் கும்மியிது செப்புதற்கு வாக்குதவும்
காார்மேனி ஐங்கரனே காப்பு.

அகத்தியர் சோதிட சிந்தாமணி என்ற செந்தேன் பெருக்காகிய சோதிடப் பெருநூலினின்றும் சிறிதுளியான சோதிடக் குவியலை கும்மியாகப் பாடும்படி எண்ணம் கொண்ட அடியவனின் திருநாவில் நின்று ஆசிதந்து என்னை ஆட்டுவிக்கும் மழைமேகம்போன்ற வண்ணம் பொருந்திய விநாயகப் பெருமானின் திருவடிகள் எனது நூலிற்கு துணை செய்வதாகுக.

சதாசிவன் துதி

ஆதி பராபர சோதி சதாசிவா
 னந்தன்பா தத்தினி லன்புவைத்தே
அனவரத மனமுருகி யினியநறை பனிமலர்கொண்
 டர்ச்சனை செய்தே அடிபணிவாம். 1

உலகத்து உயிர்களுக்கெல்லாம் ஆதியானவனும், அகண்ட சச்சிதானந்த மயமான சோதியாய் நின்றவனும், எப்பொழுதும் தவநிஷ்டையிலேயே அமர்ந்திருப்பவருமான சிவபெருமானின் மகத்துவம் பொருந்திய திருவடிக் கமலங்களை மனதைப் பதித்து இரவு, பகல் மாறாத அன்புடன் கசிந்துருகும் மனத்துடன் கள்வ்டியும் குளிர்ந்த மலர்களைத் தூவி வழிபாடுசெய்து ஆதிச் சித்தனான சிவன் பாதங்களில் பணிந்து வணங்குகிறேன்.

Koviloor Digital Library

1. உயிர் காக்கும் சித்த மருத்துவம்:

ஆத்ம ரக்ஷாமிர்தம் என்னும் வைத்திய சார சங்கிரஹம் என்ற பெயரில் வெளிவந்த நூல். மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு பாடபுத்தகமாக உதவிய நூல். சித்த மருத்துவம் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கியது.

ரூ. 250.00

2. விஷ வைத்திய ஆருட நூல்கள்:

சிவபெருமான், உமாதேவி, பதஞ்சலி, தன்வந்திரி, கௌசிகர், உரோமரிஷி முதலானோர் பாடிய ஒன்பது நூல்கள்.

சகல விதமான விஷப் பிராணிகளின் குணங்களும், அவற்றின் விஷத்தை நீக்குவதற்கான மருந்துகள், மாந்திரிகம் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கிய அற்புதமான நூல்.

ரூ. 150.00

3. சித்தர்கள் வரலாறு:

எஸ். பி. இராமச்சந்திரன் அவர்கள் எழுதிய ஆய்வு நூல். முழுமையான மிக அரிய நூல். சித்தர் நூல்களின் பெருமைகள், அவற்றில் உள்ள அரிய விஷயங்களும் அடங்கிய நூல்.

ரூ. 100.00

4. அகஸ்தியர் பஞ்சகாவியத்திற்குக் குருநூல் என்னும் சௌமிய சாகரம் 1200:

மதுரை தமிழ்ச்சங்கம் உதவிய ஓலைச் சுவடி– இது வரை வெளிவராத இரகசியங்களைக் கொண்ட அரிய நூல்.

ரூ. 80.00

தாமரை நூலகம்

7,N.G.O. காலனி,
வடபழனி,சென்னை–600 026.

Koviloor Digital Library

ஓம்

சிவானந்த சித்தகுருவே நம:

குமரக்கடவுள் அகத்தியருக்கு உபதேசித்த சோதிட ஒயிற் கும்மி- எனும் துவாதச பாவ பலன்-

விநாயகர் துதி

வெண்பா- ஒயில் சந்தக்கும்மி

சிந்தா மணியென்னும் சோதிடநூ லிற்சிறந்த
செந்தேன் பெருக்கிற் சிறுதுளியைச் - செந்தமிழாற்
சீர்தருநற் கும்மியிது செப்புதற்கு வாக்குதவும்
கார்மேனி ஐங்கரனே காப்பு.

அகத்தியர் சோதிட சிந்தாமணி என்ற செந்தேன் பெருக்காகிய சோதிடப் பெருநூலினின்றும் சிறிதுளியான சோதிடக் குவியலை கும்மியாகப் பாடும்படி எண்ணம் கொண்ட அடியவனின் திருநாவில் நின்று ஆசிதந்து என்னை ஆட்டுவிக்கும் மழைமேகம்போன்ற வண்ணம் பொருந்திய விநாயகப் பெருமானின் திருவடிகள் எனது நூலிற்கு துணை செய்வதாகுக.

சதாசிவன் துதி

ஆதி பராபர சோதி சதாசிவா
　　னந்தன்பா தத்தினி லன்புவைத்தே
அனவரத மனமுருகி யினியநறை பனிமலர்கொண்
　　டர்ச்சனை செய்தே அடிபணிவாம். 1

உலகத்து உயிர்களுக்கெல்லாம் ஆதியானவனும், அகண்ட சச்சிதானந்த மயமான சோதியாய் நின்றவனும், எப்பொழுதும் தவநிஷ்டையிலேயே அமர்ந்திருப்பவருமான சிவபெருமானின் மகத்துவம் பொருந்திய திருவடிக் கமலங்களை மனதைப் பதித்து இரவு, பகல் மாறாத அன்புடன் கசிந்துருகும் மனத்துடன் கள்வடியும் குளிர்ந்த மலர்களைத் தூவி வழிபாடுசெய்து ஆதிச் சித்தனான சிவன் பாதங்களில் பணிந்து வணங்குகிறேன்.

Koviloor Digital Library

உமையவள் துதி

ஜெகதலத் தோர்கள்சீர்த் திக்கவுஞ் சோதிடம்
செந்தமி ழாற்கும்மி செப்பிடவும்
சிமையமுற்று மிமகிரியின் குமரியெனும் உமையவளின்
சீர்பாதம் போற்றிப் பணிந்திடுவாம். 2

இம்மண்ணுலகத்தில் வாழும் அறிவுச் சான்றோர்கள் யாவரும் புகழ்ந்து பாராட்டும்படி செந்தமிழில் கும்மிச்சந்தத்தில் சோதிட நூலைப் பாடிடவும் உயரமான சிகரங்களைக்கொண்ட பனிமலையாம் இமயத்தின்கண் வீற்றிருந்து உலகாளும் கயிலைநாயகியான என்றென்றும் இளமை மாறாத கன்னியான உமாதேவியின் திருஅடிக் கமலங்களை வாழ்த்தி வணங்குகிறேன். உலகமாதாவான ஆதிசக்தியன்னை அடியவனை ஆசிர்வதிப்பாளாக.

திருமால் இலக்குமி துதி

பையரா வின்மெத்தை மீதேது யில்மாயன்
பங்கயச் செல்வி திருவடியைப்
பத்தியுடன் சித்தம்தாய் முத்தமிழில் வைத்தகுமி
பாடவும் அன்பாய்ப் பணிந்தேத்துவாம். 3

ஆயிரம் நாவுகளைப் படைத்த ஆதிசேடன் என்ற நாகத்தினை மெத்தையாக அமைத்து அதன்மீது துயில் கொண்டிருக்கும் அனந்த சயனனான திருமாலின் இதய கமலத்தில் வீற்றிருக்கும் அன்னை மகாலெட்சுமியின் பொன் மலர்ப் பாதங்களில் பக்தி சிரத்தையுடன் வணங்கி முத்தமிழ் என்று பெரும்புகழ் பெற்ற தெய்வத்தமிழில் கும்மிச்சந்தமெனும் பெயரில் சோதிட நூல் பாட அருளும்படி வேண்டுவோமாக.

பிரமன் சரஸ்வதி துதி

நாரண னுந்திக் கமலத்திற் றோன்றிய
நான்முகன் பாதத்தைப் போற்றி செய்து
நாவலவர் நாவுதனின் மேவிவரும் பூவைமினாள்
நங்கையைச் செங்கையாற் கூப்பினேனே. 4

பாற்கடலில் பள்ளிகொண்ட நாராயணன் உந்திக்கமலத்திலுதித்தவரான படைப்புத் தொழில் புரியும் பிரமனின் பாதத்தை வணங்குகிறேன். பெரும் புகழ் படைத்த புலவர் பெருமக்களின் திருநாவின்கண் வீற்றிருந்து அரசுபுரியும் அன்னை சரஸ்வதியின் பூம்பாதங்களில் தெய்வ வடிவங்ளை அர்ச்சித்து, அர்ச்சித்தே சிவந்து போயிருக்கும் எனது இருகரங்களைக் கூப்பி வணங்குகிறேன்.

Koviloor Digital Library

சோதிட ஒயிற் கும்மி

வேலவர் துதி

புங்கவர் தன்பகை யைப்பொடி செய்துயெப்
பூமியி லும்புகழ் நாட்டி வைத்த
பூரணனே காரணனே வாரணனுக் கேரிளவல்
புண்ணிய வேலரைப் போற்றிசெய்வாம். 5

தேவர்களின் பகைவனான சூரபத்மன் என்ற அசுரனை வென்று அவனால் பிடித்து வைக்கப்பட்டிருந்த அனைத்து உலகங்களிலும் புகழ்பெற்று விளங்கிய பூரணப்பொருளானவனும், தீந்தமிழ் மொழியின் காவல் தெய்வம் என்ற பெயர்பெற்றவனும், யானைமுகத்து வினாயகரின் தம்பியுமான அதியற்புதமான அஞ்ஞான இருள்நீக்கும் மெய்ஞான வேலைத் தரித்தவருமான குமரக்கடவுளை வணங்கி வழிபடுகின்றேன்.

குருமுனி துதி

போதச் சொரூபப் பொதிகையின் மேவிய
பொய்யறுத் ததுய்ய மாமுனியின்
பூங்கழலிற் றேங்கிநிறைந் தோங்குமலர்ப் பாங்குடனே
பூசித்துப் போற்றித் துதிசெய்குவாம். 6

ஞான சொரூபியும், பொதிகை மலையின்கண் வீற்றிருந்து தவவாழ்வு வாழ்ந்தவரும் இப்பூமண்டலத்தில் மிகச் சிறந்த சித்தர்என்ற பெயர்படைத்தவருமான அகத்தியர் பெருமானின் திருவடிகளில் தேன்நிறைந்த மலர்களைத்தூவி வணங்குகிறேன்.

ஆசான் துதி

ஐந்து மிலக்கணந் தேர்ந்து மாணாக்கர்க்
களித்துளந் தேற்றிய ஆசான்றன்
அடிமலரெம் முடிமிசையிற் கொடுதினமும் படிமிசையில்
ஆசைகொண்டு உள்ளத்தில் அன்புசெய்வாம். 7

ஐம்புலன்களை வெல்லும்வழியுடன், தமிழ் இல்க்கண ஞானமும் அருகிருந்து சொல்லிக்கொடுத்து பல மாணாக்கர்களை உருவாக்கிய எனது குருதேவரின் திருவடிக் கமலங்களை மலர்களால் அர்ச்சித்து அதனை எடுத்து எமது சிகையில் சூடி மகிழ்ந்து குருவணக்கம் செலுத்துவோம்.

நூல் வரலாறு

...தத்தின் அங்கம தாய்மருவும் மறை
விழியெனும் சோதிட மெய்ப்பொருளை

Koviloor Digital Library

மேதினியோர் சாதகமுட் டீதுநலம் ஓதிடவும்
வெள்ளறி வாற்கும்மி விண்டதம்மா 8

நான்கு வேதங்களின் ஒரு பகுதியளவு, வேதத்திற்கே கண்போன்ற சோதிட சாஸ்திரத்தின் உண்மையான கருத்தை உலகத்தோர் அறியும்படி சாதகங்களை ஆராய்ந்து நற்பலுனும், தீயபலனும் அறிவிக்கும் பொருட்டு சோதிடர்களுக்காக தெளிவுபட உரைக்கும் வகையில் இந்த சோதிட ஒயிற் கும்மி யெனும் நூலைப் பாடியுள்ளேன் தாயே.

அக்கியோன்

சீர்மரு வும்பட்டஞ் சேரியிற் சாமய்யர்
செய்தவத் தாலீன்ற மைந்தன் சீராய்ச்
செந்திதனிற் கந்தரடிக் கந்திபகற் சிந்தையெண்ணிச்
செப்பினே னித்தமிழ் நட்புடனே. 9

பெரும்புகழ் பெற்ற பட்டஞ்சேரியெனும் ஊரில் வசித்துவந்த சாமாவய்யர் என்பவர் செய்த தவத்தின் பலனாய் அவரது மகனாகப்பிறந்த நான் திருச்செந்தூரில் கோவில் கொண்டுள்ள கந்தப்பெருமானை இரவு, பகலாய் இடைவிடாமல் எனது உள்ளத்தில் பொருத்தி வழிபட்டு தீந்தமிழால் இச்சோதிட நூலைப் பாடினேன்.

அவையடக்கம்

ஆடும் சிகியைக்கண் டாடும்வான் கோழிபோல்
ஆழிப் புலவர்முன் ஊளையிடு
மன்னதென மண்ணுலகிற் சின்னறிவாற் சொன்னகவி
ஆயினன் காக்குவ ரேபெரியோர் 10

அழகுடன் தோகை விரித்தாடும் மயிலைப்பார்த்து வான்கோழியானது தானும் ஆடுவதைப்போல இலக்கிய, இலக்கணங்களைத் தெளிவாகக்கற்று ஞானக்கடலாகத் திகழும் பெரும்புலவர்கள் மத்தியில் ஊளையிடும் நாய்போல எனது சிறிய அறிவினால் பாடிய இந்த நூலில் சொற்பிழை, பொருட்பிழை இருந்தாலும் அறிவிற் சிறந்த பெரியோர் மன்னித்து அருள்புரிவராக.

நூல்

பிரகுதி லட்சணம்

சீர்தரு மைந்தன் உதித்தலக் னத்தைநற்
றிங்கள்பார் வைசெய்யா தாயிடினும்
திருவேர்சுதன் பெறுகாலமு மறுவீடக முறவேபிதா
சென்றிருந் தானென வென்றுரைத்தார்

ஜாதகர் பிறந்த லக்கினத்தை சுப ஆதிபத்தியம் பெற்ற சந்திரனானவர் பார்க்காவிட்டால். ஜாதகர் பிறந்த அந்த வேளையில் அவன் தந்தை வேற்று ஊருக்குச் சென்றிருப்பான் என்று அகத்தியர் உரைத்தனரே.

Koviloor Digital Library

இதுவுமது

சத்தமந் தன்னிலெட் டொன்பதி லேரவி
தங்கிடுவும் அந்த இராசிகளும்
சரமும்வழி திரமும்புற முபயம் பொது தரைமீதினிற்
றாயும்பெற் றாளிந்த ஜாதகனே. 2

ஜாதகரின் ஜென்ம லக்கினத்திற்கு 7,8,9ஆம் இடங்களிலே சூரியன் தங்கி இருக்க அந்த ராசிகளானது சரராசியானால் பிரசவத்திற்காக மருத்துவ சாலைக்குச் செல்லும் வழியிலும், ஸ்திரராசியானால் வீட்டின் பின்புறமும், உபய ராசியானால் தனது வீட்டிலும் ஜாதகர் பிறந்திருப்பார் என்றவாறே.

பிதா பரதேசம்

லக்கினத் திற்சனி யேழிற் குஜன்நிற்க
நன்மதிக் குமுன்பின் மால்புகராய்
நாயகியும் நோயுறுகா னேயபிதா வேயபர
தேசத்தில் நண்ணினன் எண்ணிடுவாய். 3

குழந்தையின் ஜென்மலக்கினத்தில் சனியிருந்து ஏழாம் வீட்டில் செவ்வாய் தங்கி ஒருவரை ஒருவர் பார்க்கவும், சந்திரனுக்கு இருபுறமும், புதனும், சுக்கிரனும் தங்கினால் அக்குழந்தையின் தாயானவள் நோய்த்துன்பத்திற்கு ஆளாவாள். அவளது அன்பான கணவர் வேற்று நாடுகளில் சென்று தங்கியிருப்பான் என்று கும்பமுனி உரைத்தபடியே.

தாய் மரணம்

சந்திரற் கைந்தாறி லொன்பதிற் சேய்சனி
தங்கிடி னும்மவர் நோக்கிடினும்
தாயும்வெகு நோயுற்றெழில் சேய்பெற்றவள் மாயுமெனச்
சாற்றுத லுண்மைநற் றவமுனியே. 4

சந்திரனுக்கு 5, 6, 9, ஆவது வீடுகளில் செவ்வாயும், சனியும் சேர்ந்து தங்கினாலும், அல்லது அவர்களால் சந்திரனுக்கு 5, 6, 9, ஆம் வீடுகள் பார்க்கப்பட்டாலும், குழந்தையைப் பெற்ற தாயாகியவள் நோயுண்டாகி இறந்து போய்விடுவாள் என்று தவசீலரான அகத்தியர் பெருமான் உரைத்தனர்.

தாய் தீர்க்காயுள்

நன்மதி யைஜென்ம லக்கினத் தாயினுந்
தமனியன் [illegible]த்திடத் தாய்மகவிலை
காலத்தினில் சீலத்துடன் கோலத்தொடு மாலற்றிவன்
தாய்க்கு (த்)தீர்க் காயுளைத் தான்புகல்வாய். 5

Koviloor Digital Library

குளிர்ச்சியான கிரணங்களைக்கொண்ட சந்திரனை லக்கினாதிபதியோ அல்லது சனியோ பார்த்தால் அக்குழந்தையும், அதன்தாயும் இம்மண்ணுலகில் நல்ல புகழுடன் எதிரிகளின்றி வாழ்வர், மேலும் அவன் தாயாரின் ஆயுளும் நீண்டு இருக்கும் என்றவாறு (தமனியன்-சனி).

மதலையை மறுதாய் வளர்க்கல்

வில்லுறுந் திங்களைச் சேய்சனி பார்க்கினும்
வெண்மதி யைச்சுபர் நோக்காதாயின்
வேல்விழியின் பாலனைவேர் கோமனை பால்வளர
மேவுவள் வாலையிற் றென்புரியில். 6

தனுசு இராசியில் சந்திரன் தங்கியிருக்க அந்தச் சந்திரனைச் செவ்வாயோ, சனியோ பார்த்தாலும், சுபக்கோள்களாகிய வியாழன், சுக்கிரன்போன்றோர் பார்க்காவிட்டால் அந்தக்குழந்தையானது தனது தாயிடமிருந்து பிரிந்து வேறுஒருவர் வீட்டில் வளரும் அக்குழந்தையைப் பெற்றவள் இயமமலையில் சென்றுவாழ்வாள் அதாவது இறந்து போவாள் என்றவாறு.

பிரசவ வீடு

ஆதவன் ஜென்மத்தைப் பார்க்கிற் பிதுர்வீடு
அம்புலி பார்த்திடிற் றாய்மனையில்
அணங்குந்தின மினங்குங்குணம் பிணங்கின்றியே வணங்கிக்கொடு
அன்னையீன் றாளென் றருள்முனியே. 7

குழந்தையின் ஜென்ம லக்கினத்தைச் சூரியன் பார்த்தால் பிரசவமானது தந்தையின் வீட்டிலும், சந்திரன் பார்த்திடில் தாயாரின் பிறந்தவீட்டிலும் நிகழ்ந்திருக்கும். அத்துடன் தாயானவளின் மீது அனைவரும் அன்பு பாராட்டுவர் என்று அகத்தியர் பெருமான் அருளிச் செய்தவாறு.

பிறர்மனை

சிலையின் மருவிய திங்களை மற்றுள
கிரகமே ழில்நின்று பார்வை செய்தால்
தெரிவைபிறர் மனையேறியே சிறுவன்றனைப் பெறவந்தவன்
சிந்தையிற் றேர்ந்துநீ செப்பிடுவாய். 8

தனுசு இராசியில் சந்திரன்நிற்க மற்ற கோள்கள் சந்திரனுக்கு ஏழாவது வீட்டில் நின்று சந்திரனைப் பார்த்தால் அக்குழந்தையானது பிறர்வீட்டில் அவன் தாயால் ஈன்றெடுக்கப் (பட்டதெ)ன்பதைத் தேர்ந்து நீ சோதிடம் உரைக்கக் கடவாய் என குறுமுனியாம் அகத்தியர் அருளிச்செய்தவாறே.

Koviloor Digital Library

இருள் வீடு

சால்முதல் நண்டிருட் டாமதி லேயொன்று
லக்கின மாமதிற் சனியிருக்கில்
தரைமீதினி லிருள்வீட்டினில் மருவித்திரு பெறுவாளெனச்
சண்முகன் சொற்றன ருண்மை யென்றார். 9

கும்பம் முதல், கடகம் வரை (கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம் கடகம்) இருள் இராசிகளாகும் இவற்றுள் ஒன்று லக்கினமாகி அதில் சனி தங்கிஇருக்க அக்குழந்தையானது இருள்நிறைந்த (அல்லது இரவில்) வீட்டில் தாயினால் ஈன்று எடுக்கப்படும் என்று சண்முகப்பெருமான் எனக்குக்கூறியதை என்மகனே உனக்கு நான் கூறுகிறேன் என்று கும்பமுனிவர் அருளிச் செய்தபடியே.

சுடுகாட்டில்

தண்டு கன்னிசுறா சால்தனிலே யொன்று
லக்கின மாய்ச்சனி தானிருக்கத்
தரைமைந்தனும் இருகண்களி லுறநோக்கிட்ப் பிரசூதியும்
தானுஞ் சுடுகாட்டிற் றான்பெறுவாள். 10

மிதுனம், கன்னி, மகரம், கும்பம் இவற்றில் ஒன்று லக்கினமாகி அதில் சனியானவன் தங்கினால் அப்போது பிறக்கின்ற குழந்தையானது தரையில் விழுந்து இந்த உலகத்தைப்பார்க்கும் இடமானது சுடுகாடாக இருக்கும் என அகத்தியர் அருளியபடி.

சுற்றத்தார்மனை

பூரண மாமதி யேழிடத் தில்நின்று
புண்ணிய லக்கினம் பார்த்திடவும்
புற்றமுது முற்றமொழி சுற்றமனை பெற்றிடுநன்
புதல்வனாம் என்றிவன் பூட்டிடுவாய் 11

பௌர்ணமிச் சந்திரன் லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் நின்று லக்கினத்தைப் பார்த்திட்டால் கொஞ்சும் மழலைச் செல்வமானது பிறக்கும் வீடானது தாயாரின் சுற்றத்தாரின் வீடாக இருக்கும் என்று பொதிகைமலைத் தவஞானி அகத்தியர் அருள் செய்தபடியே.

தாய் மரணம்

திங்க ளுடன்மூன்று பாவிக ளாமெனிற்
சென்மஞ்நான் கேழினிற் றீயருறில்
தீதாய்திரு மாதாசதுர் வேதாவிதி சேதந்தரும்
தீயநோய் தன்னாற் சிதையுமென்றார். 12

Koviloor Digital Library

சந்திரனுடன், தீயகிரகங்கள மூவர் சேர்ந்து இருந்தாலும், லக்கினத்திற்கு நான்கு, ஏழு ஆகியவீடுகளில் தீயகிரகங்கள் தங்கினாலும், குழந்தையைப் பெற்ற தாய் கொடிய நோயினால் பாதிக்கப்படுவாள் அத்துடன் பிரமன் எழுதிய தலைவிதியாலே தாயானவள் இறந்தும் போவாள் என்று கும்பமுனி கூறியவாறே.

தீபத்தினியல்பு

வெண்மதி யும்வளர் காலத்தி லேநெய்
விளக்குள தாந்தேய் மதியென்னிலோ
விரியுஞ்சுட் ரெரிதீபமு மருகின்றியே இருள்சூழ்மனை
வேல்விழி ஈன்றசு தன்விள்ளுவாய். 13

சுக்கிலபட்சமாகிய வளர்பிறைச் சுந்திரன் காலத்தில் குழந்தையொன்று பிறக்குமானால் பிரசவ அறையிலே நெய்விளக்கு எரிந்துகொண்டிருக்கும், அவனே தேய்பிறைச் சந்திரனானால் அந்தஅறையில் விளக்கு ஏதுமின்றி இருண்டு போயிருக்கும் என்றவாறு.

வீதிகளினியல்பு

ஆதவ னும்புகர் கீழ்த்திசை யாம்வீதி
ஆடர வன்குஜன் தென்வீதி
அம்புலியும் வம்புசனி யிம்பரிலே தம்பிபிறந்
தான்மேற்கு வீதிகீழ் வாயில் வீடாம். 14

குழந்தையின் ஜென்ம லக்கினத்தில் சூரியன், அல்லது சுக்கிரன் தங்கினால் அக்குழந்தை பிறந்த வீடானது கிழக்கு வீதியில் ஆகும். இராகு, கேது, செவ்வாய் இவர்களில் ஒருவர் லக்கினத்தில் இருக்க குழந்தைபிறந்தவீடு தெற்கு வீதியிலாகும். சந்திரன், சனி இவர்கள் தங்கியிருக்க மேற்கு வீதி என்றும் அவ்வீட்டின் வாசலானது கிழக்கு நோக்கியிருக்கும் என்றவாறு.

இதுவுமது

உத்தம னேமதி மைந்தனுக் குந்திவ்ய
உம்பர் குருவுக்குத் தரவீதி
ஒடுங்கொடு மூடுன்னெடு மேடைவடி வீடும்புகு
வாயில்தென் னுற்றங்கு தித்தவனாம். 15

புதன், வியாழன் இவர்களில் ஒருவர் லக்கினத்திலிருக்க வடக்கு வீதியில் அமைந்த வீடாகும் அவ்வீட்டின்வாயில் தெற்குப் பார்த்திருக்கும். மேலும் வாசலின் இருபுறமும் உயரமான திண்ணைகளும் இருக்கும் அந்தவீடாகும் குழந்தை பிறந்தவீடு என்றுஅகத்தியர் உரைத்தவாறே.

Koviloor Digital Library

இல்லத்துள் ஈன்றஇடம்

ஆடு கடகமுந் தேள்துலை கும்பமிவ்
வைந்திலோர் லக்கின மாய்மருவில்
அணிவீட்டினுள் குணபாலினில் மணமாதுதான் நணுகீன்றிடும்
ஆனந்த ஜாதக னென்றுணர்வாய் 16

மேஷம், கடகம், துலாம், விருச்சிகம், கும்பம், ஆகிய இந்த 5 இராசிகளில் ஒன்று லக்கினமாகினால் அப்போது பிறந்த சிசுவானது அதுபிறந்த வீட்டின் கிழக்கு அறையில் அன்னையின் திருவயிற்றிலிருந்தும் உதித்திருக்கும் என்றவாறு.

இதுவுமது

மீன்சிலைக் கன்னி மிதுனமின் நான்கினில்
விள்ளுமோர் லக்கின மாய்விளங்கில்
வீடுள்வட மாடேயணி கோடின்மூலை யாடீன்றிடும்
வேந்தன் இவனென்று விண்டிடுவாய். 17

மிதுனம், கன்னி, தனுசு, மீனம், என்னும் இந்த நான்கு இராசிகளுள் ஒன்று லக்கினமானால் அப்போது பிறந்தகுழந்தையானது அதுபிறந்த அந்தவீட்டின் வடக்குக் கோடியில் ஒருமூலையில் என்று தெரிவாயாக.

பாலாரிஷ்டம்

இலக்கினத் திந்துடன் பாவர் இருக்கினும்
ஏழெட்டிற் பாவர் சுபர் நோக்க
மில்லையெனில் வல்லிமகன் தொல்லைவினை கொல்லுமென
வித்திறஞ் சொல்வது தப்பிடாதே. 18

லக்கினத்தில் சந்திரனுடன் பாபக் கோள்கள் தங்கினாலும், லக்கினத்திற்கு ஏழு, எட்டாம் வீடுகளில் பாபக்கோள்கள் தங்கினாலும், அல்லது லக்கினத்தைப் பார்த்தாலும் அக்குழந்தைக்குப் பாலாரிஷ்டம் எனும் தோஷம் ஏற்படும். அதின்பலனாக மரணத்திற்கு ஒப்பான கண்டமும், நோய்த்தொல்லைகளும் முன்வினைப் பயனால் கட்டாயம் நேரும்.

இதுவுமது

தோன்றுஞ் சென்மமுதல் நாலேழெட் டீரைந்திற்
சோம னுடன்பாவர் சூழ்ந்திடி னுஞ்
செ[illegible]ழுவாயெழின் குலமைந்தனும் வலிமீண்ட யிற் கொலை யாமெனத்
துய்ய தமிழ்முனி மெய்யிதுவே. 19

Koviloor Digital Library

லக்கினத்திலிருந்து எண்ண லக்கினம், நான்கு, ஏழு, எட்டு, பத்து; முதலிய ஸ்தானங்களில் சந்திரனுடன் பாபர்கள் கூடி இருக்க, அப்போது பிறந்த குழந்தையானது நோயால் அவதிப்படுவதுடன் இறந்தும் போகும் அல்லது, மரணத்திற்கு ஒப்பான கண்டமாவது ஏற்படும் என்று சுப்பிரமணியர் அருளால் தமிழ்முனிவர் அகத்திய மாமுனிவரும் உரைத்தபடியே இது உண்மையாகும்.

இதுவுமது

இந்தத் தானத்தினில் பாவர் நடுவிந்து
எய்திட எட்டேழிற் பாவருற்றால்
இன்னலுடன் மன்னுசுதன் அன்னையுடன் தென்னகரி
லேகுத லுண்மையீ தென்றுணர்வாய். 20

முன்கவியில் கூறப்பட்ட 1,4,7,8,10 ஆகிய ஸ்தானங்களில் சந்திரனுடன் பாபக் கோள்களும் தங்கினால் குழந்தையும், அதன் தாயும் சேர்ந்தே இறந்து போய்விடுவர் இது நிசமான உண்மையாகும்.

இதுவுமது

நன்மதி ராசிக் கடையி லிருக்கவும்
நாலாறு பத்திலிற் பாவர்நண்ண
நல்லோர்விழி யில்லாதேனிற் பொல்லாவினை புல்லிச்சுதன்
நலியுமென் பாய்பொதிகை நற்றவனே. 21

லக்கினத்திற்குப் பன்னிரெண்டில் சந்திரனும், நான்கு, ஆறு, பத்தாம் வீடுகளில் பாபர்தங்கியிருக்க அவர்களையோ, லக்கினத்தையோ சுபக் கிரகங்கள் பார்க்கா விட்டால் பொல்லாத முற்பிறவியால் செய்த தீவினை காரணமாக அப்போது பிறக்கும் குழந்தையானது மரணமடையும் என்று பொதிகைமலையில் தவமிருக்கும் அகத்தியர் பெருமானும் சுப்பிரமணியர் ஆசியால் அருளிச் செய்தவாறே.

மாதாவுடன் மதலைமரணம்

சிங்கந் தகர்மக ரங்கும்பந் தேளிலோர்
ஜென்மத்திற் றேய்மதி சேயெட்டினில்
தேய்மதியைத் தீயர்விழி மேயபெறுந் தாயுடனே
சிறுமன் கருவியாற் றீர்வனென்றார். 22

சிம்மம், விருச்சிகம், மகரம், கும்பம், இவற்றுள் ஒன்று லக்கினமாகி அதில் சந்திரனும், (தேய்பிறைச்சந்திரன்) அவனுக்கு எட்டாமிடத்தில் செவ்வாயும் நிற்க இவ்விருவரையும் பாபக் கோள்கள் பார்த்தால் அப்போது பிறந்த குழந்தையுடன் அதன் தாயும் இறந்து போவாள் என அகத்தியர் உரைத்தனர்.

Koviloor Digital Library

சோதிட ஒயிற் கும்மி

இதுவுமது

சந்திரன் லக்கினத் தெட்டிற்செவ் வாயுஞ்
சனியும் ஈறாறில் நவத்தில் ரவி
தங்கிடவுந் துங்கவர்கள் கண்களினோக் கிங்கில்லையேல்
ஜாதக னாம்பாலன் றான்மரிப்பான். 23

ஜென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் சந்திரனம், செவ்வாய், சனி இருவரும் 12ம் இடத்திலும் 9-ல் சூரியனும் தங்கினினால், சுபக்கிரகங்கள் யாரும் பார்க்காவிட்டால் அப்போது பிறந்த அந்தக் குழந்தையும் இறந்துபோகும் என்று அகத்தியர் உரைத்தபடியே.

இதுவுமது

ஜென்மத்தி லைந்தேழெட் டொன்பதீ ராறினிற்
றேய்மதி பாவ ருடன்கூடி
சேரிடவும் பாரிடமேற் கூறிடுவாய் சீர்மதலை
தென்புரி யிற்குடி தங்கிடுவான். 24

லக்கினம், ஐந்து ஏழு, எட்டு, ஒன்பது, பன்னிரண்டு முதலிய இந்தவீடுகளில் தேய்பிறைச் சந்திரன், பாபக் கோள்களுடன் சேர்ந்திருந்தாலும், பாபர்களால் பார்க்கப்பட்டாலும் அப்போது பிறந்த குழந்தையானது இமய மலையில் தங்கிவாழும் அதாவது இறந்துவிடும் என்றவாறு.

லக்கின பாவகம்

சூர்ப்பகை வென்றோன் துணையடி போற்றித்
துவாதச பாவ முனி வினவ
தொல்லுலகி னில்லுளர்கண் நல்லுதயம் புல்லுபலன்
சொல்லுதுங் கேள்தவ வல்லபனே. 25

சூரபத்மன் என்ற கொடிய அசுரனைச் சம்ஹாரம் செய்த தேவசேனாதிபதியான சுப்பிரமணியர் திருவடிகளில் வணங்கி அகத்தியர் பெருமானானவர் கந்தவேளே இம்மண்ணுலகில் பிறக்கும் குழந்தைகளின் ஜாதகத்தைக் கணித்து துவாதச பாவபலன் என்னும், பன்னிரண்டு வீடுகளின் பலன் உரைக்கும்படியாக அடியவனுக்கு அனுக்கிரஹிக்க வேண்டும்- என்று வேண்ட முருகப் பெருமானும் "சொல்லுகிறேன் கேள் தவத்திற்சிறந்த அகத்தியனே'' என்று கூறினார் என்றவாறு.

மேடவுதயம்

மையினிற் சேயும் மதியுங் கடகத்தில்
வாங்குஞ் சிலையாற்பொன் னேறிடவும்

Koviloor Digital Library

வண்ணமுடற் பொன்நிறமா மின்னுசுதன் நனனிலமாள்
மன்னவ னாமென்று வாய்மலர்வாய். 26

மேஷம் லக்கினமாகி அதில் செவ்வாயும் கடகத்தில் சந்திரனும், தனுசுராசியில் வியாழனுமாகத் தத்தமது ஆட்சிவீடுகளில் தங்கி இருக்க அப்போது பிறந்த ஜாதகன் பொன்போன்ற நிறமுடையவன், மேலும் அவன் பூமியாளும் அரசனாவான் என்று சுப்பிரமணியர் அகத்தியருக்கு இயம்பினர்.

இதுவுமது

மாசறு லக்கின மேடம தாய்நண்டில்
மந்திரியு மகரச் சேய்மருவ
மறைநூல்களி னுறைபல்வகை புரிகேள்வியன் உருமன்மதன்
மண்ணுல காளர சண்ணலென்பாய் 27

மேஷம் லக்கினமாகி பலம்பெற்று இருக்க, சுக்கிரன், புதன், வியாழன், இவர்களில் ஒருவர்கடகத்திலும், செவ்வாய் மகரத்திலும் இருக்கப்பிறந்தவன், வேதசாஸ்திரங்களைக் கற்றறிந்தவனும், மன்மதனைப் போன்ற அழகனும், அரசனைப்போல பெருவாழ்வும் வாழ்பவனாவான்.

இதுவுமது

ஜாதகன் றோன்றிய மேடத்தி னில்மதி
தங்கிட வும்பொன்னும் பார்த்திடவும்
சரதங்களும் புரிரஞ்சிதந் தருமங்கையர் மருவிங்கித
சதமகற் கொப்பெனச் சாற்றிடுவீர். 28

ஜாதகன் பிறந்த லக்கினமானது மேஷமாகி அதில் சந்திரன்நிற்க அவனை வியாழன் பார்த்திட அச்சாதகன் காம லீலாவினோதங்களில் திறமையான அழகிய இளம்பெண்களை மருவி ஆனந்தமயனாய் மன்மதன் போல வாழ்ந்திருப்பான் என அகத்தியருக்கு சிவகுமாரன் அருள் செய்தவாறு.

இதுவுமது

ஆடுதிக்க வைந்தி லொன்பதி லேகுரு
அங்கா ரகன்கேந்தி ரத்திருக்கில்
ஐயமில்லை வையந்தனி லுய்யுந்தினம் மெய்யில்வினை
யாகி யரிஷ்டஞ்செய் யோகனென்பாய். 29

மேஷம் லக்கினமாகி அதற்கு ஐந்து ஒன்பது எனும் திரிகோண இராசிகளில் வியாழனிருக்க அங்காரகனானவன் 1.4.7 10 எனும் கேந்திர வீடுகளில் ஏதேனும் ஒன்றில் இருக்கப் பிறந்தவன் புகழுடன் பெருவாழ்வு வாழ்வான். எனினும் ஊழ்வினை காரணமாக நேர்யாலும் அவதியுறுவான் என்றவாறு.

Koviloor Digital Library

இதுவுமது

இன்னந் தகரி லுதித்திட வும்மேழி
டத்திலே சுங்க னிருந்திடவும்
இழிவானவர் விழிசெய்திட வழியன்றியே யெழிலாளுறு
மென்னுஞ் சுகபோக வீனனென்றார். 30

மேஷம் லக்கினமாகி அதில் சுக்கிரன் தங்கியிருக்க அவரைச் சுபர் பார்க்காது பாபக் கோள்கள் பார்த்தால் தவறான வழியில் பெண்மயக்கம் கொண்டு நோய்களுக்காளாகி உடல்மெலிந்து அவதியுறுவான்.

இதுவுமது

நண்ணு மிலக்கின மேடம தாயதில்
நல்லவ ரன்றிப் பொல்லாதவர்கள்
நாட்டஞ்செய வீட்டிற்குல சேட்டச்சுதர் வாட்டங் கொடு
நலியும் புத்ரயோக னாதனென்பார். 31

மேஷம் லக்கினமாகி அங்கு சுபரல்லாத பாபர்தங்கினாலோ, பார்த்தாலோ வம்சவிருத்தி ஏற்படும்படியான ஆண்வாரிசு ஏற்படாமல் போய்விடும். ஒருவேளை ஆண்குழந்தைகள் பிறந்தாலும், நேர்யுற்று இறந்துபோகவோ அல்லது பைத்தியரோகியாகிப் போகவோ நேரிடும் என்று சுப்பிரமணியர் அகத்தியர் பெருமானுக்கு அருள் புரிந்தவாறு.

இதுவுமது

மேடத்தில் பாவ ரிருக்கவி ரண்டினில்
வெய்யோ ருடன்சனி நின்றிடினும்
மெய்யிற்பிணி கையிற்புணும் நையத்தரும் வையத்தினில்
மேவுளர் வாய்விக்கில் வேந்தனென்பாய். 32

மேஷம் லக்கினமாக அதில் பாபக்கோள்கள் தங்கியிருக்க, இரண்டாம் வீட்டினில் சூரியனும், சனியும் சேர்ந்துநிற்கப் பிறந்த ஜாதகருக்கு உடலில் தீராப்பிணிகளும் கைகளில் புண்களும் ஏற்பட்டுத் துன்புறுத்தும், ஆனால் ஜாதகர் தனது பேச்சுச் சாமர்த்தியத்தால் அரசனைப்போல நடந்து கொள்வார் என்றவாறு.

இடபோதயம்

மாடுதிக்க வதில் மந்திரி யுஞ்சசி
மன்னிடப பாக்கியஞ் சுங்கனேற
மதிவல்லவ னிதிவில்லியன் விதிநல்லவன்ப தியாளொரு
மன்னனொப் பாடுமன வாழ்பவனாம்.

Koviloor Digital Library

ரிஷபம் லக்கினமாக அதில் சுபக்கோள்களில் முதன்மைபெற்ற வியாழன் அமர்ந்திருக்க அவருடன் சந்திரன் கூடியிருக்க ரிஷபலக்கினத்திற்கு ஒன்பதாம் வீடாகிய மகரத்தில் சுக்கிரனிருக்கப்பிறந்த ஜாதகனானவன் சிறந்த மதியூகியும். பலசாலியும், வீரனும், புண்ணியவானும், அரசனுக்கு ஒப்பான வாழ்வ வாழ்பவனுமாகும்.

இதுவுமது

ஓது மெருதி லுதித்திட வேயொரு
மூன்றிற் சுபர்களங் குற்றிடவும்
உறவானவர் பிரிவாகுவர் பெருமாயுளி லுறுபாதியில்
ஓங்கும்பல் துன்பத்தி லேங்கிடுவான். 34

ஜாதகர் ஜெனனமான லக்கினம் ரிஷபமாகி அதற்கு மூன்றாம் இடத்தில் சுபக்கோள்கள் மறைவுபெற்றால், உறவினர்களின் பகையுண்டாகும். மேலும் அந்தஜாதகர் தமது மத்திம ஆயுளுக்கு மேல் பலவித் நோய்களுக்காளாகி வருந்துவார்.

இதுவுமது

நன்றா மிப முதித்திட வேயெழில்
நண்ணிட, வெள்ளிசேய் பார்த்திடவும்
நலமென்புகழ் உலகோங்கிடக் கலியாணநன் குலமங்கையும்
நாசமாகி துஷ்ட நங்கையெய்தும். 35

ரிஷபம் லக்கினமாகி அதற்கு ஏழாம் வீடாகிய விருச்சிகத்தில் சுக்கிரன், செவ்வாய் கூடிநின்று லக்கினத்தைப் பார்த்திட்டால், உலகில் நல்ல புகழுடன் வாழ்வர் எனினும் அவரது மனைவியானவள், இறந்துபோய்விட, பின்பொரு துஷ்டப் பெண்ணை மணந்து துன்புறுவார். அல்லது அவரது மனைவி தாசியாகி அலைந்து திரிவாள்.

இதுவுமது

இலங்கு மிடபத் துதித்திட வேயதி
லிந்துவுஞ் சேயெய் திவர்பார்க்கில்
என்னாளிவ ரொன்னாரினில் மன்னாபகை துன்னும்படி
இதயதாட் டீகமார் தைரியனாம். 36

ரிஷபம் லக்கினமாகி அதில் சந்திரனும் நிற்க, லக்கினத்தைச் செவ்வாய் பார்வை செய்தால், இவன் மிகப் பெரிய வீரனாவான் எதிரிகள் இவனைக்கண்டு அஞ்சுவார்கள். இவன் மனவலிமை படைத்தவனாக எவருக்கும் அஞ்சாமல் வாழ்வான் என்றவாறு.

Koviloor Digital Library

மிதுன உதயம்

தண்டுதிக்க வேழில் மால்புகர் கேந்திரந்
தானிருக் கச்சுபர் பார்த்திடவும்
தரைமீதினி லரசாளுவ நிருதர்சமன் மறையோதிட
சாஸ்திர வல்லனாந் தமிழ்முனியே. 37

ஜாதகரின் ஜென்மலக்கினம் மிதுனமாகி அதற்கு ஏழில் புதனும் 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் ஏதாவது ஒருவீட்டில் சுக்கிரனிருக்க, லக்கினத்தைச் சுபக்கிரகங்கள்நோக்கவும் செய்தால், நிச்சயமாக அவன் அரசாளும் மன்னனாவான், என முருகப்பெருமானருளால் வேதசாஸ்திரங்களில் வல்லவராகிய தமிழ்ப் பெருமுனிவர் அகத்தியர் பெருமான் அருளிச் செய்தவாறே.

இதுவுமது

வீணை யுதிக்க விரண்டுமீ ராறினில்
வெய்யதீ யர்நிற்கப் பார்த்திடவும்
விழிமீதினி லழிநோயெனும் பழியாநிதம் உழல்வானிள
வேந்தனென் றேநீவி ரித்திடுவாய். 38

மிதுனம் லக்கினமாக அதற்கு இரண்டாம் வீடாகிய கடகத்திலோ 12-ஆம் வீடாகிய ரிஷபத்திலோ பாபக் கோள்கள் நின்றாலும், அல்லது இவ்வீடுகளையும், லக்கினத்தையும் பார்த்தாலும், அந்த லக்கினத்தில் பிறந்த ஜாதகனானவன் இளவயதிலேயே கண்களை இழப்பான், அதனால் தன் வாழ்நாளெல்லாம் துன்புறுவான் என்றவாறு.

இதுவும்மது

தக்க மிதுனத் துதித்திட வும்மெட்டில்
தங்கிட வும்பாவர் பார்த்திடவும்
சடமானதில் விடமாகவே படுநோய்பிணி கொடிமூலமுள்
தங்கிய ரோகனிச் சாதகனே. 39

மிதுனம் லக்கினமாக அதற்கு எட்டில் மகரவீட்டில் பாவக்கோள்கள் தங்கிடவும், லக்கினத்தைப் பாபக்கோள்கள் பார்த்திடவும் பிறந்த ஜாதகன் தனது உடலில் விஷரோகம் உடையவனாவான், மேலும் மூலரோகம், வெட்டைநோய் போன்ற வியாதிகளும் உண்டாகி அவஸ்தை யுண்டாகும்.

கடக உதயம்

[illegible] லுதித்திட வாக்கிற்கன் மத்திலும்
நன்மதி தங்கவுங் கண்பார்க்கில்

Koviloor Digital Library

நலமின்ய குலமன்னவன் பலமொன்றிய திலகன்பெரு
நன்னிதி யோன்நீச நேசனாவான். 40

கடகம் ஜென்ம லக்கினமாக லக்கினாதிபதியாகிய சந்திரன் சிம்மத்திலோ, மேஷத்திலோ தங்கினாலும், லக்கினத்தைப் பார்த்தாலும், அச்சாதகன் தான் உதித்த குலத்தில்பெரிய பிரபலனாவான், இருப்பினும் பொருளீட்டும் ஆசையால் தீயவர்களுடன் தொடர்புள்ளவனாகி பெரும் தனவானாவான்.

இதுவுமது

கள்வ னுதிக்க மறையவன் பார்க்கவுங்
கலைமதி கேந்திரந் தானிருக்கக்
கழலுஞ்சுபர் விழிசெய்திட எழிலம்புவி முழுதும்புரி
காவலற் கொப்பெனக் கண்டுரைப்பாய். 41

கடகம் லக்கினமாக லக்கினாதிபதியான சந்திரன் 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் ஒன்றில் தங்கியிருக்க, வியாழபகவானும் லக்கினத்தைப் பார்த்திட்டால், மேலும் இவர்களை சுபர் பார்த்திட்டாலும், இப்பூமிமுழுதும் ஆளக்கூடிய பெரிய அரசனாவான். என அகத்தியர் பெருமான் உரைத்தபடியே

இதுவுமது

அலவ னுதிக்கவீ ராறி லஷ்டமத்தில்
ஆதவ னம்புலி கூடிநிற்கில்
அஞ்சிமனம் பஞ்சைமொழி தஞ்சமென வஞ்சலிசெய்
யரிய மிடியா லரிஷ்டமென்பாய். 42

கடகம் ஜென்ம லக்கினமாக லக்கினத்திற்கு எட்டிலோ, பன்னிரண்டிலோ சூரியனும், சந்திரனும் கூடிநிற்கப்பிறந்த ஜாதகனானவன் கோழையாயிருப்பான். பெருந்தனவந்தர்களுக்கு ஏவல் வேலைகள் செய்துகொண்டு வறியவனாய், ஏழ்மைநிலை அடைந்து வருந்திவாழ்வான்.

சிம்ம உதயம்

சிங்க முதித்ததிற் றீய ரிருக்கவுந்
திவ்ய சுபர்கள்கண் பார்த்திடவும்
செல்வத்திரு வல்வித்தகன் கல்வித்திரு மல்கத்தருஞ்
செகமன்னர்க் கொப்பெனச் செப்பிடுவாய். 43

சிம்மலக்கினத்தில் ஒரு ஜாதகர்பிறந்து இருக்க லக்கினத்தில் தீய கோள்கள் தங்கியிருக்க, லக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்திட்டால், அச்சாதன் தனவானும், விக்வானும், திரண்ட கல்வியம், செல்வமும் கொண்டவனாவான் அரசனைப் போல சுகபோக வாழ்வ வாழ்வான் என்று அகத்தியருக்கு முருகப்பெருமான் திருவருள் மலர்ந்தவாறு.

Koviloor Digital Library

இதுவுமது

ஆளி யுதிக்கவங் காரகன் றங்கிட
அந்தணன் பார்க்க விருந்திடவும்
அரிசூழுல கரசாளுவ திருவும்பல பெருமானிவன்
அண்ணலுக் கன்புசெய் தோங்குவனாம். 44

சிம்மம் லக்கினமாக லக்கினத்தில் செவ்வாய் தங்கியிருக்க, வியாழ பகவான் லக்கினத்தைப்பார்த்தால், பெருந்தனவானாவான், அரசன் போலப் பெருவாழ்வ வாழ்வான், அத்துடன் சிறந்த தெய்வபக்தனுமாவான்.

இதுவுமது

சீய முதிக்க இரண்டுமீ ராறினிற்
றீய ரிருக்கவும் பார்த்திடவும்
தீதில்மன மாதின்னுயிர் சேதந்தாய்ச் சூதுதுயர்
செய்யுந் தெரிவையைச் சேருவனாம். 45

சிம்மம் லக்கினமாகியிருக்க கன்னி கடகத்திலோ தீயகோள்கள் தங்கி இருக்க மேலும், லக்கினத்தையோ 2, 12 ஆம் இடங்களையோ தீய கோள்கள் பார்த்தாலும், அப்போது பிறந்த ஜாதகனானவன் தனது மனைவியை இழப்பான், (மனைவி இறந்துபோவாள்) மேலும் வஞ்சனை, சூது, போன்ற குற்றங்களைப்புரியும் வேறு பெண்ணுடன் கலந்து வாழ்வான்.

இதுவுமது

சீறும் புலிதோன்ற மூன்றிடத் தில்ரவி
சேயைந்திற் பத்தினிற் றேவகுரு
தீயருடன் தூயமதி நேயமதாய் மேயவுமே
சேரும் வறுமை ஜனப்பகையோன். 46

சிம்மம் லக்கினமாக லக்கினத்திற்கு மூன்றில் சூரியன், ஐந்தில் செவ்வாய், பத்தில் வியாழனும் தங்கியிருக்க சந்திரன் பாபக்கோள்களுடன் கூடியிருக்கப் பிறந்தவன் ஏழையாவான், வெகுஜனங்களின் எதிரியுமாவான் என்றவாறு.

கன்னியுதயம்

சுந்தரி யாங்கன்னி தோன்றிடக் கேந்திர
கோணத்தி லேசுபர்பார்த் திருக்கச்
சொல்லால்வெகு பொல்லாரையும் வெல்லுந்தொழில் வல்லானிவன்
தொல்லுல காள்மன்னரீக் கொப்புரைப்பாய். 47

கன்னி ஜென்மலக்கினமாக 1,4,5,7,9,10 முதலிய கேந்திர திரிகோண வீடுகளில் சுபக்கிரங்கள் தங்கினாலும், கேந்திர, கோணங்களிலிருந்து

Koviloor Digital Library

லக்கினத்தைப் பார்த்தாலும், அப்போது பிறந்த ஜாதகனானவன், தனது பேச்சால் எதிரிகளையும் கூட வென்றுவிடக் கூடியவனாவான், சிறந்த பேச்சாளனாவான், ஆதலால் இவன் அரசன் போல வாழ்வான் என்று முருகக்கவுடள் அகத்தியமாமுனிவரிடம் உரைத்தனர்.

இதுவுமது

கன்னியுந் தோன்றக் கதிரவ னுந்தங்கக்
காரியு மேழுறப் பார்த்திடவும்
காதலியர் பூதலமேல் தீதுறவே வேதனையால்
காவலன் சிந்தை கலங்குவனாம். 48

சிறப்புடைய கன்னிலக்கினமாகி அதில் சூரியன்நிற்க அதற்கேழாம் வீடான மீன இராசியில் சனியானவன் அமர்ந்து லக்கினத்தைப் பார்ப்பானாகில் அப்போது பிறந்த ஜாதகனின் மனைவியானவள் நோய்வாய்ப்பட்டுத் துன்புறுவாள் நோயாளியான மனைவியின் பொருட்டு ஜாதகனும் வருந்தியவனாகியிருப்பான்.

இதுவுமது

நங்கை யுதிக்கவும் ஏழிற்பு கர்குஜன்
நண்ணிடத் தாரங்கள் நாசமதாம்
நாடுஞ்சனி கூடுங்கொடி யோடும்பிணி மூடும்நெடு
நாளுமண் டவாதங் கொண்டுழல் வான். 49

கன்னி லக்கினமாக அதற்கு ஏழாம் வீடாகிய மீனத்தில் உச்சம்பெற்று சுக்கிரனும் அவனுடன் செவ்வாயும் கூடி அமர்ந்திருந்திடப் பிறந்த ஜாதகனானவன் களத்திர நாசம் உடையவனாகும். அவன் எத்துனை தாரங்களை மணந்தாலும் இறந்து போய்விடுவார்கள் மேற்படி இராசியில் சனியும் நாடி நின்றால் களத்திர நாசம் ஏற்படுவதுடன் ஜாதகனுக்கு ஸ்திரீரோகமாகிய வெட்டை நோய் காணும் அண்டவாதமும் தோன்றுமாதலால் வெகு துன்பங்களை அனுபவிப்பான் என்றவாறு.

துலாம் உதயம்

கோலுதிக்க நான்கிற் பாம்புஞ் சனிகுஜன்
கூடி யிருக்கினும் பார்த்திடினும்
கோலந்தரும் வேலின்விழி மாலின்பினால் ஆலந்தனைக்
கொள்வதினாற் சிந்தை கலங்குவனாம். 50

துலாம் லக்கினமாக அதற்கு நான்காம்வீட்டில் சனி, செவ்வாய், இராகு, கேதுக்கள் தங்கினாலும் லக்கினம், நான்கு முதலிய வீடுகளைப் பார்த்தாலும் அப்போது பிறந்த ஜாதகன் மனைவி விஷமருந்தி மாண்டுபோவதால் ஜாதகன் துன்பமடைவான்

Koviloor Digital Library

இதுவுமது

செட்டி யுதிக்கப் புகரதி லேறிடச்
சேயுமோ ரேழினிற் றீயர்பார்க்கத்
தேரும்பல கூறும்விப சாரந்தருந் தாரந்தனைச்
சேருவா னென்று மனந்தெளிவாய். 51

துலா லக்கினனம் ஜென்ம லக்கினமாக அதில் சுக்கிரன் ஆட்சிபெற்று இருக்க அதற்கு ஏழாம்வீடாகிய மேஷத்தில் செவ் வாயானவன் ஆட்சிபெற்று இருக்க இவ்விரு வீடுகளையும் தீயகோள்கள் பார்க்கப் பிறந்த ஜாதகனானவன், உடலைவிற்றுப் பிழைத்துவரும் தாசியை மண்ந்து கொள்வான் என்று சுப்பிரமண்யக்கடவுள் அகத்தியருக்கு அருளிச்செய்தனர்.

விருச்சிகவுதயம்

தேளுதிக் கத்திரி கோணத்தி லேகுரு
சென்றிடக் கேந்திரஞ் சேயிருக்கில்
தேகத்தினில் மேகச்சொரி யாகத்தரு சோகத்திலே
சிந்தை கலங்கித் திரிவனென்றார். 52

ஜாதகன் பிறந்த லக்கினம் விருச்சிகமாகி அதற்குத் திாிகோணவீடுகளாகிய 5,9 ஆவது வீடுகளில் ஒன்றில் தேவகுரு வியாழன் தங்கிட, 4,7,10 முதலிய கேந்திரவீடுகளில் ஒன்றில் செவ்வாய் இருந்தால், அந்தஜாதகர், மேகவெட்டை எனும் நோயில் பாதிக்கப்பட்டு கிரந்தியெனும் சொரியுண்டாகிக் கவலையுடன் வீட்டைவிட்டு வெளியேறி பரதேசியாகத்திரிவான் என்று முருகக்கடவுள் கூறினார்.

இதுவுமது

சீறுந் தெறுக்கா லுதிக்கவோ ரேழினிற்
றேய்மதி மந்திரி கண்பார்வை
செய்யாதெனி லையாவினை மெய்யிற்கொடு வையந்தனில்
செல்வ மிழந்து திரிந்துழல்வான் 53

ஜாதகன் ஜெனன லக்கினம் விருச்சிகமாக அதற்கேழாம் வீடான ரிஷபத்தில் தேய்பிறைச் சந்திரன் உச்சம்பெற்று நிற்க அவனைக் குருவானவர் பார்க்கா விட்டால் முற்பிறவி வினை காரணமாக தனது செல்வங்களை யெல்லாம் இழந்து பிச்சைக்காரனாகித் தெருக்களில் அலைந்து திரிவான் என்றவாறு.

இதுவுமது

தேளு மிலக்கினத் தேழிலெட் டொன்பதிற்
றேய்மதி யிருக்கப்பொன் பார்வையன்றித்

Koviloor Digital Library

தீயவர்க ளாயவிழி பாயுமெனி லாயுளையுஞ்
சேதம் நிதிமண மாது தீதாம். 54

ஜாதகர் பிறந்த லக்கினம் விருச்சிகமாக அதற்கு ஏழாம் வீட்டிலோ, ஒன்பதாம் வீட்டிலோ தேய்பிறைச்சந்திரன் இருக்க, அவனைக்குருபார்க்காமல், தீயாபாவிகள் பார்த்தால் அப்போது ஜாதகரின் ஆயுள்குறையும், சொத்துகள் நாசமாவதுடன் மனைவியானவளும் மிகவும் துஷ்டையாக இருப்பாள்.

இதுவுமது

ஐந்திலு மெட்டிலுள் ளோர்களத் தேளினில்
அமைந்திடத் தீயர்கள் பார்த்திடவும்
அப்பாமக னிப்பூமியி லுற்பாதன மற்பாயுளு
மாகப் பெறும்யோக னாமுனியே. 55

ஜாதகர் பிறந்த லக்கினம் விருச்சிகமாகி அதற்கு 5,8 ஆம் இடத்திற்கதிபதிகளான சனி, புதன் இருவரும் லக்கினத்தில் தங்கியிருக்க அவர்களைப் பாபக் கிரகங்கள் பார்த்தால் அந்த ஜாதகனுக்கு அற்பாயுள் ஏற்படும். அத்துடன் அவனது புத்திரர்களும் அற்பாயுளுடன் பிறப்பார்கள் என கும்பமுனிவரான அகத்தியர் அருள்செய்தவாறு.

தனுசு உதயம்

சாப முதிக்கவங் கார கனுமன்ன
சற்குண ராஞ்சுபர் தான்பார்க்கில்
தரைமீதினில் மருவுஞ்செகம் பிரியாதுடன் நிலைசார்மனன்
தன்னையொப் பான்செல்வ தாட்டிகனாம். 56

தனுசு லக்கினம் ஜென் மலக்கினமாகி அதில் செவ்வாய் தங்கியிருக்க அந்த செவ்வாயை சுபஸ்தானங்களில் தங்கிய சுபக்கிரகங்கள் பார்த்தால் அப்போது பிறந்த ஜாதகன் இப்பூமியின் அரசனுக்குச் சமமாக செல்வம் பெற்று வாழ்வான்.

இதுவுமது

சிலையுதிக்க வெட்டிற் புந்திநிற் கப்பாவர்
சேல்விழி பார்க்கத் தெரிவையர்க்குச்
செல்வந்தனை நல்கித்தினம் புல்கத்தரும் பல்வஞ்சினை
சேர்ந்து விஷத்திற் றிரிந்தலைவான். 57

தனுசுலக்கினமாக அதற்கு எட்டாம் வீடான கடகத்தில் புதன்நிற்க லக்கினம், புதன் இருவரையும் பாபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவர்கள் பெரும் தனவான்களின் பள்ளியறைக்குப் பெண்களை அனுப்பிவைக்கும் ஈனத்தொழில் செய்து வாழ்வான்.

Koviloor Digital Library

மகர உதயம்

மானுதிக் கவதிற் பாம்பு மதியேழில்
மந்தனொன் பானிலீ ராறில்ரவி
மன்னிடவு முன்னவர்கள் துன்னிடவு மின்னலுடன்
மாநிலத் திற்சஞ்ச லத்தனென்பாய். 58

ஜாதகர் பிறந்த லக்கினம் மகரமாகி அதில் இராகுவோ, கேதுவோ இருக்க ஏழாம் வீட்டில் சந்திரனும் ஒன்பதாம் வீட்டில் சனியும், பன்னிரண்டாம் வீட்டில் சூரியனுமாக நின்றிருக்க தனது குலமுன்னவர்கள் செய்த பாவத்தால் துன்பமடைந்து தேசாந்திரியாக அலைவான், இது பிதுர்சாபத்தினாலும் உண்டாகும் என்றவாறு.

இதுவுமது

மகர முதிக்கவுஞ் சேயு மதியேழில்
மங்கலம் பெண்ணுள ளிப்பரிசாய்
மந்தனுடன் சந்திரனுந் தொந்தமெனிற் சுந்தரியை
வதுவைசெய் துநாசமன்னோ னென்பாய். 59

ஜாதகன் பிறந்த லக்கினம் மகரமாகி அதற்கு ஏழாம் வீடாகிய கடகத்தில் சந்திரனுடன் செவ்வாய் சேர்ந்திருந்தால் நல்ல மனைவியை அடைந்து நீண்ட ஆயுளைப் பெறுவான் அதேவேளை மகரத்திற்கு ஏழாம் வீடாகிய கடகத்தில் ஆட்சிபெற்ற சந்திரனுடன் சனிக் கிரகமானது சேர்ந்து தங்கினால், மாங்கல்ய பாக்கியம் இல்லாத மனைவியை அடைந்து இறந்து போய்விடுவான் என்று பொதிகைமலைச் சித்தரான அகத்தியருக்குச் சிவன்மகன் அருள்புரிந்தவாறு.

கும்போதயம்

கும்ப முதயயோ ராறிற்பு தன்புகர்
கூடிடத் தேய்மதி பார்த்திடவுங்
கொடிதாகிய நெடுவேதனை யுடலேறியே படுவான்சதுர்
கூறுமா றாண்டினில் அரிஷ்டன் என்பாய். 60

கும்பம் லக்கினமாக அதற்கு ஆறாம் வீடான கடகத்தில் புதனும் சுக்கிரனும் கூடி அமர்ந்திருக்க அவர்களைத் தேய்பிறைச்சந்திரன் பார்த்திட பிறந்த ஜாதகனானவன் கொடுமையான நோயினால் அவதியுற்று தனது இருபத்து நான்காம் வயதில் மாண்டுபோவான் என்று குமரக்கடவுள் அகத்தியரிடம் உரைத்தனரே.

இதுவுமது

சாலுதிக்க பண்புற் பாவர்தங் கட்பார்க்கச்
சன்மாதி யெட்டினிற் றங்கிடவும்

Koviloor Digital Library

தாய்பெற்றிடு சேய்குற்றுடல் நோய்பற்றியே மாய்வுற்றெனத்
தங்கும் பலபல துன்பனென் பாய். 61

கும்பம் லக்கினமாக அதற்கு இரண்டாம் வீடாகிய மீனத்தில் பாபக்கிரகங்கள் தங்கினாலோ லக்கினாதிபதியான சனி கும்பத்திற்கு எட்டாம் வீடாகிய கன்னியில் தங்கினாலும், இவன் தாயார் இவன் பிறந்ததும் இறந்து போய்விடுவான். எனவே பலபலதுன்பங்களுக்கு ஆளாகி வாழ்வான்.

மீனோதயம்

மீனுதிக்க வேழில் வேந்த னிருக்கவும்
வெய்யோர்கள் நான்குறப் பார்த்திடவும்
வேட்டுமனை யாட்டுடிபல சேட்டையினால் ஓட்டிவிடும்
வேந்த னிவன்பல தாரனென்றார். 62

மீனம் லக்கினமாகி அதற்கு ஏழாம் வீடாகிய கன்னி ராசியில், சூரியன் சந்திரன், வியாழன் இவர்களில் ஒருவர் தங்கியிருக்க பாபக்கிரகங்கள் நான்காம் வீட்டில் தங்கினாலும் அல்லது, 4,7 வது வீடுகளைப் பார்த்திடவும் பிறந்த ஜாதகன் பலதாரங்களை மணப்பான், ஆனால் அவன் மனைவியர் அவனை விட்டு நீங்கிச் சென்றுவிடுவர் எனக் குமரக்கடவுள் உரைத்தபடியே.

இதுவுமது

கயலு மிலக்கின மூன்றிற் கதிர்பத்திற்
கலைமதி நின்றிடக் கணுவறினும்
காசினியில் வேசிமினா ளாசையவள் பூசலினால்
கனக மிழந்து மரிஷ்டெய்து வான். 63

மீனம் லக்கினத்தில் ஒருவர் ஜெனனமாகியிருந்தால் அவரது ஜென்மலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில், சூரியனும், பத்தாம் வீட்டில் சந்திரனும் தங்கினாலும் அல்லது 3.,10 ஆம் வீடுகளைப் பார்த்தாலும் ஜாதகனானவன் வேசிகளின் மேல் கொண்ட ஆசையினால் தனது பொன், முதலான செல்வங்களை இழந்து, துன்பப்பட்டு இறந்தும் போவான் என்றவாறு.

இரண்டாம் பாவகம்

ஆறுமுகவ ரடியினை யைத் தாழ்ந்தும்
அகத்தியரும் ரண்டாம் பாவபலன்
அருளெனவும் பொருளியல்பு தெருளுறவே குருமுனிவற்
கஞ்செவி வாய்க்கமு தாய்ப் புகட்டும். 64

ஆறுமுகக் கவுடளான செந்திலாண்டவர் திருவடிகளை பொதிகைமலைச் சித்தரான அகத்தியர் பெருமான் தனது திருமுடியானது குமாக்கட வுளின் பாதத்தில்

Koviloor Digital Library

படும்படியாக வணங்கி ஜாதகத்தின் இரண்டாம் பாவபலன் கூறும்படி உலகமக்களின் பொருட்டு வேண்டிக் கொள்ள சுப்பிரமணியரும் உயர்ந்த கருத்துகளையும் எளிமையாகப் புரியும்படி அகத்தியருக்குச் செவியமுதமென மொழிவாராயினர்.

தனம்

மூன்றிடத் தில்வெயில் ஐந்திற் குருமதி
மொய்த்திட வொன்பதிவ் வாறிந்துபொன்
முதுசூரனொன் பதிலேயுறச் சிதையாபெரு நிதிஜாதகன்
முருகர் முனிக்கு அருள்புரிந்தார். 65

காயும் கதிரவனென்னும் சூரியனானவன் லக்கினத்திற்கு மூன்றாம் இடத்திலேயும் சந்திரனும், குருவும் ஒன்பதிலும் தங்கினாலும், அல்லது சூரியனுடன் சந்திரன், வியாழன் கூடி ஒன்பதிலே தங்கினாலும், எந்நாளும் குறைவுபடாத செல்வம் அந்த ஜாதகனுக்கு வாய்த்திருக்கும் என முருகப்பெருமான் அகத்தியருக்கு உரைத்தபடியே.

ஆயிரம் பொன்

ஜென்மத் திருக்கலா பாதி யிரண்டுளன்
லாபத்தி லேறஜென் மாதிபதி
செலகேந்திர மிலகப்புகர் நிலைநோக்கிட விலகாதிரு
செவ்வமோ ராயிரந் தேடுவனாம். 66

இரண்டாமிடத்திற்கு அதிபதியானவன் லாபஸ்தானமாகிய 11 ஆம் இடத்திற் 11ஆம் இடத்திற்கு அதிபதி லக்கினத்திலும் நிற்க, லக்கினதிபதி யானவனன் ஜலராயியாகிய கேந்திரவீடுகளில் ஏதானும் ஒன்றில் தங்கிடவும், சுக்கிரனானவன் லக்கினாதிபதி, லாபாதிபதி, தானதிபதி, ஆகிய மூவரையுமோ, ஒருவரையோ பார்த்தாலும் அப்போதுபிறந்த ஜாதகன் அழிவுறாத ஆயிரம்பொன் தேடுவான்.

மூவாயிரம்பொன்

தேறு மிரண்டோன் சுபவர்க்க மாகத்
திரிகோண கேந்திரச் சுபவர்க்கமாய்
தியோர்விழி செய்யாரெனில் ஐயாவிவன் வையந்தனில்
தேடும்மூ வாயிரம் செம்பொன்னுளான். 67

இரண்டமிடாத்திற்கு அதிபதியானவன் லக்கினத்திலிருந்து 1,4,5,7,9,10 எனும் கேந்திர திரிகோண வீடுகளில், பகைவரல்லாதார் வீட்டில், பலம் பெற்று (ஆட்சி உச்சம் நட்புவீடுகள் சுபர்பார்வை) நின்றுவிட்டால் அச்சாதகனானவன் உலகில்மிகச் சிறப்படன் மூவாயிரம் பொன் செல்வம் சேர்த்து இன்புற்று வாழ்வோன்.

Koviloor Digital Library

வெகுதனம்

கார்முக மீனிற் சனிகுஜன் நிற்கமான்
கரகத்தில் பற்றுளர் நிற்கநோக்கக்
கலிமுங்கிய பலனொன்றிடில் விலகும்படி நலமொப்பிடு
காசினி யில்வெகு கனகமுள்ளான். 68

மீன இராசியில் சனி, செவ்வாய் சேர்ந்து நிற்க, மகரம், கும்பம் ஆகிய இரண்டு இராசிகளில் மற்ற சுபக்கிரகங்கள் நின்றாலும், சனி, செவ்வாயைப் பார்த்தாலும், அப்போது பிறந்த ஜாதகனானவன் இப்பூமியில் பெரும் பொன்னும், பொருளும் சேர்த்து வாழ்வான்.

இதுவுமது

அம்புலி ஜென்மத்தி லாறேழெட் டிற்புக
ர்ந்தணன் புந்திபன் னொன்றுபத்தில்
அத்திசையில் பற்றுளர்க ளூற்றிடவும் அத்தமிலா
தாடகம் பெற்றுள ஜாதகனே. 69

ஜென்ம லக்கினத்தில் சந்திரனும் ஆறு, ஏழு, எட்டில் சுக்கிரன், வியாழன் நிற்கவும், புதனானவன் 10, 11 ஆவது வீடுகளில் தங்கிடவும், இவ்வீடுகளைச் சுபக்கிரகங்கள் பார்த்திடப் பிறந்த ஜாதகன் குறைவிலாத செல்வம் பெற்று தனவானாய் வாழ்வான்.

வித்துவான்

ஆதவன் மால்மதி ரண்டிடத் தாயினும்
அன்றிச் சனிமா லடைந்திடினும்
அலங்காரமே சொலுங்காவியந் தெலுங்குந்தமிழ் இலங்கும்பிர
சங்கத்தி லானந்த னாகுவனாம். 70

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் இடத்தில் சூரியன் சந்திரன், புதன் இவர்கள் தங்கிட்டாலும், அல்லது புதனும், சனியும்சேர்ந்திருந்தாலும், பெருங்கவிஞனும், தமிழ் மொழி மட்டுமன்றித் தெலுங்கு அன்னியபாஷைகளில் தேர்ச்சிபெற்றும், சங்கத்தில் பெரும் புலவனாகவும் இருப்பான்.

வெகு வித்தை

மதிரவி சேய்புகர் வாக்கினி லெய்தினும்
மந்திரி மாலரவி வாய்த்திடினும்
வாணிமகள் பேணிமனத் தூணியருட் காணிய்தாய்
வாய்த்தகும் வெகுவித்தை வல்லவனாம். 71

Koviloor Digital Library

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய, சுக்கிரன், இவர்கள் கூடியிருந்தாலும் அல்லது சூரியன், புதன், வியாழன் கூடியிருந்தாலும் கலைவாணியானவள் அந்த ஜாதகனின் திருநாவில் குடியேறி இருப்பாள் எனவே ஜாதகன் வித்தைகள் பலகற்றும், பெரும் வித்தகனாவான்.

பிரசங்கி

வாக்குநா தன்புதன் கூடிநான் கெய்தினும்
மாலுஞ்செென் மாதிகேந்திர கோணமாய்
வருகிற்பிர சங்கத்தினிற் பெருவிப்பிர பலனாகுவன்
வாணி கடாட்ச விதரணனே. 72

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதியும், புதனும், கூடி லக்கினத்திற்கு நான்காமிடத்தில் தங்கினாலும், லக்கினாதிபதியும், புதனும்கூடி, 1,4,7,10 எனும் கேந்திரஸ்தானங்களிலோ, 1,5,9 எனும் திரிகோணஸ்தானங்களிலோ தங்கினாலும், அப்படியான லக்கினத்திற் பிறந்த ஜாதகனின் திருநாவில் கலைவாணி வாசம் செய்வாள் ஜாதகனிம் வாக்கு வன்மையுடையவனாகி பிரபலமான பிரசங்கியாவான், மேதையுமாவான்.

சங்கீத வித்தை

கேந்திரத் திற்புகர் புந்தியுங் கூடிடக்
கேடுறுந் தீயர்பார்க் காதிருக்கில்
கிஞ்சுகவாய் வஞ்சியர்கள் ரஞ்சிதனாம் செஞ்சொலினால்
கீத பிரசங்க ஜாதகனாம். 73

லக்கினத்திலிருந்து எண்ணிட 1,4,7,10 எனும் கேந்திரஸ்தானங்களில், புதனும் சுக்கிரனும் கூடியிருந்து பாவிகளின் பார்வைபெறாமல், சுபபார்வைபெற்றுத் தங்கி இருக்கப் பிறந்தவன் பெண்களால் விரும்பப்படுவான். இனிமையான குரலுடையவன், சங்கீதப்புலவனாவான். இவனது இசைக்கு உலகமே மயங்கிக்கிடக்கும் என்றவாறு.

கீத வித்வான்

மந்தன் குஜன்கூடி வாக்கினி லெய்தினும்
மால்புகர் சேர்ந்து மருவிடினும்
மானார்விழி தேனார்மொழி யானாருடன் கானத்தொழில்
வல்லவ னென்றுரை மாமுனியே. 74

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டில், சனி, செவ்வாய் கூடிநின்றாலும், புதன், சுக்கிரன் சேர்ந்து தங்கினாலும் அல்லது சனி செவ்வாய் இருவரையும் பார்த்தாலும், நிறையப் பெண்பாடகிகளுடன் தானும் சேர்ந்து பாடி

Koviloor Digital Library

இசைக்கச்சேரிகள் செய்து வாழ்வான் என்று முருகப்பெருமான் அகத்திய மாமுனிவரிடம் உரைத்தனர்.

மாந்திரீகன்

மாந்தியோ ரைந்தில் மருவிட வும்வாக்கில்
மாநாகந் துன்னமந் திரியும் பார்க்க
மாதவனே பூதலமே லோதிடுமிச் சாதகனும்
மாந்தி ரீயவித்தை வல்லனென்பாய். 75

பெருந் தவசீலனாகிய அகத்தியனே கேள், ஒருஜாதகன் ஜனனமான லக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டில் மாந்தியும், இரண்டாம் வீட்டில், இராகு அல்லது கேது தங்கிடவும் இவ்வீடுகளை வியாழனானவன் பார்த்திடவும் செய்தால் அச்சாதகன் மாந்திரீகவாதியாவான் இவனிடத்தில் தேவதைகள் எல்லாம் கட்டுப்பட்டிருக்கும் என கந்தக்கடவுள் அருளினர்.

தனாதிபதி

லக்கினத் தில்லக்கி னாதிபதி ரண்டாம்
ராசி முதலடை வாகநவ
நற்கிரகம் நிற்கநிறை புக்கிடவே தக்கபுகழ்
ராஜ தனாதிய னாய்ப்பெறுவான். 76

லக்கினத்தில் லக்கினாதிபதி ஆட்சிபெற்றும், லக்கினம், இரண்டாமிடம் முதலான இவ்விரு வீடுகளுக்குள் மற்ற கிரகங்கள் எல்லாம் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகன் பெரும் புகழ் பெற்று, செல்வச் செழிப்போடு தனவானாகி இன்புற்று வாழ்வான் என்றபடியே.

பிரபந்தன்

இந்துவுக் குப்பத்தில் மால்புகர் கூடி
யிருந்திட வும்மவர் பார்த்திடவும்
எவரும்புகழ் நவிலும்படி கவியும்பல புவிமீதுள
மிசைக்கும் பிரபந்த வல்லவனாம். 77

ஜாதகன் ஒருவன் பிறந்த ஜாதகத்தில் சந்திரன் நின்ற வீட்டிற்குப் பத்தாம் வீட்டில், புதனும், சுக்கிரனும் கூடிநின்றாலும், அவர்களால் சந்திரனுக்குப் பத்தாம் வீடானது பார்க்கப் பட்டாலும் உலகில் உள்ளோர் பாராட்டும் படியாகப் புலமை பெற்று வாழ்வான் பெரும் கவிஞனும், இசைப்பாடகனும் ஆழ்வார்களால் அருளப்பெற்ற நாலாயிரம் திவ்யப் பிரபந்தப் பாடல்களை இசைத்துப் புகழ்பெற்று வாழ்வான். எனக்குமரக்கடவுள் அருளியபடியே.

Koviloor Digital Library

அளவிறந்த தனம்

பூண்ட பதிஜென்மத் தானுமே ழெட்டினிற்
புந்தி புகர்குருவி ருக்கமற்றோர்
புரிவையமுன் னொருபத்தினி அருளுதயத் திருப்பாரெனில்
புகலவொண் ணாதனத் தேயிருப்பான். 78

ஜாதகர் பிறந்த லக்கினாதிபதியானவன் 7,8 ஆம் வீட்டிலிருக்க, புதனும் சுக்கிரனும், வியாழனும் கூடி 8ஆம் வீட்டினில் தங்கிடவும் 10ஆம் வீட்டில் மற்ற கிரகங்கள் தங்கியிருக்கப் பெரும்செல்வம் சேர்ப்பான், இவனிடம் உள்ள செல்வச் செழிப்பானது எவராலும் உரைக்கமுடியாது அத்துனை பெரும் தனவான் என்ற பெயர் பெறுவான் என்று சுப்பிரமணியக் கடவுள் குருமுனிக்கு உரைத்தபடியே.

மூன்றாம் பாவகபலன்

சிற்பரன் மைந்தன் திருவடி போற்றிசெந்
தமிழ்முனி சோதரத் தானபலன்
திருவாய்மலர்ந் தருளாயென முருகன்முனி தெருளாயிடச்
செப்புவர் மெய்யன்புடன் மெய்ப்பொருளே. 79

பரம்பொருளாகிய சிவபெருமான் நெற்றிக்கண்ணில் உதித்த செவ்வேளாகிய குமரக்கடவுளின் திருவடிக் கமலங்களை வணங்கித் தமிழ்பெரும் முனிவராகிய அகத்தியர் சகோதர ஸ்தானமாகிய மூன்றாவது பாவபலன் கூறியருளுமாறு தெண்டனிட்டுவினவ. தமிழ் முனிக்கு அதன் மெய்ப் பொருளைக் குமரகுருபரன் கூறுவாராயினர்.

சோதரர்

துங்கம தாய்மூன்றிற் சுங்க னரவுடன்
துன்னி யிருந்திடிற் சாதகற்குச்
சோதருநல் லாதரவாய் சூதுமுகைக் காதலியர்
தோன்றி யுடன்சுகித் தேயிருப்பான். 80

ஜாதகனின் ஜென்மலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில் சுக்கிரன், இராகு, கேதுக்களுடன் சேர்ந்து தங்கியிருக்க அவனது சகோதார்கள் ஆதரவுடன் நடந்து கொள்வார்கள், மேலும் பல பெண்களை மருவிக்கலந்து ஆனந்த மயனாய் வாழ்ந்திருப்பான் என்றவாறு.

இதுவுமது

இன்னொரு மூன்றுக் கிறைவனோ ரேழினில்
எய்திட ய் பாவர் வியத்திருக்கில்

Koviloor Digital Library

ஏகதுணை யாகிவரும் பாகுமொழி தோகைமினாள்
ஏற்பவி லங்குமிச் சாதகனே. 81

ஜாதகன் பிறந்தலக்கினத்திற்கு மூன்றாம் இடத்திற்கு அதிபதியானகிரகம் ஏழாம் வீட்டில் தங்கிடவும், தீய கிரகங்கள் பன்னிரண்டாம் வீட்டில் தங்கிடவும் நேர்திடில் ஜாதகனுக்கு ஒரேயொரு பெண் சகோதரி மட்டும் இருப்பாள் என்றவாறு.

இதுவுமது

ஜாதகன் மூன்றுக் கதிபதி மூன்றினில்
தங்கிட வுங்குரு தொங்கிடவும்
தண்டமிழ்சீர் கொண்டிவனுக் குண்டுமிரு தம்பியர்கள்
சண்டப்பிர சண்டனென் றோதுவரால். 82

ஜாதகரின் ஜென்ம லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டின் அதிபதி மூன்றாம் வீட்டிலேயே ஆட்சிபெற்றிட அவனுக்குப் பன்னிரண்டாம்வீட்டில் அதாவது லக்கினத்திற்கு இரண்டாம்வீட்டில் குருபகவான் வீற்றிருக்கவும் செய்தால், அச்சாதகனுக்குப் பராக்கிரமம் மிகுந்த இரண்டு தம்பிமார்கள் இருப்பார்கள் என்றவாறு.

இதுவுமது

ஓதுவது மூன்றுக் கிறைமதி மால்புகர்
உற்றிடக் காரகன் பற்றிடவும்
ஓங்குதுணை நான்குளதில் தேங்குழலி யாங்கிருவர்
உண்டென்று கண்டுகொள் ளுத்தமனே. 83

ஜாதகன் பிறந்தலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில் சந்திரன், புதன், சுக்கிரனுடன் சகோதரகாரகனாகிய செவ்வாயும் சேர்ந்து தங்கினால் அவனுடன் பிறந்தவர்கள் நான்குபேராகும் என்றும், அதில் இரண்டு பெண்களும் உண்டென்று குமரகுரு அருளியவாறு.

இதுவுமது

உத்தம சோதரத் தானத்திற் சுன்சிகி
*ஊதியத் திற்றூதன் சுங்கனுறில்
உற்றதுணை யற்றவனும் பெற்றிடுவன் சேட [illegible]ர்களை
ஓங்குவர் பூங்கொடி யென்றுரை[illegible]ாய். 84

ஜென்மலக்கினத்திற்கு மூன்றாம்வீட்டில் சனியுடன் கேதுதங்க, லாபஸ்தானமாகிய 11ஆம் வீட்டில் சுக்கிரனுடன், புதனும் சேர்ந்து தங்கிடப் பிறந்த

*ஊதியம் = இலாபம்

Koviloor Digital Library

ஜாதகனுக்கு இரண்டு அண்ணன் மார் உண்டென்றாலும், அவர்களால் ஜாதகனுக்கு உதவியிருக்காது என்றும் மேலும் இரண்டு பெண் சகோதரிகள் உண்டென்றும் அவர்களால் ஜாதகனுக்கு லாபம் உண்டென்றும் அழகுக்குமரன் அகத்தியருக்கு அருளிச்செய்தனர்.

இதுவுமது

என்று முனிவனே லக்கினத் திற்குஜர்க்
காறினி லேசுபர் ஏறிடினும்
எம்பியர்க ளிம்புடனே சம்ப்ரமதா யிம்பரிலே
ழென்றே அறுமுகன் செப்பினரால். 85

ஜாதகன் ஒருவனின் பிறந்த லக்கினத்திற்கோ, செவ்வாய்க்கோ ஆறாம் வீட்டில் சுபக்கிரகங்கள் தங்கியிருந்தால் அவனுக்கு இம்மண்ணுலகில் துணையாக ஏழு தம்பிகள் இருப்பார்கள் என்று ஆறுமுகக்கடவுள் அகத்தியரிடம் உரைத்தபடியே.

இதுவுமது

செப்புவ ரிப்பலன் அற்பமென் பர்ஜென்ம
தீரன்பொன் சேய்கேந்த்ர கோணமதில்
சேரிடவுங் கூறிடுவோர் ஆறுடனே நேரிடுமிச்
செல்வனுக் குத்துணை தேர்ந்திடுவாய். 86

ஜென்ம லக்கினத்திற்கு மூன்றாம் இடத்தில் வியாழனும், கேந்திர, திரிகோண வீடுகளான 1,4,5,7,9,10. ஆம் இடங்களில் ஒன்றில் செவ்வாய் தங்கிடவும் பிறந்த ஜாதகனுக்கு உடன்பிறந்த சகோதரர்கள் ஆறுபேர் இருப்பார்கள் என்றவாறு.

இதுவுமது

தேறுஞ்சென் மாதிமூன் றாதியங் காரகன்
சென்றிடங் கோட்டகை யார்சீராய்
சேருந்துணை கூறுங்கணக் கேறுங்குணம் வீரந்திறம்
செப்பிட வுந்தப்பி டாதென்றனர். 87

ஜாதகரின் ஜென்மலக்கினம் முதல் மூன்றாம் வீடுவரை செவ்வாய் மூன்றிலும், மற்ற கிரகங்கள் 1,2,3 ஆம் வீடுகளிலும் பரவியிருக்க அச்சாதகனுக்கு அனேகர் உடன் பிற ார்கள் என்றும், கணக்கிற்குமேல் அதிகசகோதரர் என்று அறியும் படியாக.

பூதணம்

லக்கினம் மூன்றுபன் னொன்றுக் கிறையவர்
நண்ணிட வும்பெலன் பெற்றிடவும்

Koviloor Digital Library

நலமுந்தரு குலமுந்திரு இலகும்பணி ப்லவுங்கொடு
நாளு மலங்கார பூஷணனாம். 88.

ஜாதகன் ஒருவனின் ஜென்மலக்கினத்தின் அதிபதியுடன், மூன்று, பதினொன்றாம் வீடுகளின் அதிபதிகள். கூடி ஒருவீட்டில் பலம் பெற்றுத்தங்கியிருந்தால், வீர, தீர பராக்கிரமத்துடன் குலத்தின்தலைவனாகவும் எந்நாளும் அலங்காரங்களுடன் வாழ்வான்.

இதுவுமது ஆபரணம்

இந்தநற் றானத்தி லெய்திய கோட்களுக்
கேற்ற நிரந்தர மிலகும்பணி
இவனுக்குறும் நவரத்தின மவிர்நற்கலன் குவைபெற்றன
னென்று மலங்கார பூஷணனே 89

சுபஸ்தானங்களில் தங்கிய கோள்களுடன் முன்கவியில் கூறிய கோட்களுக்குக் கூறப்பட்ட ஆபரணங்களும், ரத்தினங்களும், பொன்னும், குவிந்து கிடக்கும். பலவித ஆபரனங்களைப் பூண்டு ஜாதகனும் அலங்காரத்துடன் திகழ்வான்.

புண்ணிய கதை கேட்பவன்

பூத்தஜென் மாதிமூன் றைந்துலா பம்நவப்
புனிதர் சுபவர்க்கம் புக்கிடினும்
புரமூன்றினை யெரிசெய்திடும் பெருமானருள் மருவும்பல
புண்ணிய நற்கதை கேட்பவவனாம். 90

ஜாதகனின் ஜென்மலக்கினத்தின் அதிபதி, 3,5,11, ல் தங்கிடவும் மற்றகோள்கள் சுபஸ்தானங்களில் தங்கினாலும் ஜாதகனானவன் திரிபுர தகனம் செய்தவனான சிவப்பரம் பொருளின் திவ்வியத் திருக்கதைகளைக் கேட்பதில் ஆனந்தம் அடைவான்.

நான்காம் பாவக பலன்

குழகன் கழலணி கோக னகப்பதங்
கும்பிட்டு நான்கா மிடப் பலனைக்
கூறுகென ஏறுமயில் ஆறுமுகன் சீருடனே
கும்ப முனிக்கருள் செய்குவரால். 91

கும்பமுனி யெனும் அகத்தியர் பெருமானானவர், அழகிய வீரக்கழல் களைஅணிந்த ஏறுமயில் வாகனனான முருகப்பெருமானின் திருவடிகள் தம் சிரசின் உச்சிதொடும்படி வீழ்ந்து வணங்கி நான்காம் இடத்தின் பலன்கள் கேட்க குமாரக்கடவுள் கூறலானார்.

Koviloor Digital Library

மாதா தீர்க்காயுள்

நான்கில்நான் காதியுங் கேந்திரத் தில்மதி
நண்ணிடவும் சுபர் பார்த்திடவும்
நலமெய்திய சிலைநன்னுதல் திலகீன்றுதல் முலையுண்வளர்
நற்சுதன் மாதுதீர்க் காயுளென்றார். 92

ஒருவரின் ஜாதகத்தில் லக்கினத்திற்கு நான்காமிடத்தின் அதிபதியானவன் நான்காம்வீட்டில் ஆட்சி பெற்றிருக்க சந்திரன் 1,4,7,10, எனும் கேந்திரஸ்தானங்களில் ஒன்றில் தங்கிடவும் இவர்களைச்சுபக் கிரகங்கள் பார்த்தால் ஜாதகனும், அவன்தாயாரும் தீர்க்காயுள்பெறுவர்.

தீர்க்காயுள்

கேந்திரத் திற்புகர் நிற்கநான் காதியுங்
கிட்டிச் சுபவர்க்கம் பெற்றிடினும்
கிளர்மதியின் ஒளிவதனக் கிளிமொழியாட் குளவயது
கிருபையாய்த் தீர்க்கமென் றோதிடுவாய். 93

ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் வீட்டதிபதியானவன், சுபர்வீடுகளில் தங்கியிருக்கவும் 1,4,7,10 எனும் கேந்திரவீடுகளில் ஒன்றில் சுக்கிரன் நிற்கப்பிறந்தவன் சந்திரன் போன்ற குளிர்ச்சியான முகமும், கொஞ்சுமொழியுங் கொண்ட தாயானவள் நீண்டகாலம் ஆயுள் பெற்று வாழ்ந்திடுவாள், எனக் குமரவேள் உரைத்தபடியே.

இதுவுமது

ஓதும்நான் காதியும் உச்ச மாதிபெற்றும்
ஒண்மதி கேந்திரத் துற்றிடினும்
உறவும்வெகு பிரியத்துடன் சிறுவன்றனைப் பெறுநாயகிக்
குண்டுதீர்க் காயுளென் றுள்ளுணர்வாய். 94

ஜென்மலக்கினத்திற்கு நான்காம் வீட்டதிபதி உச்சம் பெற்றுநிற்க, சந்திரன் கேந்திர வீடுகளில் ஒன்றில் நிற்கப்பிறந்த ஜாதகனின் தாயார் தீர்க்காயுளுடன் வாழ்வாள்

ரோகமுடையவள்

அ[illegible]மத் திற்பாக்கிய யாதிநான் காதிய
[illegible]ரண்டிட வுந்தீயோர் கண்டிடவும்
அறைவாய்தவ மறையோர்திரு நிறைசெல்வியி னுறுமாயுளும்
அதிகமா மங்கநோய் தங்கினளாம். 95

Koviloor Digital Library

ஜென்ம லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் 4, 9 ஆம் இடங்களின் அதிபதிகள் தங்கியிருக்க அவர்களைப் பாபக்கோள்கள் பார்வை செய்திடப் பிறந்தவனின் தவத்தினால் பிறந்த லக்ஷ்மி கடாக்ஷம் பொருந்திய அன்னையானவளுக்கு நிறைஆயுள் உண்டென்றாலும் உடலில் ஏதேனும் ஒரு நோய் இருந்து துன்புறுத்திவரும் என்றவாறு.

கலக முடையவள்

சேய்ம்நான் காதிபன் கூடியே நான்கினிற்
சென்றிட வீரைந்தில் நின்றிடினும்
சீருங்கெட பேரும்படக் கூறும்பல கோரந்தினஞ்
செய்யுங் கலகியாய்ச் செப்புமென்றார். 96

ஜாதகன் ஒருவன் பிறந்த லக்கினத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதியாகியகிரகம் நான்காம் வீட்டிலேயே ஆட்சிவரவும் அவனுடன் செவ்வாயானவன் கூடியிருந்தாலும் அல்லது நான்காமிடத்தின் அதிபதியும், செவ்வாயும் கூடி பத்தாம்வீட்டில் தங்கினாலும் ஜாதகரின் தாயானவள் ஊராரின் முன் தீயபெயர்பெற்றவளாக கலகங்கள் செய்து வாழ்வாள் என்றவாறு.

பாது காப்பவள்

பொன்னும்நான் காதியுங் கூடிநான் கெய்திடக்
கேந்தி ரத்திலன்னோர் புக்கிடவும்
பொறுமைக்குணத் தருமத்தினள் அருமைத்தொழில் பெறுமக்களைப்
பாதுகாக் கும்புண்ய மாதென் சொலாய். 97

ஜென்ம லக்கினத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதியும், வியாழனும் கூடிக் கேந்திர வீடுகளாகிய 1,4,7,10 முதலிய இடங்களில் ஏதேனும் ஒன்றில் தங்கினால் அப்போது பிறந்த ஜாதகனின் தாயானாவள் பொறுமையானவள், தர்மசிந்தனையுடையவள், தனது குழந்தைகள் நல்ல தொழில்களைச்செய்யும்படி உருவாக்கிப் பாதுகாக்கக் கூடிய புண்ணியமான தாயாவாள் என்று குமரக்கடவுள் திருவாய் மலர்ந்தபடி.

வாகனம்

பத்துமைந் தொன்பதுள் ளோர்கள் நான்கெய்திடப்
பாவ வர்க்கமில் லாதாயிருக்கப்
பரிமீதினுங் கரிமீதினும் வருஜாதக னுறுவாகனம்
பற்றுவா னென்று பகர்ந்திடுவாய். 98

ஜாதகன் ஒருவனின் ஜென்மலக்கித்திற்கு 10,9 ஆம்வீடுகளின் அதிபதிகள் நான்காம் வீட்டில் நின்றிருந்து பாபவர்க்கங்களை அடையாமல் சுப

Koviloor Digital Library

வர்க்கம் சேர்ந்திருக்க யானை குதிரை முதலிய வாகனங்களுடன் சுகமாக இனிதுவாழ்வான் என்றவாறு.

வாகனம்

நாலிலொன் பாதிநான் காதிகேந் திரத்தில்
நண்ணிடவுஞ் சுபர் பார்த்திடவும்
நலமும்பல திலகுங்குல திலகன்புவி வலமுந்திட
நண்ணுந் சிவிகைபல் வாகனமே. [illegible]

ஜாதகனின் ஜென்மலக்கினத்திற்கு நான்காம்வீட்டில் 9-ஆம் இடத்தின் அதிபதியும், நான்காமிடத்தின் அதிபதியானவன், 1,4,7,10 என்னும் கேந்திரஸ்தானங்களில் ஒன்றில் தங்கியிருக்க, இவர்களைச் சுபக்கிரகங்கள் பார்வையிட்டாலும், ஜாதகனுக்கு பலவகை வாகனங்கள், சிலவகை பல்லக்கு, இரதம் இவை உண்டாகியிருக்கும்.

வாகனம்

மந்திரி யும்புந்தி நான்கி லிருக்கநான்
காதிவல் லோன்கேந்தி ரத்திருக்கில்
மாசகலுந் தேசிகரும் பேசியநல் வாசிபல
வாகன மாமணிப் பூஷணனே. [illegible]

ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் வீட்டில் புதனும், சுக்கிரனும், கூடியிருக்கவும், நான்காமிடத்தின் அதிபன் வலிமையுடன் 1,4,7,10 ஆம்வீடுகளில் ஒன்றிலிருக்கப்பிறந்தவன் மற்றவர்கள் பொறாமைப்படும்படி பலவகை வாகனங்களை உடையவனாயிருப்பான்.

கிரக பலன்

மாதவ நான்கில்நல் லோர்க ளிருக்கவும்
மந்திரி கேந்திர கோணத்தினில்
மட்டரவுங் கெட்டிமரம் இட்டுமனை கட்டியதில்
வாழ்குவ னென்றுரை வல்லவனே. [illegible]

தவத்தில் சிறந்த அகத்தியனே ஜாதகன் ஒருவனின் ஜென்மலக்கினத்திற்கு நான்காம் வீட்டில் சுபக்கிரகங்கள், தங்கிடவும், சுக்கிரனானவன் 1,4,5,7,9,10 ஆகிய கேந்திர திரிகோண வீடுகளில் ஒன்றில் தங்கியும் இருந்திட சரியான அளவுகளின் படி நல்லவழியாக தேக்கு, கருங்காலி முதலியமரங்களினால் அமைத்த சிறந்த வீட்டினை அமைத்து வாழ்வான் என்று கூறுவாய் எனக் குமரக்கடவுளானவர் திருவாய் மலர்ந்தவாறே.

Koviloor Digital Library

மாளிகை வீடு

வல்ல புகர்நான்கில் மூன்றிடத் தில்மதி
மன்னிட வும்பொன்னுஞ் சென்மத்தினில்
மருவத்திரு பெருகத்தரும் அருமைப்பணி யுருவச்சிலை
மாளிகை மீதமர் மன்னனென்பாய். 102

ஜாதகன் ஒருவனின் ஜென்மலக்கினத்தில் பலம் பொருந்திய சுக்கிரனானவன் நான்காம் வீட்டிலும், மூன்றாமிடத்தில் சந்திரனும், லக்கினத்தில் வியாழனும் தங்கியிருக்கவும் பிறந்தவன் செல்வ வளம் பெருகி இருக்கும்படி சிற்பசாஸ்திரப்படி கவனமாகக் கட்டிய மாளிகையில் இன்பமுற வாழ்ந்திருப்பதால் உலகோர் இவனை மன்னன் என்றே போற்றும்படியாயிருப்பான் என்று முருகப்பெருமான் திருவாய் மலர்ந்தபடியே.

மேன்மாடம்

என்றதோர் மூன்றிற்பொன் நான்கோன் புகர்நான்கில்
எய்திட வுஞ்சனி பார்த்திடவும்
இம்பரினிற் செம்பொனுளான் சம்ப்ரமமாய் முன்புளர்க
ளியற்றிய மேன்மாட வீடென்சொலாய். 103

ஜாதகர் ஒருவரின் ஜென்மலக்கினத்திற்கு மூன்றாம்வீட்டில் வியாழனும், சுக்கிரன் நான்காம் வீட்டதிபனுடன் கூடி நான்காம் வீட்டிலும் தங்கியிருக்க சனியானவன் நான்காம் வீட்டைப்பார்த்தாலும் அச்சாதகன் தங்கம், போன்ற உயர்ந்த உலோகங்களுடன் தனது மூதாதையர் கட்டிவைத்த மாடத்துடன் கூடிய (மாடிவீடு) மாளிகையுடையவனாவான்.

கூரைவீடு

வீடுநான் காதியைப் பாவர்கள் பார்த்திட
வெய்யோர்கள் நான்கினில் மேவிடவும்
வினையால் இவன்மனை குன்றியே சினதாமொரு மனைகூரையில்
மேவியே வாழ்குவன் மெய்முனியே. 104

ஜென்மலக்கினத்திற்கு நான்காம் இடத்தின் அதிபதியைப் பாபக்கோள்கள் பார்த்தாலும், தீய கிரகங்கள் நான்காம் வீட்டின் தங்கினாலும், அந்த ஜாதகன் தனதுமுன்சென்ம வினையால் சிறிய கூரைவீட்டில் வாழ்வான் என முருகக்கடவுள் அகத்தியருக்கருளினர்.

மித்திர பலன்

மெய்யனே நான்கிற் சுபர்களும் மேவநான்
காதியுங் கேந்த்ரகோ ணத்தில்மேவ

Koviloor Digital Library

விததகனுக் கித்தரையில் வித்தமுறும் பத்தியினால்
மித்திரருஞ் சூழும் பத்திரனே. 105.

மெய்ஞானத்தில் சிறந்த அகத்திய மாமுனியே ஒருவனின் ஜாதகத்தில் லக்கினத்திற்கு நான்காம் வீட்டில் சுபக் கோள்கள் தங்கியிருக்க நான்காமிடத்தின் அதிபதி கேந்திர, திரிகோண வீடுகளில் தங்கியிருக்க அவன் பக்திமானானதினால் இம்மண்ணுலகில் சிறந்த குணமுடைய நண்பர்கள் பலர் உதவியாக இருப்பார்கள் என்றுகூறுவாய், என முருகப்பெருமான் அருளினார்.

உபகார பலன்

ஏழெட்டிற் பத்திலீ ராறினிற் கோட்களெல்
லாரும் இருக்க நெறியுடனே
எம்பெருமா னின்புறவே அன்புடனே ஏழைபலர்க்
கீயும் பலவுப காரனென்பாய். 106

ஒருவரின் ஜெனன ஜாதகத்தில் 7,8,10,12 ஆம் வீடுகளில் ஒன்பது கிரகங்களும் தங்கியிருக்க அச்சாதகன் சிறந்த சிவபக்தனாவான், அன்புவடிவானவன், ஏழைகள் எளியவர்க்குத் தான தருமங்கள் செய்யும் சிறந்த உபகாரியாயும் இருப்பான் என்று சுப்பிரமணிய பெருமான் தவத்திற்சிறந்தவரான தமிழ் முனிவராம் அகத்தியருக்குக் கூறியருளினார்.

சௌக்கிய பலன்

தக்கவோர் நான்கிற் சுபருறப் பார்க்கினுந்
தண்மதியும் பொன்நான் கெய்திடினும்
தனமும்பல தினமும்பலி ஜெனமேழைகட் கனமீய்பினர்
தானுணும் பக்த சௌக்கியனாம். 107

ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் வீட்டில் சுபர்தங்கினாலும், பார்வை செய்தாலும் சந்திரனும், வியாழனும் கூடி நான்காம் வீட்டில் தங்கினாலும், அச்சாதகன், செல்வந்தனாயிருப்பான், சிறந்த சிவபக்தனுமாவான், தினமும், ஏழைகளுக்குப் பொருளுதவியும், அன்னதானமும் செய்த பின்னரே தான் உண்ணும் மாண்புடையவன், நல்வாழ்வுவாழ்பவன்.

சயன பலன்

சதுரத்தி னிற்சுபர் தானிருக்க வந்த
தானாதி யும்புகர் கேந்திரிக்கில்
தரைமீதினில் உறுமாக்களுக் கிறையாமென திருவெய்திநற்
சப்பரமஞ் சத்திற் றுயில்பவனாம். 108

Koviloor Digital Library

ஜென்ம லக்கினத்திற்கு 1,4,7,10 ஆம் வீடுகளில் சுபக்கிரகங்கள் சென்று தங்க அக்கிரகங்கள் தங்கிய வீடுகளின் அதிபதிகள் சுக்கிரனுடன் கூடி 1,4,7,10 ஆம் வீடுகளில் ஒன்றில் தங்கியிருக்க அச்சாதகன் இம்மண்ணுலகில் பெரும் அரசர்களுக்கு இணையாக அழகிய மஞ்சத்தில் படுத்துத் தூங்கும் பாக்கியம் பெற்றவனாவான்.

ஐந்தாம் பாவக பலன்

செந்தி நகர்தனில் மேவுந் திருக்கந்தர்
சேவடி தாழ்ந்து குருமுனிவன்
சிந்திதம்நற் சந்ததிகள் வந்துதவு மைந்துபலஞ்
செப்புதுங் கேண்முனி நட்புடனே. 109

சூரபத்மனைச் சம்ஹாரம் செய்தபின் சினம்தணிந்து முருகப்பெருமான் அமர்ந்து திருத்தலமான திருச்செந்தூரில் கோவில் கொண்டுள்ள அந்தப் பரம்பொருளைப்பணிந்து அவர் திருவடிகளை வணங்கி அகத்தியமாமுனிவர் நிற்க, கந்தவேளும் தனது கனிவான பார்வையால் குருமுனியாம், அகத்தியரை நோக்கி ஐந்தாம் பாவத்தின் மூலம் ஒருஜாதகனின் சந்ததிகளின் வரவு (புத்திரபாக்கியம்) கூறுகிறேன் கேட்பாயாக என்று அருளிக் கூறலானார்.

வெகு தனயர்

ஐந்துக் கதிபனங் காரகன் மால்புகர்
அந்தணன் கேந்த்ரகோ ணத்தமையில்
அகமகிழச் செகம்புகழ வெகுதனயர் உதையமென
ஆடவர்க் கென்றலங் காரஞ்செய்வாய். 110

மாதவமுனியே கேள் ஜெனன லக்கினத்திலிருந்து எண்ண-ஐந்தாம் வீட்டுக்கதிபதியுடன் செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன் இவர்கள் கேந்திரம், திரிகோணம் முதலிய வீடுகளில் தங்கியிருந்தால் அந்த ஜாதகனின் மனம் மகிழும்படியும், உலகில் உள்ளோர் புகழ்ந்து பாராட்டும் படியுமான நல்ல மகன்கள் லரை ஈன்று மகிழ்ந்து வாழ்ந்திருப்பான்.

இதுவுமது

செய்யவைந் தோன்சுப கோணகேந் திரத்திற்
செல்லப் புகர்சசி நோக்கிநிற்கில்
திருவுலகில் பெறுவரிரு சிறுவருண்மைந் தெரிவையுடன்
சீருடன் வாழ்வரிசேய் மாதவனே. 111

ஜாதகரின் ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டிற்கு அதிபதி, கேந்திர, தி[illegible]கோணவீடுகளிலோ தங்கியிருக்க, அவரை சுக்கிரனும், சந்திரனும்

Koviloor Digital Library

பார்த்திட்டால், இவ்வுலகில் அழகிய இரண்டு மகன்களையும், ஐந்து பெண்களையும் (மகள்) பெற்று பெரிய குடும்பஸ்தனாக வாழ்வான்.

தத்துப் புத்திரன்

மாதவ புத்திரத் தானம் புதன்வீடு
மந்தன்வீ டாய்ச்சனி மாந்தன் நோக்கில்
வாதாகிய போதாசுதர் தீதாப்புவி மீதேயிவன்
வாழ்மனைக் கேதத்து மைந்தனென்றார். 112

தவத்தில் சிறந்தவனே புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் வீடானது புதனின் வீடாகிய மிதுனம், கன்னியாகவோ, சனியின் வீடாகிய மகரம், கும்பமாகவோ இருந்து அந்த ஐந்தாம் வீட்டை சனியோ, மாந்தியோ பார்த்தால் தான்பெற்றெடுத்த புத்திரன் இல்லை ஆதலால் தத்துப் புத்திரன் ஏற்படுவான் என்றவாறு உரைத்தனர் முருகவேளே.

ஐந்து தனயர்

மைந்தருண் டாமைந்தில் மந்திரி பார்க்கவும்
மாதனத் தோன்லக்கி னாதிபனும்
மருவுஞ்சுதர் பெறுமைந்தென திருவும்பல தருமென்றிவன்
வாழ்ந்திருப் பான்மறை வல்லவனே. 113

ஜாதகன் ஒருவனின் ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் இடத்தினை வியாழன் பார்த்தாலும் 2 ஆம் அதிபதியும், லக்கினாதிபதியும் கூடி ஐந்தாம் வீட்டில் தங்கினாலும், பெரும்தனலாபம் ஏற்படுவதுடன் நல்ல ஐந்து மகன்களையும் பெற்று இனிது வாழ்வார் என்றவாறு.

நான்கு தனயர்

வல்லவைந் தோன்குரு கேந்திர மாக
வரத்தனத் தோன்வலி பெற்றிடவும்
மதிமைந்தருந் சதுரந்திரு வதனாதியர் நிதியோடிவன்
மண்டலத் தோங்கியே வாழ்பவனாம். 114

வலிமை பொருந்திய ஐந்தாம்வீட்டிற் உடையவனும், வியாழபகவானும் கேந்திர வீடுகளில் சென்றுதங்கிட, இரண்டாம் வீட்டிற்கு அதிபதியானவனும் பலம் பெற்று நிற்க இப்படியான ஜாதக அமைப்பில் பிறந்த ஜாதகனானவன் நல்ல செல்வ வளத்தைப் பெறுவதுடன் வீரமும் அழகும் பொருந்திய நான்கு மகன்களைப் பெற்று இம்மண்ணுலகில் சிறப்பாக வாழ்வான் என்று சுப்பிரமணியர் அகத்திய மாமுனிவருக்கு உபதேசித்து அருளியபடியே.

Koviloor Digital Library

ஐந்து மனைவியர்

வாழ்மயி லேஐந்திற் சுங்கனொன் பாதிபன்
மன்னிடப் பார்க்கவுஞ் சாதகற்கு
மணமும்புரி குணமங்கையர் எணவைந்தோடு துணையொன்றியே
வையகத் தெய்துவன் துய்யவனே. 115

ஜாதகன் ஒருவன் ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டில் அசுரகுருவாகிய சுக்கிரன் தங்கியிருக்க அவனுடன் ஒன்பதாமிடத்தின் அதிபதி கூடியிருந்தாலும் அல்லது ஒன்பதாம் இடத்தின் அதிபதியானவன் பார்த்தாலும் அந்த ஜாதகனுக்கு ஐந்து மனைவியர் ஏற்படுவர் என அகத்தியருக்கு சிவபாலன் முருகன் துருளியவாறு.

தெத்து

துய்யவைந் தாதிமீ னாடுசிங் கத்தேறித்
துன்னிடப் பார்க்கச்சேய் ஐந்திலுறில்
சொலவுஞ்சேய் இல்லையெனத் தெல்லைமனத் தல்லலுமாய்ச்
சுதனைத்தெத் தாக்குவன் அந்தியத்தில். 116

லம் பொருந்திய ஐந்தாமிடத்தின் அதிபதியானவன், மேஷம், சிம்மம், [illegible] ஆகிய இராசிகளில் ஒன்றில் நிற்க அவரைச் செவ்வாய் பார்த்தால் அந்த ஜாதகருக்குக் குழந்தைச் செல்வம் இருக்காது. ஆதலால் மனம் மிகவும் நொந்து வாடியிருந்து விட்டுத் தன்து முதுமைவயது நெருங்கும் வேளையில் ஒரு மகனைத் தத்து (சுவீகாரபுத்திரன்) எடுத்து வளர்ப்பான்.

இதுவுமது

அந்தியத்தில் இன்னம் புந்தியைத் தேறி
அமைந்திட நான்கிற்கென் மத்திற்பாவி
யணுகிடவுந் துணைவிழிசெய் துணர்கலிவர் குணபுதல்வர்
அவதரியாமல் தெத்து ஆக்குவரால். 117

ஜாதகர் ஒருவரின் ஜென்மலக்கினத்திற்கு நான்காம் வீட்டில் புதனும், லக்கினத்தில் பாபக் கோள்களில் ஒருவரும் தங்கியிருந்து பாபக் கிரகங்களின் பார்வையும் பெற்றால் அச்சாதகர்க்குக் குழந்தைப் பாக்கியம் இல்லாது போக தெத்துப் புத்திரனைப் பெறுவர்.

பெண் மகார்

அ[illegible] மத் திற்சனி லக்கினத் திற்குஜ
னைந்திற் கதிர்கூ[illegible] பாக்கியத்தில்

Koviloor Digital Library

அண்டிடவுங் கண்டிடவும் மண்டலமேற் பெண்மகவர்
அன்றி குலமக னில்லையென்றார். 118

ஜென்ம லக்கினத்திற்கு அஷ்டமத்தில் சனியும், லக்கினத்தில் செவ்வாயும், ;தாம் வீட்டில் சூரியனும், சுபக்கோள்கள், ஒன்பதாமிடத்திலும் கியிருந்தாலும் அல்லது ஒன்பதாமிடம், ஐந்தாமிடம் இவற்றைச் சுபக்கோள்கள் த்தாலும், அப்போது பிறந்த ஜாதகனுக்குப் பெண் குழந்தைகள் பிறப்பார்கள், ன் குழந்தைகள் ஏதும் பிறக்காது என்றவாறு.

எடுத்து வளர்க்கல்

இல்லையைந் தாதி சனிமனை ஏறிட
இரணியன் சேய்வீட்டி லெய்திடினும்
எள்ளளவுங் கள்ளமிலா விள்ளுபிறர் பிள்ளையையொன்
றெடுத்து வளர்த்துவ னென்றுரைத்தார். 119

ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டிற்கு அதிபதியானவன், ரிக்கிரகத்தின் வீடுகளான மகர, கும்பத்தில் நிற்கவும் வியாழபகவான் வ்வாயின் வீடுகளான மேஷ, விருச்சிக இராசிகளில் ஒன்றில் தங்கவும் பிறந்த தகனானவன் பிறர்பிள்ளையைத் தத்துஎடுத்து வளர்ப்பான் என்று ரக்கடவுள் திருவாய் மலர்ந்தருளியவாறு.

பிதுர்த் துவேஷி

உரைசெயச் சுங்கன் மதிகஜன் சூரிய
னொன்றிட வொன்பதிற் சுன்னரவும்
உற்றபிதா பெற்றவளும் சொற்றமொழிக் கெற்றியெதிர்
ஓதுஞ் சுதனுண்மை பத்தியனே. 120.

சூரியன், சந்திரன், செவ்வாய், சுக்கிரன் இவர்கள் ஒன்றுகூடிநிற்க, ரியுடன் இராகு, அல்லது கேது கூடி ஒன்பதாம் வீட்டில் தங்கியிருக்கப் ந்தவன், தாய், தந்தை சொல் கேட்காதவனாகி, அவர்களின் சாபத்தைப் றுவான் எனவே குழந்தைபிறக்காது.

மலடன்

பத்தினி லேசசி யேழினிற் பாவர்நா
லைந்தினிற் பாவர்க ளேறிடினும்
பலமென்றிடத் குலமைந்தரும் இல்லயென்றன மீலமென்றிவன்
...ர்கனி லேழுருகர் ஓதினரால். 121.

ஜென்ம லக்கினத்திற்கு பத்தாம வீட்டில் சந்திரனும், 4,5,7 ஆம் வீடுகளில் ம் பொருந்தியவர்களாகப் பாபக்கோள்கள் தங்கிநிற்கவுமான ஜாதக அமைப்பில்

Koviloor Digital Library

பிறந்த ஜாதகருக்குக் குழந்தை பாக்கியம் இல்லை யெனவே மலடன் என்றறிவது என முருகப் பெருமான் திருவாய் மலர்ந்து அருளினவாறு.

இதுவுமது

ஓதுமீ ரைந்திற் கதிர்புகர் புந்தியோ
ரேழிற் சனிவியம் மாந்தி ஜென்மத்
துற்றிடவுங் கொற்றவனும் பெற்றமக வற்றபுவி
லோப மலடென் றுள்ளுணர்வாய். 122

ஒருவரின் ஜாதகத்தில் லக்கினத்திற்குப் பத்தாம் வீட்டில் சூரியனும், சுக்கிரனும், கூடியிருக்கவும், ஏழாம் வீட்டில் புதனும், பன்னிரண்டாம் வீட்டில் சனியும், ஜென்மலக்கினத்தில் மாந்தியானவனும் தங்கியிருந்தால், அந்த ஜாதகன் இவ்வுலகில் வாரிசு ஏற்படாமல் போனதினால் மலடன் என்று ஆகிடுவான் என்று சுப்பிரமணியர் பொதிகை முனிவராம் அகத்தியருக்கு அருளினார்.

ஆணிரட்டை

ஒன்று மூன்றுக்குடை யோர்களொன் றாகி
உதயத்தில் நிற்கவும் பாவரின்றி
உத்தமனைப் பத்திசெய வித்தகியும் பெற்றதிரு
வோங்கு மிரட்டையா ணென்றுரைப்பாய். 123

ஒருவரின் ஜெனன ஜாதகத்தில், லக்கினம் மற்றும் மூன்றாமிடத்தின் அதிபதிகள் ஒன்று கூடி லக்கினத்தில் நின்று அவர்களுடன், பாவக் கிரகங்கள் சம்பந்தம் செய்யாமல் இருந்தால் அந்த ஜாதகனும், அவன்மனைவியும் செய்த நற்தவத்தால் இரட்டை ஆண்குழந்தைகள் பிறக்கும் என்று குமரக்கடவுள் அருளியவாறு.

ஆண் பெண்

மிதுனங்கன் னிதனு மீனுதிக் கச்சென்மம்
விண்மணி சேய்புதன் கூடநல்லோர்
விழிசெய்கவு மழலைத்திரு வெழிலாளிரு குழவீன்றதில்
மெல்லிய ளாணொன்று மேவுவரால். 124

ஒருவரின் ஜாதகத்தில் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் முதலியஇராசிகளில் ஒன்று ஜென்ம லக்கினமாகி, சூரியன், செவ்வாய், புதன் கூடியிருக்க அவர்களைச் சுபக்கிரகங்கள் பார்வையிட்டால் அந்த ஜாதகரின் மனைவியானவள் இரட்டைக் குழந்தைகளை ஈன்றெடுப்பாள். அதில் ஆண்குழந்தையும் பெண் குழந்தையும் இருக்கும்.

Koviloor Digital Library

மூன்று ஆண்

கயலி லுதித்திடக் கன்னியி லேபுதன்
கண்டிட மற்றொருப யத்தேறில்
கலைதுன்னிய நிலவின்முக மிலகுங்குல திலகீன்றனள்
காளையர் ஓர்மூன்றாய்க் கணிதஞ்செய்வாய். 125

மீனம் ஜென்மலக்கினமாக, புதன் கன்னியாராசியில் ஆட்சியுச்சம் பெற அல்லது பார்வைசெய்ய அல்லது வேறு உபயராசிகளாகிய, மிதுனம், தனுசுவில், தங்கிப் பிறந்த ஜாதகனின் நிலவுபோன்ற அழகிய முகம்பொருந்திய மனையாளானவள் ஒரே பிரசவத்தில் மூன்று ஆண்குழந்தைகளை ஈன்றெடுப்பாளென்று குறுமுனியாகிய அகத்தியனே நீ கணித்திடுவாய் என்று குமரக்கடவுள் அருளியவாறு.

மூன்று பெண்

மீனுதிக் கக்கன்னி மீனத்திலே புந்தி
வீற்றிருக்க மற்றோ ருக்ம ராசில்
மேவிடுகில் பூவுலகில் காவலர்தன் தேவிவயின்
வேல்விழி யார்மூன்று விளங்கிடுமால். 126

மீனம் ஜென்மலக்கினமாக புதபகவானானவர், கன்னி அல்லது மீனத்தில் தங்கி இருக்க அல்லது மற்றொரு உபயராசியாகிய தனுசில் புதன் இருந்தாலும், அந்த ஜாதகரின் மனைவியானவள் ஒரே பிரசவத்தில் மூன்று பெண் குழந்தைகளை ஈன்றெடுப்பாள்.

ஆண்ஒன்று பெண் இரண்டு

உதையத் துதிக்கவொண் மதிபுகர் நிற்கமால்
உக்ம ராசிநின்று பார்த்திடவும்
ஓங்குமுகிற் பூங்குழலி வீங்குவயின் தாங்குதயம்
உரைசெய்வாய் ஆணொன்று பெண்ணிரண்டே. 127

ஜென்மலக்கினத்தில் சந்திரனும், சுக்கிரனும், கூடி நிற்க அவர்களை யுக்ம இராசிகளாகிய மிதுனம், கன்னி, தனுசு, மீனத்தில் ஒன்றில் நின்ற புதன் பார்வையிடப் பிறந்தவனின் மனையாளானவள் வீங்கிப் பெருத்திருந்த தனது வயிற்றிலிருந்தும் ஒரு ஆண் குழந்தையும், இரண்டுபெண்குழந்தையும் ஈன்றிடுவாள்.

ஆறாம் பாவகம்

ாயன் மருகன் மலரடி தாழ்ந்துநல்
மாமுனி கேட் குமா ராம்பலத்தால்

Koviloor Digital Library

மனிதர்க்குறும் வினைசத்துரு தனையத்தினை யனசுத்திரு
வள்ளி மணாள னருள்செய்வரால். 128

திருமாலின் மருமகனான முருகக்கடவுளின் திருத்தாள்களை வணங்கி முனிவருள் புகழ் பெற்றவரான அகத்தியரானவர் ஆறாம் பாவத்தின் பலனைக் கூறும்படிக் கேட்டுக் கொள்ள வள்ளிநாயகியின் மனங்கவர் நாயகனான சுப்பிரமணியர் ஆறாம் பாவ பலனைக் கூறுவாராயினர். மனிதர்களுக்கு ஏற்படும் துன்பங்கள், எதிரிகள் பற்றி ஆறாம் பாவத்தில் பலன் கூறுவாயாக அகத்தியனே என்று குமரக்கடவுள் அருளியவாறு.

சத்துரு ஜெயன்

ஆதவன் சேய்மதி மூவருங் கூடியோ
ராறிடத்தி லேறி நின்றிடுகில்
அத்திவளைந் தித்தரையில் சத்துருவை மித்திரனாய்
ஆய னுபாயம்போல் வென்றிடுவான். 129

ஜென்ம லக்கினத்திற்கு ஆறாம் வீட்டில் சூரியன், சந்திரன், செவ்வாய் மூவரும் கூடி நின்றிடில் அச்சாதகனானவன் இப்புவியில் தனது சாமர்த்தியத்தினால் தனது எதிரிகளையும் நண்பர்களாக்கி வென்று பகைவரின்றி வாழ்வான்.

பரதார விஷயன்

வென்றிரு மூன்றினிற் பாவ ருடன்வெள்ளி
மேவிட வும்பர தாரத்தின்மேல்
விழைவாகிய எழில்மாதுடன் பழவாகியே குழைவாய் மனம்
வித்தமும் வெற்றியும் அற்றவனே. 130

ஒருவனின் ஜாதகத்தில் ஜென்ம லக்கினத்திற்கு ஆறாம் வீட்டில் சுக்கிரனானவன் பாபக் கோள்களுடன் சேர்ந்து தங்கியிருந்தால் அவன் மற்றவன் மனைவி மீது ஆசைகொண்டு தனது செல்வங்களை இழப்பான், தாசிகளிடத்திடம் தனது செல்வங்களைப் பறிகொடுப்பான் என்று சுப்பிரமணியர் அருளிச் செய்தவாறு.

சத்துரு ஜெயன்

ஆறிடத் திற்புவி மைந்தன் சனிகூடில்
அஞ்சா மனத்தின்பிர சித்தனாம்
அரிகோடிகள் வருமாயினும் சரியல்லன புரிவன்ஜெயம்
அசுரசங் காரத்கிவ் வாறென்பரால். 131

ஜென்ம லக்கினத்திற்கு ஆறாம் வீட்டில் செவ்வாயும், சனியும் கூடிநிற்கப் பிறந்தவன அஞ்சாநெஞ்சன் என்று புகழப்படுவான், எதிரிகள் கோடானு கோடிப்

Koviloor Digital Library

பேர்கள் வந்தாலும் எதிர்த்து வெற்றிபெறுவான் என்று அசுரர்களைவென்ற வேலவர் உரைத்தபடி..

சத்துரு கிலேசி

என்றுஞ்சென் மத்திற்சே யிரவி மாந்திமந்தன்
எய்தச் சென் மாதியோ டெய்திடினும்
இகலும்புரி பகைமன்னர்கள் அகலும்படி துகள்செய்யினும்
என்றுங் கிலேசியாய்க் குன்றிடுவான். 132

ஜென்மலக்கினத்தில் சூரியன் செவ்வாய், சனி, மாந்தி கூடிநின்றாலும். இவர்களுடன் லக்கினாதிபதியும் கூடியிருந்தாலும் அப்போது பிறந்த ஜாதகனானவன் எதிரிகளை வெல்லக் கூடியவனே, ஆயினும், எதிரிகளை நினைத்துக் கவலையுற்றவனாகவே காணப்படுவான்.

கிலேசன்

குன்றுமோர் மூன்றிற் குருவிருக்க வாறிற்
குஜனும் புதன்கூடித் தானிருக்கிற்
கோளும்பல நாளும்புரி நீளும்பகை யாளர்க்கொடு
கொற்ற மனங்குலைந் தேதிரிவான் 133

ஜென்ம லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில் வியாழனிருக்க, ஆறாமிடத்தில் செவ்வாயும், புதனும் கூடியிருந்தாலும், பிறந்த ஜாதகனானவன் எதிரிகள் அதிகம் உடையவனாவான் எதிரிகளைச் சமாளிக்க இயலாமல் மனம் வாடியிருப்பவனாவான்.

ஜனவிரோதன்

திரியுஞ் சிகிபதி னொன்றில் நவத்தினிற்
றினகரன் காரியும் மாந்தி நிற்கில்
செல்லார்குழல் நல்லார்களும் எல்லோர்களும் பொல்லாரெனச்
செப்ப விரோதியாய் நிற்பவனாம். 134

ஜென்ம லக்கினத்திற்கு பதினொன்றாம் வீட்டில் கேதுவும், ஒன்பதாம் வீட்டில் சூரியன், சனி, மாந்தி கூடித்தங்கியிருக்கப் பிறந்தவன், தனது உறவினர்களிலும், சுற்றத்தாரும், நண்பர்களும், விரோதிகளாக மாறிப்போவதால் எல்லோரிடத்திலும் விரோதியாய் ஆவான்

மித்திர விரோதன்

நிற்கவே ஏழி லமைச்ச னிருக்க
நிலமகன் வாக்கினி லெய்திடவும்

Koviloor Digital Library

நினவும்பல வினையாலுநல் லினமும்புற ஜனமும்பகை
நேச விசுவாச னாசக்னே. 135

லக்கினத்திற்கு ஏழாம்வீட்டில் வியாழனிருக்க, இரண்டாம் வீட்டில் செவ்வாய் தங்கியிக்க அச்சாதகனானவன் எதிரிகள் அதிகமுள்ளவன் தவிரவும் நண்பர்களைக் கூடப் பகைத்துக்கொள்ளக் கூடியவன் என்றவாறு.

களத்திர விரோதன்

நாசக னாம்ரவி யம்புலி யேழினில்
நண்ணிட வுந்தீயர் நோக்கிடவும்
நன்றியுற மன்றல்செயு மின்னொளியைக் கன்றிபல
நாளும் விரோதியாய் நாட்டிடுவாய். 136

பாபக் கிரகமாகிய சூரியனுடன், சந்திரன்கூடி லக்கினத்திற்கு ஏழாம்வீட்டில் நின்றிட அவர்களைப் பாபக் கோள்களும் பார்த்திடப் பிறந்த ஜாதகனானவன் தனது மனைவியுடன் பகையாகி அவளைப் பிரிந்து வழ்வான் என்று குமரக்கடவுள் உபதேசித்தபடியே.

குடும்ப விரோதன்

நாட்டுவா யேழுக் கிரண்டுக் குடையுவர்
தீய ருடன்நண்ணி யாறிருக்கில்
நாகரித மாகும்நனி யேககுடும் பாகுநரை
நலிய விரோதியாம் நன்முனியே. 137

முனிவர்களில் சிறந்த அகத்தியனே லக்கினத்திற்கு 2,7 ஆம் வீடுகளின் அதிபதிகள் கூடி, தீய பாவிகளுடன் ஆறாம் வீட்டில் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனானவன் தனது மத்திம வயது கடந்து முதுமையை நெருங்கும் போது குடும்பத்தையே பகைத்துக் கொள்ளுவான் என்றறிவாயாக என குமரக்கடவுள் திருவாய் மலர்ந்தருளியபடியே.

வாக்கு விரோதன்

வாக்குநர் தன்புதன் கூடியோ ராறினில்
மன்னிட வுந்தீயோர் நோக்கிடவும்
மானியபி மானமிலா வீணர்தள்சொல் லானவர்போல்
வாய்மலர்ந் தாற்பகை யோகனென்பாய் 138

ஜென்ம லக்கினத்திற்கு 2ஆம் வீட்டதிபனும், வாக்குக்குக் காரகனாகிய புதபகவானும் கூடி ஆறாம்வீட்டில் தங்கியிருக்க அவர்களைப் பாபக் கிரகங்களும் பார்த்திடப் பிறந்த ஜாதகன் மற்றவர்களில் தீயவர் சேர்க்கையால் தவறுகள் புரிவான்

Koviloor Digital Library

மேலும் அவனுடைய சொல்லே அவனுக்கு விரோதமாகிப் பகைவர்களைச் சம்பாதித்துக் கொள்வான்.

சோரன்

எட்டிற் பணியுறச் செய்சனி பார்த்திட
இரவிசேய் மால்புக ரெய்திடினும்
இழிவுற்றிட பழிபெற்றிட தழையுற்றிட தொழிலுற்றவன்
இவ்வுல கிற்சோர மேபுரிவன். 139

லக்கினத்திற்கு எட்டாம் இடத்தில் சந்திரன் தங்கியிருக்க அவனைச் செவ்வாயும், சனியும் பார்த்திடவும், அல்லது சூரியன் செவ்வாய், புதன், சுக்கிரன்கூடி ஆறாம் வீட்டில் நின்றாலும் அப்போது பிறந்த ஜாதகனானவன் திருடனாக இருப்பான், வஞ்சனை, போன்ற தீய குணங்களையுடையவனாக இருப்பான், பெண் ஜாதகராக இருந்தால் விபசாரம் செய்வதைத் தனது தொழிலாகக் கொண்டவளாக இருப்பாள்.

லிங்க விரணன்

புகலு மிரண்டெட்டில் கேதுவு மாறுளன்
பொல்லா ருடன்கூடி யெட்டில் நின்றால்
பொங்கியழ லங்கமதில் தங்கியிவன் லிங்கமுதல்
பொதியுட லில்ரணம் பூண்டவனாம். 140

ஜென்மலக்கினத்திற்கு இரண்டு அல்லது எட்டாம் வீட்டில் கேது நின்றாலும், ஆறாம் வீட்டின் அதிபதி தீயகிரங்களின் சேர்க்கை பெற்று எட்டாம் வீட்டில் நின்றாலும் அப்போது பிறந்த ஜாதகனான்வன் மேக ரோகத்தினால் பீடிக்கப்படுவான். அவனது பிறப்புறுப்பில் புண் உண்டாகும், உடலில் கிரந்தி யெனும் நோயும் தாக்கித் துன்புறுத்தும்

இதுவுமது

பூண்டதோ ராறுமே ழுக்குடை யோர்ரெட்டிற்
புக்கிட வுஞ்செவ்வாய் நோக்கிடவும்
புரையன்றிய உருவந்தனில் மருவெய்திட விரணாதிகள்
பொங்கியி லிங்கத்திற் றங்கிடுமே. 141

லக்கினத்திற்கு 6,7, ஆம் வீட்டிற்கு அதிபதிகள் எட்டாம் வீட்டில் கூடியிருக்க அவர்களைச் செவ்வாய் பார்த்தால் முன் கவியில் கூறியபடியே மேக ரோகம், கிரந்தி ரோகம் பிறப்புறுப்பு நோய் போன்றவை உண்டாகி உடலை வருத்தும்.

Koviloor Digital Library

பித்த ரோகன்

தங்கவெட் டில்ரவி சனியு மிரண்டினிற்
றங்கிட வும்பாவர் பார்த்திடவும்
சத்தித்தரும் பித்தத்தினால் சித்தத்தினில் மெத்தத்துயர்
தன்னா லுயங்கிச் சலித்திடுவான். 142

லக்கினத்திற்கு எட்டாம் வீட்டில் சூரியன் தங்கிடவும் இரண்டாம் வீட்டில் சனி இருக்கவும் இவ்விருவரையும் பாபிகள் பார்த்திடவுமான ஜாதகத்தில் பிறந்தவன், பித்தநோய் கொண்டவனாவான், மூளைக்கோளாறு, பைத்தியம் போன்ற வியாதிகளினால் பாதிக்கப் பட்டவனாவான்.

இதுவுமது

சட்ட மாதிபுகர் கூடியா றெய்தினும்
சன்மமெட் டோன்புதன் றான்கூடினும்
சலனத்தினில் மலினந்தரு நலியும்பழு தலையொத்தன
தங்கும் பித்தரோக னென்றறைவாய். 143

லக்கினத்திற்கு ஆறாம் வீட்டதிபனுடன், சுக்கிரன் கூடி ஆறாம் வீட்டிலேயே தங்கினாலும் 1,8, ஆம் வீட்டதிபர்களுடன் புதன்கூடி ஆறாம் வீட்டிலேயே நின்றாலும் முந்தைய கவியில் சொல்லியிருந்த படியான பித்த ரோகத்தினால் பாதிக்கப்பட்டவனாவான். மரத்தின் இலைகள் பழுத்துவிழுவது போல சரீரமானது மஞ்சளாகி நொந்து காணும், மஞ்சள் காமாலை போன்ற நோய்களால் பாதிக்கப் படுபவனுமாவான் என்றகத்தியருக்குச் சுப்பிரமணியர் அருளிச் செய்தவாறு

பசாசுபீடை

அறையுமா றுக்குடை யோனுஞ்செவ் வாயும்
அவருட னேகரும் பாந்தள் நின்றால்
அங்கந்தனைப் பங்கஞ்செயப் பொங்கும்பிணி தங்குங்கனல்
அலகை பிடித்தங்கம் தேயுமென்றார். 144

6ஆம் வீட்டுக்கதிபனும், செவ்வாயும் கரும்பாம்பெனும் இராகுவுடன் கூடி ஆறாம் வீட்டிலேயே தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனானவன், அங்கக்குறைவு ஏற்படக் கூடிய வியாதிகளினால் பாதிக்கப்படுவான், வியாதிகள் அவனுடலில் நிறைந்து கிடப்பதைப் போலவே பேய், பிசாசுகளும் பிடித்து ஆயுளைக் கெடுக்கும் என்றவாறு.

இதுவுமது

தேய்மதி யும்மந்தன் சீரு மரவமோ
ரெட் டினிற் செல்லவா றுற்றிடினுந்

Koviloor Digital Library

தேகந்தனில் சோகம்பல மோகந்தரு நாகன்விடத்
தோன்றிய போற் பேய் பிடித்துழல்வான். 145

தேய்பிறைச் சந்திரனுடன், சனியும் இராகுவும் கூடி 6 அல்லது 8ஆம் வீட்டில் நின்றாலும் அச்சாதகனானவன் உடல் நலத்தைக் கெடுக்கும் நோய்களுடன், பேய்களும் பிடித்தவனாகி வருந்தி வாழ்வான் என்று சுப்பிரமணியக்கடவுள் அருளியபடியே.

ஈகா நோய்

உடுபதி யும்புதன் பாவருங் கூடியோ
ராறா மிடத்திவ ருற்றிடினும்
உருமிக்குரல் செருமிக்கபம் பெருகத்தரு மிருமற்பிணி
யோங்கிச் சுரத்தினா லுய்குவனாம். 146

சந்திரனும் புதனும் கூடி ஆறாம் வீட்டில் பாவிகளின் சேர்க்கை பெற்றுத் தங்கி இருந்திடப் பிறந்தவனானவன், சயரோகம், ஆஸ்துமா, போன்ற கப சம்பந்த வியாதிகளினால் பாதிக்கப்பட்டு இருமலுண்டாகி என்னாளும் துன்பத்துடனாவான்.

ஓதம்

உரகஞ்சென் மத்தினி லட்டமத் திற்சேயு
முற்றிடக் கோணத்தில் மாந்திநிற்க
உடலிற்புக லிடையிற்றுடை கடையத்துணை ஒடையிற்படு
ஓத மெனும்பிணி யோங்கிடுமே. 147

லக்கினத்தில் இராகுவும், எட்டாம் வீட்டில் செவ்வாயும் பலம் பெற்று நிற்கவும் 1,5,9 எனும் திரிகோண இராசிகளில் ஒன்றில் மாந்தி தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனானவன் ஓதம் என்னும் விரைவாத நோயினால் (HYDROCEL)பாதிக்கப்பட்டவனாகித் துன்பம் அடைவன்

இதுவுமது

ஓங்குமோ ரேழிற்சேய் ஏழுக்குடையவன்
ஓர்மூன்றி லுற்றிட நோக்கிடினும்
உண்டாமிரு வண்டந்தனிற் சென்டேோபெருங் குண்டாமென
வூதுமோ தத்தினால் கஷ்டனாவான். 148

லக்கினத்திற்கு ஏழாம்வீட்டில் அவ்வீட்டின் அதிபதியானவன் செவ்வாயுடன் கூடிநிற்க, அல்லது 7, ஆம் அதிபதி 3ஆம் வீட்டிலும் செவ்வாய் 7 ஆம் வீட்டிலும் தங்கியிருந்து 7 ஆம் வீட்டுக்குடையவனால் செவ்வாய் பார்க்கப்பட்டால் அப்போது

Koviloor Digital Library

பிறந்த ஜாதகன் விரைவாதத்தித்தினால் பாதிக்கப்பட்டு விரைகள் பெரும் குண்டுபோலாகியிருக்க மிகவும் துன்பமடைந்து வாழ்வான் என்றவாறு.

நேத்திர ரோகன்

கஷ்டமோ ராறில் மதியெட்டி னில்ரவி
காரியீ ராறிற்சேய் வாக்குறினும்
கமலாசன விமலன்விதி தமையாலிரு விமைசார்விழி
காட்சியி லாதுநோ யாற்கவர்வான். 149

தேய்பிறைச் சந்திரன் ஆறாம் வீட்டிலும், எட்டாம்வீட்டில் சூரியனும், 12ஆம் வீட்டில் சனியும் 2ஆம் வீட்டில் செவ்வாயும் தங்கியிருக்கும்படியான ஜாதகஅமைப்பில் பிறந்தவனானவன் தாமரைமலரை ஆசனமாகக்கொண்ட பிரமன் எழுதிய விதியின் படி நோயால் பாதிக்கப்பட்டு விழிகளை இழப்பான் அதாவது குருடனாவான்.

நீர்க் கடுப்பு

கலைமதி யொன்றாறு மேடந்தே ளெய்திடக்
கங்கைக்கோ ளாறுடன் கூடிநோக்கக்
கனல்மீறியே தனுவிற்பல வினையேறிடத் தினமுற்றுநீர்க்
கடுப்பா லிடுக்க மடுத்தவனாம். 150

சந்திரனானவன், லக்கினத்திலோ, ஆறாம்வீட்டிலோ, மேஷம், விருச்சிகம், முதலிய செவ்வாய் கிரகத்தின் வீடுகளில் ஒன்றிலே நின்றிடச் சந்திரா லக்கினாதிபதி ஆறாம் வீட்டதிபதியுடன் கூடிச் சந்திரனைப்பார்த்திடப் பிறந்த ஜாதகன் உடலில் உஷ்ணம் அதிகமாகி, சிறுநீர் அவயவங்களில் நோயுண்டாகி நீர்க்கடுப்பு, மூத்திரக்கோளாறு போன்ற நோய்கள் தாக்கப்பட்டவனாகித் துன்புறுவான்.

இதுவுமது

அம்புலி யுஞ்சனி கூடியட் டமத்தில்
அண்டிட வும்பாவர் கண்டிடவும்
அங்கந்தனிற் பங்கப்படப் பொங்குங்கனல் தங்கத்தினம்
ஆன சிறுநீர்க் கடுப்பெய்துமே. 151

சந்திரனும், சனியும் கூடி எட்டாம் இடத்தில் நிற்க அவர்களைப் பாபக்கிரகங்கள் பார்த்திட அந்த ஜாதகன் உடலில் அனல்மீறுவதால் நீர்க்கடுப்பு எனும் நோய்கண்டு துன்புறுவான்.

பிரமேகம்

எய்தகத்திருக் கூடி யோ ராறினில்
ஏறிடச் சேய்சனி பார்த்திடவும்

Koviloor Digital Library

எரியுந்திரை பரியின்முகப் பருகிச்சர வருஷம்என
இலகும் பிரமேகத் திடர்ப் படுவான். 152

சந்திரன் சுக்கிரன்கூடி ஆறாம் வீட்டில் நிற்க, அவர்களைச் செவ்வாயும், சனியும் பார்த்தால் உடல் உஷ்ணம் அதிகமாகி நீர்க்கடுப்பு, வெள்ளை வெட்டையெனும் பிரமேகம் போன்ற மூத்திர வியாதிகளால் அவதியுறுவான் என்றவாறு.

குன்மம்

இடர்செயும் மந்த னிரவிசேய் கூடி
யிலக்கினத் தெய்திடப் பாவர்பார்க்க
எண்ணிற்பல வண்ணம்புவி மண்ணிற்றினம் நண்ணுந்துயர்
ஏற்றகுன்ம ரோகத் தேங்குவனாம். 153

ஜாதகன் ஒருவனின் ஜென்ம லக்கினத்தில் துன்பங்களை வழங்குவதில் பெயர்பெற்ற சூரியன், செவ்வாய், சனி கூடிநின்றிருக்க, அவர்களைப் பாபக்கிரகங்களும் பார்க்க இப்புவியில் பல்வாறான துன்பங்கள் எய்துவான் மேலும் குன்மவியர்தி என்னும் வயிற்றுவலி நோயால் பாதிக்கப்பட்டு வருந்தியுழலுவான் என்றவாறு.

சத்தி குன்மம்

ஏங்கும்ஜென் மத்தினில் ராகுசெவ் வாயுற
இருமூன் றுலோன்பார்க்கி லிவன்முன்னந்தான்
இன்னலுறத் தன்னவருக் கன்னமிடாத் துன்னுபவ
மேற்றதி னாற்சத்தி குன்மமென்பாய். 154

ஜென்ம லக்கினத்தில் செவ்வாயும், இராகுவும் கூடியிருக்க 6ஆம் வீட்டுக்கதிபனோ ஆறாம் வீட்டில் நின்ற தீயகோள்களோ லக்கினத்தைப் பார்த்தால் அச்சாதகனானவன் தனது முந்தைய சென்மத்தில் தன்னைச் சார்ந்தவர்களுக்குக் கூட உணவளிக்காமல் அவர்களைப் பட்டினிபோட்டு வதைத்தவினை காரணமாக, இந்தப் பிறவியில் (அல்சர்) சத்தி குன்மம் என்னும் நோய்கண்டு துன்புறுவான் என்றவாறு.

வகுரி (வைசூரி, அம்மை)

பிணிமுகன் ராகுலக் னாதிசேய் வர்க்கூடும்
பெற்றிடி லாறோன்சேய் ராகுகூடில்
போந்தமதி சாதகனுக் கோதுடலில் வாதையென்ப்
பெண்மாரி யும்விளை யாடிடுவாள். 155

Koviloor Digital Library

ஆறாம் வீட்டதிபதியானவன், லக்கினாதிபதி, ராகு, செவ்வாய், இவர்களின் நட்சத்திரங்களில் நிற்க அவனுடன் செவ்வாயும், இராகுவும் சேர்க்கைபெற்று இருக்கப் பிறந்த ஜாதகனின் உடலில் மாரியம்மன் அம்மையாகப் பரவி விளையாடுவாள் அதாவது வைசூரி போடும் என்றவாறு.

இதுவுமது

ஆறெட்டிற் செய்ராகு நிற்கவொன் றேழெட்டில்
அரிசனி நிற்கச்சே யரவுபார்க்க
அங்கமதிற் றுங்கமணி தங்குதலாய்ப் பொங்கியெழும்
ஆட்சி வசூரியாற் கண்டமென்பாய். 156

6,8 ஆம் வீடுகளில் செவ்வாயும், இராகுவும் கூடி நிற்க, 1,7,8 ஆம் வீடுகளில் சூரியன், சனி நிற்க இவர்களை இராகு அல்லது கேது பார்த்திட ஜாதகனானவனுக்கு உடலில் அனல் மீறயதால் உடல் பூராவும் முத்துக்களை வாரி யிறைக்கும் அம்மை நோய் காணும் என்றும், அதனால் மரணத்திற்குச் சமமாகிய கண்டம் ஏற்படும் என்று கூறுவாய் அகத்தியனே, என்று முருகப்பெருமான் அருளியவாறு.

தலைவலி சுரம்

அட்டமத் தோன்லக்கி னாதியென் றாகியே
ஆதவன் வர்க்கத் தடைந்திருந்தால்
அலரும்மிடி தலையின்வலி குலவுந்தின மிலகுஞ்சுரத்
தாலங்கம் பங்கமென் றிங்குரைப்பாய். 157

லக்கினாதிபதியும் எட்டாமிடத்ததிபதியும் கூடி சூரியனின் நட்சத்திரங்களிலோ, சிம்மராசியிலோ (சூரியனின் நட்சத்திரங்கள், கிருத்திகை, உத்திரம், உத்திராடம்) தங்கியிருந்தால் ஜாதகனானவன் தலையில் இடி இறங்கியது போன்ற தலைவலிகண்டு தினந்தினம் துன்புறுவான் மேலும் சுரம்வேறு தோன்றி உடலை வருத்தும் எனக் குமரக்கடவுள் கூறியவாறு.

இதுவுமது

என்பதி ரண்டைந்தி லென்றா ழிருந்திட
எட்டிற் கரும்பாந்த ளேறிடவும்
இடியாற்றலை பொடியாகிட வடிவாமுடல் கொடுவெங்கன
லென்ன சுரத்தினா லின்னலுளான். 158

லக்கினத்திற்கு எட்டாம் வீட்டதிபதி இரண்டாம் வீட்டிலும், சனிபகவான் ஐந்தாம் வீட்டிலும் இராகுவானவன் எட்டாம் வீட்டிலும் தங்கியிருக்கப் பிறந்தஜாதகன் சூரியஇடி போன்ற தலைவலி நோயுடன், சுரநோயும் கொடுமையின்வினையால் அவதியுறுவான்.

Koviloor Digital Library

க்ஷய ரோகம்

சிறுவ னுதித்தஜென் மத்தினிற் சேய்சனி
தினகரன் நிற்கத்தேய் மதியும் பார்க்கத்
திடமாகிய சடமானதி லிடராகிய கொடிதாமிகு
தீய் சயநோயுற் றேங்குவனாம். 159

ஜாதகனொருவன் பிறந்த ஜென்மலக்கினத்தில் சூரியன், செவ்வாய், சனி கூடிநிற்க தேய்பிறைச் சந்திரனானவன் லக்கினத்தைப் பார்த்தால் அவனுடலில் மிகவும் தீயநோயான சயரோகம் (T.B) என்னும் நோய் தோன்றித் துன்பமுடையவனாகி வருந்திவாழ்வான்

வாந்தி பேதி

துய்ய மதிகுஜன் ஆறி லிருந்திடத்
துட்ட கிரகங்கள் பார்த்திடவும்
சொல்லப்பல அல்லற்குவை புல்லக்கொடு வல்லப்பிணி
சூசிகை யாற்றுன்ப மெய்திடுவான். 160

ஜென்ம லக்கினத்திற்கு ஆறாம் வீட்டில் சந்திரனும் செவ்வாயும் கூடியிருக்க அவர்களைப் பாபக் கோள்கள் பார்த்திடப் பிறந்தவன் பலவகையான நோய் துன்பங்களை உடையவனாவன். சூசிகா ரோகம் என்னும், வாந்திபேதி (காலரா) நோயினால் துன்புறுவான் என்று சுப்பிரமணியர் அகத்தியருக்கருளிச் செய்தவாறு.

கடன் படுகை

ஆறுளன் ஜென்மத் திரண்டினில் லாபாதி
ஆறெட்டீ ராறி லடைந்திருந்தால்
அன்பிற்பிற ரின்பத்தினில் முன்புற்றிடு செம்பொன்களும்
அயலார்க் களித்திவன் கடன்படுவான். 161

லக்கினத்திற்கு ஆறாம் வீட்டுக்குறியவன் நிற்கவும், பதினொன்றாம் வீட்டுக்குடையவன் இராண்டாம் வீட்டிலும், 6, 8, 12 எனும் மறைவுஸ்தானங்களிலும் தங்கி இருக்கப் பிறந்தவன் முன்னோர் சேர்த்துவைத்த பொன், பொருள் ஆகிய வற்றைத் தீயவழி இன்பங்களுக்காகத் தொலைத்து, மேலும் கடனாளியும் ஆகி வீணில் வாழ்வான்.

ஏழரம் பாவம்

கன்னி கவுரிதன் மைந்தன்செல் வக்கந்தன்
காற்பாது மங்காழ்ந்தே ழாம்பாவகம்
கழலுமென்ன மொழியமுனி மழலையின்வாய்க் கிளியமுதாய்க்
கருணை யுடன்முனிக் கருள்செய்வரால். 162

Koviloor Digital Library

நித்திய கன்னியாகிய கௌரிபரமேஸ்வரியின் செல்வக்குமாரனான கந்தக்கடவுளின் தாமரை மலர்ப் பாதங்களில் வீழ்ந்து பலமுறை வணங்கி நின்ற அகத்தியரானவர் ஏழாம் வீட்டின் பலன்களைக் கூறியருளும் படிக் கேட்க, பச்சிளம் குழந்தையின் கிளிபோன்ற இனிமையான மழலைமொழி கேட்ட தாய்போல் உவகைகொண்ட பெருமானானவர் ஏழாம் வீட்டின் பலன்களைக் கூறலானார்.

வாலிபத்தில் மணம்

லக்கினத்திற்சுபர் நண்ணப் புகர்மால்பொன்
நணுகியே கேந்திர மேந்திநிற்க
நற்குலமு ளிற்குரிய பொற்கொடியை லக்கினனும்
நன்மணம் வாலிபத் தேமுடிப்பான். 163

ஜென்மலக்கினத்தில் சுபக் கிரகங்கள் தங்கியிருக்கவும், புதன், வியாழன், சுக்கிரன் முதலானோர் 1, 4,7,10 எனும் கேந்திரஸ்தானங்களில் நின்றிட அச்சாதகன் தனது குலத்தில் உத்தமமானதொரு பெண்ணை இளம்வயதிலேயே மணந்துகொள்வான் என்றபடியே.

இதுவுமது

பத்து மிரண்டுமேழ் நான்குக் கிறையவர்
லக்கினா தியுடன் பற்றிநிற்க
பாகுமொழித் தோகைமினை நாகரிக மாகவிவன்
பாலியத் தில்மணஞ் செய்வனென்றார். 164

லக்கினாதிபதியுடன், 2,4,7,10 ஆம் வீட்டுக் குடையவர் கூடி நிற்கப் பிறந்தவனும் இளம் வயதிலேயே தனது குலத்தில் நற்குணவதியை மணந்து இன்புறுவான்.

இதுவுமது

வெள்ளிஜென் மாதிவன் கூடிஜென் மத்தினில்
மேவிடக் கேந்த்ரக்கோ ணத்தேறினும்
வேலமனை நீலவிழிக் கோலமனை பாலியமே
வேட்டல்செய் வானென்று விண்டிடுவாய். 165

லக்கினாதிபதியுடன் சுக்கிரன் கூடி லக்கினத்திலோ, 1,4,7,10 எனும் கேந்திரஸ்தானங்களிலோ, அல்லது 1,5,9 எனும் திரிகோண வீடுகளிலோ தங்கினாலும் அச்சாதகனானவன் தனது குலத்தில் அழகிய கண்களையுடைய பெண்ணைத் தனது இளம் வயதிலேயே மணந்து கொள்வான் எனக் கந்தப்பெருமான் அருளிச் செய்தவாறு.

Koviloor Digital Library

ஏக களத்திரம்.

தேய்மதி யேழி லிருந்திடி னும்பொல்லாத்
தீயர் இருந்திடப் பார்த்திடினும்
சித்தசநி கர்த்தவனுக் கித்தலமேற் பத்தினியோர்
தேவியென் றேசெப்பு திருமுனியே. 166

"தவஞானியாகிய அகத்தியனே தேய்பிறைச் சந்திரனானவன் ஏழாம் வீட்டில் இருந்திட அவனுடன் பாபக் கோள்கள் தங்கினாலும், பாபக்கோள்களால் பார்க்கப்பட்டாலும், சன்மார்க்கத்தினானாகிய அச்சாதகண் ஒருமனைவியுடன் ஏகபத்தினி விரதனாக விளங்குவான் என்று பலன்கூறுவாயாக'' என்று கந்தக் கடவுள் காட்டியருளியபடியே.

இதுவுமது

ஏழிரண் டோர்களும் ஆட்சியி லேயவர்
எய்திடத் தீயர்பார்க் காதிருந்தால்
இவ்வுலகில் நவ்விவிழிச் செவ்வியளைப் பவ்வியமாய்
ஏக களத்திரத் தின்புறுவான். 167

லக்கினத்திற்கு இரண்டு, ஏழாம் வீட்டுக்குடையவர்கள் தத்தமது வீடுகளிலேயே ஆட்சி பெற்று அர்ந்திருக்க, அவர்களைப் பாபக் கோள்கள் பார்க்காதிருந்தால் இம்மண்ணுலகில் அழகிய கண்களையுடைய ஒரே மனைவியுடன் (ஏகபத்தினியுடன்) இன்புற்று வாழ்ந்திருப்பான் எனக் குமரக்கடவுள் அருளியவாறு.

உபய தாரம்

சத்த மாதிபுகர் நீசாமி சத்திலே
சார்ந்திடப் பாவவர்க் கத்தினிலாய்ச்
சாதகனுக் காதலியைப் போதரவில் லாதுவிரு
தாரத்தி னாலனு கூலத்தனாம். 168

ஏழாமிடத்திற்கதிபதியும், சுக்கிரனும் நவாம்சசக்கரத்திலே தங்களது நீச வீடுகளில் நின்றிடவும், அல்லது பாபக்கோள்களின் வர்க்கங்களில் தங்கிடப் பிறந்தஜாதகனானவன், களத்திர நாசமில்லாது இரண்டு மனைவியரை மணந்து ஆனந்தமாக வாழ்வான்.

இதுவுமது

ஏழினிற் பாவர்க லோழினுக் கேழாதி
யீராறிற் செல்லநீ சாமிசமாய்

Koviloor Digital Library

எய்திடவும் மைதவழ்கண் கைதவறென் றொய்திலிரு
தாரத்தின் பாரத்தை யேற்றவனாம். 169

லக்கினாதிபதியானவன் இராசிச் சக்கரத்திலே 12 ஆம் வீட்டிலும், நவாம்ச சக்கிரத்தில் தனது நீசவீட்டிலும் தங்கியிருக்க, இராசிசக்கரத்தில் லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் பாபக் கோள்களும் கூடியிருக்கப் பிறந்த ஜாதகனானவன் இரண்டு மனைவிகளை அடைந்து சிரமமான குடும்ப பாரத்தை யேற்று துன்பமான வாழ்க்கை வாழ்வான் என்று முருகப் பெருமான் அருளிச் செய்தவாறு.

இதுவுமது

காமன்வாக் காதியெட் டீராறில் நிற்கவக்
காமத்தில் சென்மாதி பாவருடன்
கண்டிடவும் நின்றிடவும் மன்றல்மனை பொன்றியபின்
மணமுடித் தணங்கோ டிணங்கிவாழ்வான். 170

7ஆம் வீடு, 2ஆம் வீடுகளின் அதிபதிகள் 8, 12 ஆம் வீடுகளில் நிற்க, 7 ஆம் வீட்டில் லக்கினாதிபதி பாவக் கிரகங்களுடன் கூடி நின்றாலும் அல்லது 7ஆம் வீட்டைப் பார்த்தாலும் திருமணத்திற்கு முன்பே யொரு பெண்ணுடன் வாழ்ந்து பின் மனைவியுமாக இரண்டு பெண்களுடன் வாழ்க்கை நடத்துவான் என்று கந்தவேள் அருளியவாறு.

இதுவுமது

இனியவே ழானுச்சம் பாவரும் மெய்தவீ
ராறிற்சேய் வெள்ளிபா ராதிருந்தால்
இனிமைதருங் கனியின்மொழி வனிதைதனை முனமேயிழந்
தித்திரு தாரத்தைப் பற்றவனாம். 171

லக்கினத்திற்கு ஏழாம் வீட்டிற்குடையவன் தனது உச்ச வீட்டிலிருக்க, 12ஆம் வீட்டில் பாபக்கிரகங்கள் தங்கியிருக்க, இவ்வீடுகளைச் செவ்வாய், சுக்கிரன் பார்க்காது போனால் அருமையான இன்மொழி பேசும் தன் மனையாள் இறந்துபோய்விட மறுதாரத்தை மணந்து வாழ்பவனாவான் என்று முருகவேள் மொழிந்தியவாறு.

மூன்றுதாரம்

பற்றவே ழில்ரண்டிற் பாவரத் தானாதி
பார்க்க்வன் பாவவர்க் கம்அடைந்தால்
பன்னியர்கள் முன்னிருவர் தன்னைமணந் தின்னலினாற்
பாரிமூன் றாந்தாரம் வதுவை செய்வான். 172

Koviloor Digital Library

சோதிட ஒயிற் கும்மி

2,7 ஆம் வீடுகளின் அதிபதிகள் தனது வீட்டிலேயே ஆட்சியாகி பாபக்கிரக சேர்க்கையோடு இருக்க புதன் பாவிகளின் வர்க்கத்தினைச் சென்றிருக்கப் பிறந்த ஜாதகனானவன், முன்பே இரண்டு மனைவியரை மணந்திருந்தும், அவர்களால் ஏற்பட்ட துன்பந்தாளாமல் மூன்றாவதாகவும் ஒரு பெண்ணை மணந்து கொள்வான்.

நான்கு களத்திரம்

உதய மிரண்டேழிற் பாவ ரிருந்ததற்
குடையவர் புகர்நீச முற்றிருந்தால்
உலகிற்புக ழிலகும்படி குலமைந்தரு மிலையென்றிவன்
ஒண்டொடி நான்கை மணம்புரிவான். 173

லக்கினம், இரண்டாம், ஏழாம் வீடுகளில் பாபக் கோள்கள் தங்கியிருக்க 1,2,7 ஆம் வீடுகளின் அதிபதிகள் தனது நீச வீடுகளில் நிற்க, மேலும் சுக்கிரபகவானும் நீசம் பெற்றிருந்திடப் பிறந்த ஜாதகனானவன், உலகில் தன்னுடைய குலம் விளங்க வாரிசு இல்லாமையால் ஒருவர்பின் ஒருவராக நான்கு பெண்களை மணந்துகொள்வான் எனக் கந்தன் அருளியவாறு.

ஆறு களத்திரம்

நவத்திற் புகர்பத்தில் ராகுமெழா துச்சம்
நணுகக் கேந்தரகோணத் தேயிருக்க
நாடிமனஞ் தேடியிவன் நீடுமனப் பேடவர்கள்
நவிலாறு பேரை மணமுடிப்பான் 174

லக்கினத்திற்கு ஒன்பதாமிடத்தில் சுக்கிரனும், பத்தாமிடத்தில் உச்சம்பெற்ற ராகுவோ இருந்தாலோ அல்லது இராகுவானவன் 1,4,7,10, எனும் கேந்திரஸ்தானங்களிலோ அல்லது 5,9 எனும் திரிகோண வீடுகளிலோ தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனானவன் பொல்லாத காமஆசையால் ஆறுபெண்களை மணந்து சுகித்திருப்பான்.

களத்திர குணானுபவம்

மந்த னுடன்காமத் தானாதி யும்பொன்னும்
மன்னிட வுங்குரு பார்த்திடவும்
மலர் மென்கொடி யுலவும்மெனத் தலமும் புகழ் குலமங்கையை
வதுவைசெய் வான்தர்ம சீலியைத்தான். 175

சனியுடன் 7ஆம் வீட்டிற்குடையவனும், வியாழனும் சேர்ந்து தங்கியிருந்தாலும் அல்லது சனியும் 7 ஆம் அதிபனும் கூடியிருந்த வீட்டைச் குருபகவான் பார்த்தாலும் அப்போது பிறந்த ஜாதகனானவன் உலகம் புகழத்தக்க வகையில் அழகிய மாது ஒருத்தியை மணமுடிப்பான், அம்மாது நல் சிந்தனையுடைய உத்தம குணம் உடையவளாதலால், மகிழ்ந்து வாழ்வான் என்றவாறு.

Koviloor Digital Library

பர ஸ்திரீ

சிலையுமே ழாறுக் குடையவர் கூடிடச்
செப்பிய வேழினிற் பார்த்திருக்க
தீரவிப சாரபர நாரிதனைச் சேருமிவன்
செங்கைவே லாயுதன் செப்பினரால். 176

ஜென்மலக்கினத்திற்கு ஆறு, ஏழாம் வீடுகளுக்கு அதிபதிகள் கூடித் தனுசு இராசியில் நின்றாலும், அல்லது 6,7 ஆம் வீடுகளின் அதிபதிகள் ஏழாம் வீட்டைப் பார்த்தாலும் அப்போது பிறந்த ஜாதகனானவன் விபசாரத்தைத் தொழிலாகக் கொண்ட தாசிப் பெண்களைச் சேர்ந்து திரிவான் என்று சிவந்த அழகிய கரங்களையுடைய சக்திவேலை ஆயுதமாகத் தரித்த கந்தக்கடவுள் கூறியருளியபடியே.

நல்ல களத்திரம்

தோன்றுஞ்சென் மத்திலேழ் ஊதியந் திற்புதன்
துய்ய மதிகூட நின்றிருக்கத்
தோகைமயி லாகுமெனப் பாகுமொழி யாகிநற்
சுந்தரி யுஞ்சுகம் நல்குவளாம். 177

ஜென்ம லக்கினத்தில் ஏழாம் வீட்டிற்குடையவனும், பத்தாம் வீட்டில், அல்லது 11 ஆம் வீட்டில் புதனும் நின்றிருக்கப் புதனுடன் வளர்பிறைச் சந்திரன் சுபக்கிரகங்களின் சாரத்தைப் பெற்றுக் கூடியிருக்கப்பிறந்தவனின் மனைவியானவள், நல்ல குணவதியும், அழகியும், நிறைந்த அன்பு பொருந்தியவளுமான உத்தம மங்கையாவாள் எனக் கந்தவேள் அருளினர்.

பாக்கிய களத்திரம்

சுங்கனுக் கேழிற்பொன் மால்மதி நிற்கினும்
தூயஜென் மத்தேழ் புகர்நிற்கினும்
துடியிடைநற் பிடிநடைபொன் குடமுலையின் வடிவுடைய
தோகை பாக்கியத்திற் றுலங்குவளாம். 178

ஒருவனின் ஜாதகத்தில் சுக்கிரன் நின்றவீட்டிற்கு ஏழாம் வீட்டில், சந்திரன் புதன் வியாழன் இவர்கள் கூடிநின்றாலும் அல்லது லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சுக்கிரன் நின்றாலும், உடுக்கினைப்போன்ற இடையும், பெண்யானை போன்ற எழிலான நடையும், கும்பகலசம் போல விம்மிப் புடைத்த அழகிய மார்பகங்களும் மயிலைப் என்ற எழிலான சாயலும் கொண்ட ரூபவதி மனையாளாக வாய்ப்பாள்.

வஞ்ச களத்திரம்

மதியுஞ் சனிகூடி யேழி லமர்ந்திட
மார்கி மவர்க்கெதிர் பார்த்திடவும்

Koviloor Digital Library

மனமுங்கொடுங் கனலுமெனச் சினமீறினள் தன்மன்னனை
வஞ்ச மியற்றும்பொல் லாதவளாம். 179

ஜென்மலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சந்திரனும், சனியும் கூடியிருக்க அவர்களை மாந்தி பார்த்திட அச்சாதகனின் மனைவியாக வாய்ப்பவள் கொடுமையான மனம் கொண்டவள், கோபக்காரி, ஆத்திரம் மீறினால் கணவனுக்கேகூட வஞ்சகம் செய்யத் தயங்காதவளாக இருப்பாள் எனக் குமரவேள் உரைத்தபடியே

ரோக களத்திரம்

பொல்லாத சேயுமோ ரேழி லிருக்கநற்
புங்கவர் பார்க்கா திருக்குமெனில்
புரவலனும் மருவுமனை யரியபவம் புரிவடினம்
பொதியுடல் ரோகிது ரோகியென்பாய் 180

ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம்வீட்டில் செவ்வாய் இருக்க அவனை வியாழபகவான் பார்க்காமல் இருந்தால் அச்சாதகன் சிறந்த தர்ம சீலனாவான் இருப்பினும் அவனது மனைவியானவள் வியாதியினால் பாதிக்கப்பட்டு இன்னல் ஏற்படுத்துவாள்.

துஷ்ட களத்திரம்

எரிகுஜன் பாந்தள்சுன் னேழி லிருக்கினும்
இரவி யம்சத்திற் பாவுர் நிற்கினும்
இல்லிற்கடுஞ் சொல்லைப்புகல் எல்லர்க்கிவள் பொல்லாதுமி
யற்றுமோர் துஷ்டை யெனப்புகலே 181

ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் செவ்வாயும், சனியும் கூடியிருக்க சூரியனின் நவாம்சத்தில் பாபக்கோள்கள் தங்கிடப்பிறந்தவன் மனைவியானவள் கடுமையான வார்த்தைகளைப் பேசக்கூடியவளாவாள், துஷ்டத்தனமான நடத்தையுடையவள், எவரிடத்தும் சிறிதளவும் அன்போ அனுசரனையோ பாராட்டா, சிடுமூஞ்சி எனப் பெயர்வாங்குவாள் எனக்கூறுவாய் அகத்தியனே என்று கந்தன் அருளியவாறு

பாவ களத்திரம்

புகருக்கே ழிற்புவி மைந்தனும் நின்றிடப்
புண்ணிய நல்லோர் பார்க்கா திருக்கில்
புகலச்சனை பகையாக்குவள் அக்குற்றுள ரிகழுந்தொழில்
பூட்டிமூட்டும் பொல்லாப் பாவியென்பாள். 182

ஒருவனின் ஜாதகத்தில் சுக்கிரனுக்கு ஏழாம்வீட்டில் பூமிகாரகனான செவ்வாய் நின்றிட அவ்... அவனைச் சுபக் கோள்கள் பார்த்திடாதிருந்திட அவ...

Koviloor Digital Library

மனைவி, அண்டை அயலார் முதல் உறவினர்வரை அனைவரையும் பகைத்துக் கொள்வாள். தனது கணவனின் குடும்பத்தினரைக் கணவனுக்கெதிராகத் திருப்பிவிடும் கொடூரமான குணமுடைய பாபியாவாள் என்று சுப்பிரமணியப்பெருமான் அருளியவாறு.

பெற்றிழப்பள்

பொன்னவன் பாவருடன் கூடி ஏழிற்
பொருந்தி யிருந்திடிற் புண்ணியர்க்குப்
புத்தமுத மொத்தமொழி வித்தகியு மித்தரையிற்
புதல்வரைப் பெற்றிழப் பாளென்றுரை. 183

தேவகுருவாகிய வியாழபகவானுடன் பாபக்கோள்கள் கூடி ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் நின்றிருக்க அச்சாதகனின் அருமையான புத்தம்புதிய அமிர்தம் போன்ற நற்சொற்களைப்பேசும் மனையாளானவள் வினைப்பயன் காரணமாக இப்பூமியில் மகன்களைப் பெற்று இழந்துவிடுவாள் என்று குமரவேள் அருளியவாறு

பசப்பி களத்திரம்

பாவ ருடன்வெள்ளி நீசத்தி லேறிடப்
பாவ வர்க்கத்தி லிருந்திடினும்
பாரோடெழிற் புருடர்க்கினி துறவாகியே திரிவஞ்சகி
பாசக் கள்ளிதாரஞ் சேருவனாம் 184

கன்னியா ராசியிலே நீசம்பெற்றுச் சுக்கிரன் நிற்க அவருடன் பாபக் கோள்கள் சேர்ந்திருந்தாலும், சுக்கிரன் பாபிகளின் வர்க்கத்தில் சென்றிருந்தாலும் அச்சாதகனின் மனைவியானவள் கணவனுடன் அன்பாக இருப்பதுபோல நடந்துகொண்டே வேறு அழகிய ஆடவர்களை அணைந்து சோரம்போனவளாய் திருட்டு வாழ்க்கை வாழ்வாள்.

கணவன் காண விபசாரி

ஜென்ம லக்கினத்துக் கேழ்புகர் வீடுச்சம்
சேய்சனி நிற்கப்பொன் பாரானெனில்
சேலின்விழி நீலிமனன் பாலிலிருந் தாலும்பலர்
சேரும் விபசாரி தேவியென்பாய் 185

ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சுக்கிரன் உச்சம்பெற, செவ்வாயும், சனியும் சுக்கிரனுடன் சேர்ந்திருக்க, வியாழபகவான் பார்க்காவிட்டால். அவன்மனைவி கணவனுடன் இருந்தாலும் பல ஆண்களுடன் விபசாரத்தில் ஈடுபடுவாள், கணவன் அறிந்திருந்தும் ஏதும் செய்யத் திராணியற்றிருப்பான் என்றவாறு.

Koviloor Digital Library

மலடி

தோன்று முதையத் திரவியே ழிற்புகர்
துன்ன வியாழம்பா ராதிருக்கில்
சுந்தரியின் சிந்தைமகிழ் சந்ததியில் வந்தியெனச்
சொல்லுங் களத்திரத் தோடுறைவான் 186

ஜென்ம லக்கினத்தில் சூரியனும், ஏழாம்வீட்டில் சுக்கிரனும் தங்கியிருக்க இவர்களை வியாழ பகவான் பார்க்காவிட்டால் அச்சாதகனின் மனைவியானவள் சந்ததிகளை ஈன்றெடுக்க முடியாத மலடியாயிருப்பாள் என்றவாறு.

வந்தி

மந்தன் புதன்ரவி யேழிடத் தொன்பதில்
மந்திரி நிற்காதெப் பாவத்திலோ
மன்னிடுகில் கன்னல்மொழி மின்னைவயிற் றின்னலுறும்
வந்தி யெனுந்தாரம் மருவுமென்றார் 187

ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சூரியன், புதன், சனி கூடியிருந்திட ஒன்பதாம் வீட்டில் வியாழபகவான் தங்காவிட்டால், கரும்புபோன்ற இனிமையான மொழிபேசும் ஜாதகனின் மனைவியாளும் மலடியாவாள் என்று கந்தன் உரைத்தபடியே.

கணவனைக் கொல்லுங் களத்திரம்

அம்புலி யங்கிஷ மேழிடத் தாகஅவ்
வேழுக் கிறைலக்கி னத்திருக்கில்
ஆடவர்பால் கூடிமனம் நாடியிடத் தோடிமனம்
ஆளனை யாங்கு வதைத்திடுவாள். 188

களத்திர காரர்களாகிய சுக்கிரபகவான் ஜென்மலக்கினத்திற்கு ஆறு, எட்டாம் வீடுகளில் தங்கிட, அவருடன் லக்கினாதிபதியானவனும் கூடியிருக்கப் பிறந்த ஜாதகன் கிளிபோன்ற இனிமையான குரலுடைய மங்கையர் எத்தனை பேரை மணந்தாலும் அவர்கள் இறந்து போய்விடுவர், அதுமட்டும் அல்லாது, அவனது சொத்துக்களும் பொன் பொருள் போன்றவையும் சேதமாகிப்போகும். அப்படியான மோசமான வாழ்க்கை நிலை வாய்க்கும் என்று கலியுகவரதனாகிய சுப்பிரமணியக்கடவுள் மாதவமுனிவராகிய அகத்தியர் பெருமானுக்குக் கூறியருளியபடியே.

களத்திரமும் பொருள் நட்டமும்

சல்லியன் ஆறெட் டிற் றங்கிடச் சென்மாதி
தானு மவருடன் கூடிநிற்கில்

Koviloor Digital Library

தத்தைமொழி வித்தகிமா ரெத்தனைவேட் டத்தனைநற்
றாரம் பொருள்நஷ்டத் தால்சலிப்பான் 189

களத்திர காரகனாகிய சுக்கிரபகவான் ஜென்மலக்கினத்திற்கு ஆறு, எட்டாம் வீடுகளில் தங்கிட, அவருடன் லக்கினாதிபதியானவினும் கூடியிருக்கப் பிறந்த ஜாதகன் கிளிபோன்ற இனிமையான குரலுடைய மங்கையர் எத்தனை பேரை மணந்தாலும். அவர்கள் இறந்து போய்விடுவர், அது மட்டும் அல்லாது. அவனது சொத்துக்களும், பொன் பொருள் போன்றவையும் சேதமாகிப் போகும்; அப்படியான மோசமான வாழ்க்கை நிலை வாய்க்கும் என்று கலியுக வரதனாகிய சுப்பிரமணியக்கடவுள் மாதவமுனிவராகிய அகத்தியர் பெருமானுக்குக் கூறியருளியபடியே.

புருடரனுகூல சோரம்

துங்கஜென் மாதியே மூாதியோ ராறினிற்
றுன்னிட வாறுளன் பார்த்திடவும்
தோகையுடன் போகவினைத் தாகமிலா தாகையினாற்
சோரம் போவட்கனு கூலமென்பாய் 190

ஜென்ம லக்கினாதிபதியும், ஏழாம் வீட்டிற்கதிபதியும் கூடி ஆறாம் வீட்டில் தங்கியிருக்க அவர்களை ஆறாம் வீட்டின் அதிபதி பார்த்தால், அச்சாதகன் ஆண்மைக் குறைவு உடையவனாவான், மனைவியைக் கலவியின்பத்தில் சந்தோஷப்படுத்த இயலாது போனதால், தன் மனைவி சோரம் போவதைத் தடுக்காத விட்டுவிட அவன் மனைவி சந்தோஷமாகவே கணவன் அனுகூலத்துடன் சோரப் போவாள் என்றவாறு.

விதவையைச் சேரல்

உதைய மிரண்டேழில் மாந்தி சனிராகு
மொன்றாகக் கூடியே நின்றிடுகில்
உரிமையுடன் பரிவின்மணம் புரியும்மனை பிரிவிலுற
ஓதும் விதவைய்யைச் சேருவனாம். 191

ஜாதகன் ஒருவனின் இராசிச்சக்கரத்திலே லக்கினம், இரண்டு ஏழாம் வீடுகளில் ஒன்றில், மாந்தி, சனி இராகு இவர்கள் கூடிநின்றிருந்தால் அவன் முறையாகத் திருமணம் செய்து கொண்ட கணவனை இழந்த விதவையை மறுமணம் செய்து கொள்வான்.

மாதா விஷயன்

சேரும் புகர்மதி கூடியோ ரேழினிற்
செல்லச் சுபர்கள்பா ராதிருக்கில்
திங்கள்முக மங்கையினோ டிங்கிதமும் பங்கமுறச்
செய்துபின் றாயுடன் சேருஞ் சீலன் 192

Koviloor Digital Library

ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சந்திரவம், சுக்கிரனும் கூடியிருக்க அவ்வீட்டைச் சுபக்கிரகங்கள் பார்க்காவிட்டால் அப்போது பிறந்த ஜாதகன் தான் மணந்த மனைவியின் உறவில் சச்சரவு மூண்டுபோக தனது தாயைச் சேர்ந்து வாழும் நீசப் பிறப்பாவான் இவன்வினையை என்ன சொல்ல?

இதுவுமது

சீலநான் கேழுக் குடையவர் கேந்திரஞ்
சேரஜென் மாதியுங் கூடி நிற்கில்
தீதெய்திடச் சாதகன்பிதுர் காதல்மனை மீதின்மயல்
சிந்தித்து நத்துவன் வித்தகனே. 193

இன்னும் ஒரு ஈனப்பிறவி கேள் வித்தக முனிவனே 4,7 ஆம் வீட்டதிபதிகள் 1,4,7,10ல் கேந்திரம் பெற லக்கினாதிபதியும் அவர்களுடன் சென்று தங்கியிருக்கப் பிறந்தவனும் முன்கவியில் கூறியதுபோலத் தாயை மோகித்து வாழ்பவனாவான் என்று கந்தவேள் உரைத்தபடியே.

சோதரி விஷயன்

வித்தக னேழு மிரண்டுடை யோர்புகர்
மேவிட மூன்றுநா லாமிடத்தில்
மிக்கபலம் புக்கிடவுந் துக்கவினைக் குக்கிரனாய்
விழைவுசெய் வன்சோ தரியின் மீது. 194

மற்றமொரு அசிங்கமான பிறவியைக்கேள் அகத்தியனே 2,7 ஆம் வீட்டுக்குடையவர்களுடன் சுக்கிரன் கூடி 3,4 ஆம் வீடுகளில் சென்று பலம்பெற்றுத்தங்கிடப் பிறந்தவன் தனது பொல்லாத தீவினை காரணமாகத் தனது சகோதரியுடன் சல்லாபனாகி நீசவாழ்வு வாழ்வன் என்று கந்தவேள் உரைத்தவாறு.

இதுவுமது

மின்னேமூன் றுக்குடை யோனும் பாவருடன்
மேவிடப் பார்க்கிற் பொன் பார்வையின்றி
வேதமுணர் மாதவனே சாதகனுஞ் சோதரிமேல்
வேள்கணை பூட்டி விரும்புவனாம். 195

வேத நூல்களை ஆய்வுசெய்து உணர்ந்த பெருந்தவசீலனான மாமுனி அகத்தியனே வேறு ஒரு நீசனின் முறைகேள். லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் தீய பாவக்கோள்களுடன் கூடி ஏழாம் வீட்டில் நின்றாலும், ஏழாம் வீட்டைப்பார்த்தாலும், அவ்வனை வியாழபகவான் பார்க்காதிருந்தால் இவனும் சகோதரியைக் கூடும் காமுகனாகும்.

புத்திரி விஷயன்

விரும்பப் புகர்பொன்னுங் கேந்திரத் தின்மேவ
வீரைந் துளன்பாவ ரோடுறவும்

Koviloor Digital Library

வெற்றிமலர் முற்றுகணை யுற்றதினால் பெற்றமகள்
மீது மதன்கணை மேவிடுவான். 196

1,4,7,10 என்னும் கேந்திர வீடுகளில் ஒன்றில் வியாழனும், சுக்கிரனும் தங்கியிருக்க 10ஆம் வீட்டிற்குடையவன் பாபக்கோள்களுடன் சேர்ந்து தங்கியிருக்கப் பிறந்தவன் காம வெறி மேலிட்டவனாகத் தர்மநெறி மறந்துபோய்த் தான் பெற்றெடுத்த மகளை மோகிக்கும் கொடூரப் பிறவியாவான் என்னே இவன் எடுத்த சென்மம்.

எட்டாம் பாவகம்

ஆடு மயிலேறும் ஆறுமு கன்பாத
மந்தணன் றாழ்ந்துமெட் டாம்பலத்தை
அறையுமென மறையுணர்வா னுரைசெயவு முருகபிரான்
அன்புட னாயுட்சீ ரருளுவரால். 197

தோகை விரித்து ஆடி மனங்கவரும் மயிலை வாகனமாகக் கொண்ட ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை வணங்கி பொறுமையில் சிறந்த குறுமுனியாம் அகத்தியரும் எட்டாம் வீட்டின் பலன்களைக் கூறியருளும்படி வேண்டிடக் கருணை வடிவான முருகப்பெருமானும் அன்புடன் அகத்தியருக்கு ஆயுள் ஸ்தானத்தின் பலன்களைத் திருவாய் மலர்ந்து உரைத்தருளினார்.

ஓராண்டு

மாடுகோ ளட்டமமாக வதிற் பாவர்
மன்னிட வும்ரவி பார்த்திடவும்
மதலைக்குறு சிதலைக்கொடு விதனத்துடன் விதியாண்டினில்
மாய்ந்திடு வானென வாய்த்திடுவாய். 198

லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டிற்குடையவன் எட்டாம் வீட்டில் பாபக் கோள்களுடன் தங்கியிருக்க அவரை சூரியன் பார்த்திட்டால் அப்போது பிறந்த குழந்தை தனது முதலாம் ஆண்டிற்குள் இறந்து போய்விடும் என்றவாறு.

அற்பாயுள்

கேந்திரத் தானாதி பாவ ருடன்கூடி
கிட்டிட வெட்டோனிவ் வாறிருக்கில்
கெர்ப்பத்தினி லுற்பத்தியி னற்புத்திர னற்பாயுளைக்
கேட்டுவந் தானிந்த நாட்டிலென்பாய். 199

1,4,7,10 என்னும் கேந்திர வீடுகளின் அதிபதிகள் பாபக் கோள்களுடன் கூடியிருக்க அதேபோல எட்டாம் வீட்டிற்குடையவனும் பாபர் சம்மந்தம் பெற்றிருக்கப் பிறந்த ஜாதகன் முன் ஜென்ம வினையால் இறைவனிடம் வாங்கி வந்த வரத்தினால் அற்பாயுளில் இறந்துபோவான் என்று கந்தவேள் அருளியவாறு.

Koviloor Digital Library

தீர்க்காயுள்

அட்ட மாதிமூல மாட்சியுச் சம்பெற
வாயுட் சனிசுப ரோடிருக்கில்
ஆர்க்கும்புவி யோர்க்கும்பல பேர்க்கும்புகல் தீர்க்காயுளை
அண்ண லருளிய திண்ணமென்றார். 200

லக்கினாதிபதி எட்டாமிடத்தின் அதிபதி இவர்கள் ஆட்சி, உச்சம் முதலிய உத்தம வீடுகளில் தங்கியிருக்க ஆயுள் காரகனாகிய சனிபகவான் சுபர் நடுவில் தங்கியிருக்கப் பிறந்தவன் தீர்க்கமான நிறை ஆயுளைப் பெறுவான் இது ஆறுமுக அண்ணல் அறிவித்த மொழி ஆகையால் திண்ணமான உண்மை என்று அகத்திய மாமுனிவர் அருளியபடி.

இதுவுமது

லக்கினத் திற்கேந்தி ரேச னிருக்கவும்
லக்கினாதி வியத்திற் சுபருடனே
நண்ணிடுகில் மண்ணினில்மைக் கண்ணியரின் புண்ணியனும்
நவிலுந்தீர்க் காயுளாம் நன்முனியே. 201

1,4,7,10 எனும் கேந்திர வீடுகளின் அதிபர்களில் ஒருவர் லக்கினத்தில் நின்றிட, லக்கினாதிபதி 12ஆம் வீட்டில் சுபக்கிரகங்களுடன் கூடித்தங்கியிருக்க, இப்புவியில் மைவிழி மாதர்கள் பெற்றெடுத்த குழந்தையின் ஆயுளானது, நீண்டு நிறை ஆயுளாக இருக்கும் என்று கூறுக முனிவர்களில் நல்ல உத்தமனாகிய அகத்தியனே என்று சுப்பிரமணியக் கடவுளானவர் திருவாய்மலர்ந்து அருளியபடியே.

இதுவுமது

சட்ட மாதிலக்கி னாதியுடன் கூடித்
தானிருக் கச்சுபர் தான்பார்க்கில்
தாரணியிற் காரகனுக் காரணனும் பூரணமாய்ச்
சாற்றுந்தீர்க் காயுளே சற்குணனே. 202

எட்டாமிடத்திற்குடையவன் லக்கினாதிபதியுடன் கூடியிருக்க அவரைச் சுபக்கிரகங்கள் பார்த்திடப் பிறந்த ஜாதகனும் நீண்ட பூரண ஆயுளைப் பெறுவான் என்று கூறுவாய் சற்குணனான அகத்தியனே என்று குமரக்கடவுள் நவின்றவாறு.

இதுவுமது

நாலுக் குடையவன் கேந்திரிக்க வெட்டோ
னானோனுஞ்சொட் சேத்ரகோ ணத்திருக்கில்
நாதமருள் சேர்ந்தாயின் சாதகனுக் கோதியதீர்க்
காயுளை நற்றவா சொற்றிடுவாய். 203

Koviloor Digital Library

லக்கினத்திற்கு நான்காம் வீட்டிற்குடையவன் 1,',7,10 எனும் கேந்திர வீடுகளில் ஒன்றில் தங்கியிருக்க, ஆயுள் ஸ்தானமென்னும் எட்டாம் வீட்டின் அதிபதி ஆட்சியாகவோ, கேந்திர, திரிகோண வீடுகளில் ஏதேனும் ஒன்றிலோ இருக்க இறைவனின் திருக்கருணையால் மங்கை ஈன்றெடுத்த பாலனுக்கு ஆயுள் தீர்க்கம் என்று கூறுவாய் தவத்தில்சிறந்த குறுமுனியே என்று முருகப்பிரான் உரைத்தனர்

இதுவுமது

புங்கவர் கேந்திர மேறலக் னாதிநற்
புங்கவ ரோடுறப் பொன்பார்க்கில்
புண்ணியனும் மண்ணுலகில் நண்ணியபி னெண்ணமுநா
றாயுள் புகலுதி பொதிகை வேந்தே. 204

வியாழ பகவான் 1,4,7 10 எனும் கேந்திர வீடுகளில் ஒன்றில், லக்கினாதிபதியுடன் கூடியிருக்கவோ, அல்லது கேந்திரம் பெற்ற லக்கினாதிபதியைக் குருபகவான் பார்க்கப் பிறந்தவன், இப்புவியில் புண்ணியவானும், நீண்ட ஆயுளைப் படைத்தவனுமாவான் என்று கூறுவாய் பொதிகைமலையின் அரசனென்று சித்தர் வர்க்கம் புகழ்ந்து போற்றும் அகத்தியனே என்று கந்தவேள் கழன்றபடியே.

இதுவுமது

பாவர்மூன் றாறினி லேபதி னொன்றினிற்
பதியச் சுபர்கேந்திர கோணத்தினிற்
பற்றிடவும் நற்றவனே பெற்றமகர்க் குற்றவய
தீர்க்கமென் றேநீ பகர்ந்திடுவாய். 205

தவத்தில் சிறந்த அகத்தியனே பாபக்கோள்கள், 3,6,11 முதலிய வீடுகளிலும் சுபக்கோள்கள், 1,4,7,10 1,5,9 எனும் கேந்திர, திரிகோணவீடுகளிலும் தங்கியிருக்கப் பிறந்தவன் தீர்க்காயுளைப் பெறும் யோகவான் என்று கூறுவாய் என்று சுப்பிரமணியர் திருவாய் மலர்ந்தருளியவாறு.

அற்பாயுள்

ஆறெட்டீ ராறினிற் பாவர்க ளுற்லக்கி
னாதி பெலகீன னாயிருக்கில்
ஆதிபரன் மீதுஜெப மாதுபெறு சாதகனுக்
கற்ப வயதென்பாய் விற்பனனே. 206

வித்தைகளில் சிறந்த முனிவனே லக்கினத்திற்கு 6,8. 12 ஆம் வீடுகளில் பாபக் கிரகங்கள் நிற்க, லக்கினாதிபதியும் பலமற்றுப்போயிருக்கப் பிறந்த ஜாதகன் அவன்தாயார் ஆதிவேளை வழிபட்டுப் பெற்ற மகனாயினும் அற்பாயுள் பெற்றுப் போவான் என்று கூறுவாயாக என தமிழ்க்கடவுள் முருகவேள் கூறியபடி.

Koviloor Digital Library

இதுவுமது

அ ! மாதிபதி சட்டி யங்கிஷத்தி
லாகி யரியுடன் கூடிநிற்கில்
அங்கமெழிற் றங்கியபே ரெங்குதவு மிங்கிவனுக்
கற்ப வயதென்றார் சிற்பரனே. 207

எட்டாம் வீட்டிற்கு உடையவன் ஆறாமதிபதியின் நவாம்சத்தைப் பற்றியிருக்க அவனுடன் சூரியனும் சேர்ந்திருக்கப் பிறந்த ஜாதகனானவன் அற்பாயுஸைப் பெற்றவனாவான் என்று சிற்பரனான முருகவேள் முழங்கியவாறு.

இதுவுமது

பன்னிரன் டோன்பாவ ரோடிருக் கச்சுபர்
பார்வைசெய் யாம லிருந்திடுகில்
பரமன்றரு முருகன்முனிக் கருள்செய்தகு சிறுவன்றனக்
கற்ப வயதைப் பணித்திடுவாய். 208

இன்னம் கேள் அகத்தியனே லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் பாபக்கோள்களுடன் தங்கியிருக்க, அவனைச் சுபக்கோள்கள் பார்க்காவிடிலும், பரமசிவன், முருகன், சித்தர்கள் அருளினால் பிறந்தவனாயினும் அச்சாதகனுக்கு அற்ப ஆயுளே என்று கூறிடுவாய் என்று கந்தவேள் கூறியபடியே.

மரணகேது

என்றிரு நான்காதி யாறுடை யோன்கூடி
இரவிமைந் தன்சிகி கூடிநிற்கில்
எத்திசையில் வைத்தபுகழ் வித்தகனுங் கத்தியினா
லிரண களமாகி ரணமாவான். 209

ஒருவனின் ஜாதகத்தில் நான்கு, ஆறாம் வீடுகளின் அதிபதிகள் கூடியிருக்க சனியும், கேதுவும் சேர்க்கையாகி இருக்க, அப்போது பிறந்த ஜாதகனானவன் எட்டுத்திசையிலும் புகழ்பெற்றுச் சிறந்த வீரனாகத் திகழ்வான் எனினும், அவனுடைய மரணமானது போர்க்களத்தில் வாளினால் வெட்டுப்பட்டு நேரும், என்று ஆறுமுகக்கடவுள் அருள்புரிந்தவாறு.

ஸ்திரீகளால் மரணம்

சோமலக் னத்தினிற் றுஷ்டர்வி யத்தினிற்
றுன்னிடப் பெண்கோள்கள் பார்த்திடவும்
சொல்லென முந்தஒரு சுந்தரிமேற் சிந்தைசெயுஞ்
சூதினாற் சாதகன் மரணமாவான். 210

ஜென்ம லக்கினத்தில் சந்திரனும், 12ஆம் வீட்டில் தீயபாவக் கோள்களும் தங்கியிருக்க, அவர்களைப் பெண் கிரகங்கள் பார்த்திடப் பிறந்த ஜாதகன் தனது

Koviloor Digital Library

உறவினளாகிய ஒரு மாதுவை விரும்பியிருக்க அம்மாதுவும் வஞ்சத்தால் ஜாதகனைக் கொன்று விடுவாள் என்றவாறு.

இதுவுமது

விண்மணி யேழினில் சென்மத் திற்சோமன்
வியத்திற் பாவருற வெள்ளிபார்க்க
மின்னனைய கன்னியர்பால் சின்னமுற வன்னதினால்
விடங்குடித் தேயிவன் மடிந்திடுவான். 211

ஜென்ம லக்கினத்தில் சந்திரனும், ஏழாம்வீட்டில் சூரியனும் பன்னிரண்டாம் வீட்டில் பாபக்கிரகங்களும் தங்கியிருக்க, இவ்வீடுகளைச் சுக்கிரபகவான் பார்த்திடப் பிறந்த ஜாதகன் இளங்கன்னி ஒருத்தியின்பால் மோகங்கொண்டு காதல் வயப்பட்டுக் காதல் நிறைவேறாத காரணத்தினால் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொள்வான் என்று முருகவேள் கூறியருளியவாறு.

திரவித மரணம்

அரிமைந்த னுஞ்சரத் தாகிற் பரதேசத்
தழிவன் திரத்திற்றன் வீட்டினிலாம்
அவயவமும் நவையுளனும் உபயமெனி லிவன்முனர்வீ
டகன்று வேறோர் வீட்டகத் திறப்பான். 212

சூரியபகவானின் புத்திரனும், ஆயுள்காரகனுமாகிய சனி பகவானானவர் தங்கிய வீடானது சரலக்கினங்களான, மேஷம், கடகம், துலாம், மகரம் முதலிய வீடுகளானால் வெளிநாடுகளில் மரணமுண்டாகும், ஸ்திரலக்கினங்களாகிய ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பமானால் தனது வீட்டில் மரணமுண்டாகும், உபயலக்கினங்களாகிய மிதுனம் கன்னி, தனுசு, மீன வீடுகளானால் வேறோர் வீட்டிலும், மரணம் சம்பவிக்கும் என்றவாறு.

ஒன்பதாம் பாவகம்

ஓங்கும் பரங்கிரி வேலரைப் போற்றிசெய்
தொன்பதாம் பாவ முனிவினவ
உத்தமனுஞ் சித்தமதாய் எத்திசையோர்க் கொத்தபல
னோதுவ துங்கே ளுணர்வுடையோய். 213

குன்றிருக்கு மிடமெல்லாம் கொலுவிருக்கும் திருப்பரங்குன்றத்தில் அரசுபுரியும் வேலவரின் அடியிணைகளைத் தொழுது கும்பமுனிவரானவர் ஒன்பதாம் வீட்டின் பலன் கூறியருளும்படி வேண்ட புவிமக்களனைவருக்கும் பொருந்தும் வகையான முறையில் பலன்களைக் கூறியருளலானார்.

பிதா தேசாந்திரம்

பகலி லுதிக்கக் கலைபூசி யிற்பானு
பற்றிடச் செவ்வாயும் பார்த்திருக்கப்

Koviloor Digital Library

பதிவிடடுநன் னிதிபெற்றிடச் சுதனுற்றிடு முதலிற்பிதா
பரதேச வாசனென் றேபகர்வாய். 214

பகலில் ஜாதகன் ஒருவன் பிறந்திடச் சாதகத்தில் சூரியனானவன் ஜலராசியில் (கடகம், மகரம், கும்பம், மீனம், ரிஷபம், துலாம் விருச்சிகம்) தங்கியிருக்க, சூரியனைச் செவ்வாய் பார்க்க, அச்சாதகனின் தந்தை ஜாதகர் பிறக்கும்முன்பே பொருள் சம்பாதிக்கும் பொருட்டு வெளி நாடுகளில் சென்றிருப்பான்.

(குறிப்பு :- கடகம், மீனம்- 100% ஜலராசிகள், மகரம், கும்பம்- 75% ஜலராசிகள், துலாம்- 50% ஜலராசி, ரிஷபம், விருச்சிகம்- 25% ஜலராசியாகும்).

தேசாந்திரம்

பகரும் நிசியி லுதிக்கச் சனிஜல
ராசியிற் பற்றிடச் சேய்பார்க்கிற்
பத்தினிசூல் முற்றிசுதன் பெற்றிடுநா ளுற்றபிதா
பரதேசத் தெய்துவ னென்றுணர்வாய். 215

இரவில் ஜாதகன் ஒருவன் ஜெனனமானால் அவன் சாதகத்தில் சனிபகவானானவன் ஜலஇராசியில் நின்றிருந்தால் அவன்தாய் அவனை ஈன்றெடுக்கும் நாளில் அவன் தந்தை வெளிநாடுகளில் பொருள் தேடச் சென்றிருப்பான் என்றறிவாயாக என்று கும்பமுனிக்கு ஆறுமுக சுவாமி அருள் புரிந்தவாறு.

இதுவுமது

உணரவொன் பானுமொன் றாகிச் சலராசி
யோங்கச் சராங்கிஷத் தேறிடினும்
ஒலிசார்கட லிலகும்புவி விலைமாதுடன் குலவுஞ்செய
லுற்றிடுவா னிதர தேசத்தினில். 216

ஒன்பதாம் வீட்டிற்குடையவன் ஜலராசிகளில் ஒன்றில் தங்கியிருந்து நவாம்சச் சக்கரத்தில் சரலக்கினத்தில் வீற்றிருந்தால், அப்போது பிறந்த ஜாதகனின் தந்தை அலைகளின் ஓசையினால் ஆர்ப்பரிக்கும் கடல் சூழ்ந்த இப்புவியின் கண் ஜாதகன்பிறக்கும்போது மற்றொரு தேசத்தில் விலைமாதர்களுடன் சல்லாபித்து வாழ்ந்திருப்பான் என்று கந்தக் கடவுள் அருளிச் செய்தபடியே.

பரதாரவிடயம்

ஜென்ம நாதனுபய ராசிதுர்த் தானமாய்ச்
சென்றதி லேறி யிருந்திடவும்
தெரிவையுடன் புறிபவமாய் மருவுமய லரிவையுடன்
சேவைசெய் தேயந்த வீட்டிருப்பான். 217

Koviloor Digital Library

லக்கினாதிபதி மிதுனம், கன்னி, தனுசு, மீனம் எனும் உபயராசிகளில் ஒன்றில் தங்கிட அந்த இராசியும் தீயஸ்தானமாக இருந்தால் அவன்தந்தை வேறொரு பெண்ணுடன் கூடியிருந்து அவளுக்குச் சேவை செய்து கொண்டிருப்பான்.

செல்வப் பிதா

பாக்கி யாதிரவி யொன்பதி லேயுறப்
பதியு மந்தராசி திரமெனிலோ
பாதவமு லாதிநிலம் ஞாதிகளால் வாதைஜெயம்
பற்றிப் பிதுர் செல்வத்தால் இருப்பான். 218

பாக்கிய ஸ்தானமென்னும் ஒன்பதாம் வீட்டிற்குடையவன் அந்த ஒன்பதாம் வீட்டிலேயே ஆட்சி பெற்றிருக்க, அந்தவீடானது ஸ்திரராசிகளான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பமானால் அச்சாதகன் பிறந்த வேளையில் அவன் தந்தை தனது முன்னோர் சொத்து வழக்கிலிருந்து மீட்டெடுத்துச் செல்வச் செழிப்புடையவனாகி இருப்பான்.

ரோக பிதா

கதிர்மகன் சேய்ரவி யொன்பதி லேநிற்கக்
காரக னோடிவ ரேறிடினும்
கன்னிவயிற் றுன்னவுஞ்சூல் பின்னர்பிதா வின்னலுறக்
கடினரோ கத்தனாய்க் கண்டிருப்பான். 219

சூரியனின் மகனாகிய சனியும், சூரியனும், செவ்வாயும் கூடி பாக்கிய, பிதுர்ஸ்தான மாகிய ஒன்பதாம் வீட்டில் நின்றாலும், பிதுர்காரகனாகிய சூரியனுடன், சனி, செவ்வாய் கூடி வேறு வீடுகளில் நின்றாலும் அந்த ஜாதகன் தன்தாய்வயிற்றில் கருவானபின் அவன்தந்தை துன்பமதிகம் தரக்கூடிய கொடும் வியாதியொன்றினால் பாதிக்கப்படுவான்.

பிதா துவேஷி

பஞ்சமத் தானத்தி லொன்பதி லேபாவர்
பதியவொன் பாதியோ டெய்திடினும்
பாரிமகன் யோில்பிதா சீறிபர தாரமதாற்
பகைசெய்து துவேஷியாய்த் திரிவனென்பாய். 220

ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து; ஒன்பதாம் வீடுகளில் பாபக்கிரகம் தங்கியிருக்க ஒன்பதாம் வீட்டுக்குடையவனும் தனது வீட்டிலேயே ஆட்சி பெற்றுத் தங்கியிருந்திடில் அவன் தந்தை தனது வைப்பாட்டியின் போதனையால் மகனைப் பகைத்துக் கொண்டு ஊரெல்லாம் மகனைத் தூற்றிக்கொண்டு அலைந்து திரிவான்.

Koviloor Digital Library

பிதாவுக்கரிட்டம்

ஜென்மத்திற் காரி மதிரவி யைந்தினிற்
சேயுறத் தந்தைக் கரிட்ட மிவ்வார்
சேய்சிகியுங் காய்கதிரும் ஆய்பருவ நேயபிதா
சேருமூன் றாண்டிற்றென் புரியிலென்பார். 221

ஜென்ம லக்கினத்தில் சனியும், சூரியனும், சந்திரனும் கூடியிருக்க ஐந்தாம் வீட்டில் செவ்வாயும் தங்கியிருந்தால் தந்தைக்குக் கண்டம் ஏற்படும் இதேபோல் சூரியனுடன், செவ்வாயும் கேதுவும் கூடியிருந்தால் ஜாதகனின் தந்தையானவன் அவன் பிறந்த மூன்றாம் ஆண்டில் தென்புரியென்னும் மயானம் எய்துவான் அதாவது இறந்துபோவான் என்று கார்த்திகேயக் கந்தன் அறிவித்தவாறு.

பிதாவுக்கு அரிட்டம்

பரிதிக் கிருபுறம் பாவரிருக்க வொன்
பானுக்கிவ் வாறுதீய்ப் பாவர் பார்க்கிற்
பத்தினிகெற் பத்திலுமுற் பத்திமதி பத்துறுமுன்
பாரில் பிதாவு மரித்திடுவான். 222

ஜெனன ஜாதகத்தில் சூரியனுக்கு முன்னும்பின்னும் பாபக்கோள்கள் தங்கியிருக்க, ஒன்பதாவது வீட்டின் அதிபதியைப் பாபக்கோள்கள் பார்த்தால் அச்சாதகனானவன் தாயின் கற்பத்தில் பத்து மாதம் நிறையும் முன்பே அவன் தந்தையானவன் இறந்து போய் விடுவான் என்றவாறு.

அதிக பாக்கியன்

இன்னமொன் பானும் பெலம்பெற் றிருந்தவி
ராசி யாதிபதி கேந்திரிக்கில்
இகமதனிற் புகழ்பெருகச் சுகமனையோ டகமகிழ
இருப்பான் பிதுர்செல்வ விதரணனாம். 223

ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டிற்கு உரியவன் பலம் பெற்றுநிற்க அவன் தங்கிய வீட்டின் அதிபதியானவன் 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் ஒன்றில் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனின் தந்தையானவன் இம்மண்ணுலகில் பெரும் புகழ்படைத்தும், செல்வச்சீமானாயும் திகழ்வான் என்றவாறு.

பாக்கியமுங் கீர்த்தியும்

தன்மதிக் கைந்தாகும் ராசி சரம்லக்னந்
தானத்திற் கைந்தில்வெண் மதிசரமாய்
தங்கபொருள் பொங்கபிதா துங்கமனைக் கிங்கிதனாய்த்
தானிருப் பான்சீர்த்தி யாயிருப்பான். 224

ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாவது வீடும், சந்திராலக்கினத்திற்கு ஐந்தாம் வீடும் சரவீடுகளாக லக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டில் சந்திரன் தங்கினபடியான

Koviloor Digital Library

ஜாதக அமைப்பில் பிறந்த ஜாதகனின் தந்தையானவன், தனது குடும்பத்திற்காக ஏராளமான பொருள் தேடியும் அனுசரனையாகவும், புகழ்பெற்று வாழ்வான். என்றவாறு.

புத்திரபாக்கியமும் செல்வமும்

ஆகும் நவத்துக் கதிபதி யுங்குரு
அன்புடன் கேந்த்ரகோ ணத்திருக்கில்
அதிசுந்தரி மதிமைந்தரும் நிதியோங்கிட பிதுர்பாக்கிய
னாகி யிருப்பனென் றருள்முனியே. 225

ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டிற்குடையவனும், வியாழனும், கூடி கேந்திரவீடுகளிலோ, திரிகோண வீடுகளிலோ ஏதாவது ஒன்றில் தங்கியிருக்கப் பிறந்தஜாதகன், அழகிய மனைவி அறிவுப்பெட்டகமாகிய புத்திரர்கள், செல்வச் செழிப்புடன் திகழும் தந்தையார் என்று இராஜ போகமான வாழ்வு வாழும் பாக்கியசாலியாவான் என்று கூறுவாய் அகத்தியனே என்று கந்தவேள் உரைத்தபடியே.

அதிக பாக்கியன்

அருளும்பாக் யாதியொன் பதிலாகி யவ்வொன்பான்
லாபாதி யேழாதி நட்பதாக
அடையச்சுப ருடன்வீட்டினில் வடிலக்கின துட னெய்திடில்
ஆயுள்மட் டும்வெகு செல்வவானாம். 226

ஜென்மலக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டிற்குடையவன் தனது வீட்டிலேயே ஆட்சிபெற்று இருந்தாலும் அல்லது ஏழு, பதினொன்றாம் வீடுகளில் அதன் அதிபதிகளுடன் கூடித் தங்கியிருக்க ஏழு பதினொன்றாம் அதிபதிகள் அவனுக்கு நட்புக் கிரகங்களாக இருந்தாலும், அல்லது 7,11 ஆம் அதிபதிகள் சுபருடன் கூடி நின்ற வீடுகள் அவர்களின் நட்பு வீடுகளானாலும், லக்கினாதிபதி, ஒன்பதாம் அதிபதி கூடி சுபர்வீடுகளில் தங்கினாலும் இப்படிப்பட்ட ஜாதகஅமைப்பில் பிறந்தவன் தனது ஆயுள் இறுதிவரையும் நீங்காத பெரும் செல்வச் சீமானாவான் என்றுவாறு.

சிவிகை

செல்வம்லா பாதிபாக் யாதியே ழாதியேழ்
செல்ல கேந்த்ரமுச்ச மனையாமெனில்
சிவிகையின்மீ திவன்பிதுருவும் பவனிவரும் புவனஜனம்
சேவைசெய் யச்செல்வ சீர்த்தியுள்ளான். 227

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, பதினொன்று வீடுகளின் அதிபதிகள் கூடி ஏழாம் வீட்டில் தங்கினாலும், அல்லது கேந்திரவீடாகவோ, உச்ச வீடாகவோ இருந்தாலும் அச்சாதகன். அவன் தந்தை ஆகியோர் பல்லக்கு, சிவிகை போன்ற

Koviloor Digital Library

ஆடம்பரமான வாகனங்களில் பவனிவரும் பாக்யயத்தினை பெற்றவர்கள் தவிர. உலக மக்கள் அவர்களை வணங்கிச் சேவை செய்வார்கள் என்றவாறு.

பத்தாம் பாவகபலன்

சத்தி வடிவேலர் பாதத் தனுதினந்
தாழ்ந்து முனிவரன் சாதகர்கள்
தரணிதனிற் புரிகருமம் அருளெனவும் முருகனுவந்
தசபல முற்றிடச் சொல்லுதும் யாம். 228

உலகமாதாவாகிய அன்னை பராசக்தியால் வழங்கப்பட்ட சக்திவேலைத் தாங்கிய வடிவேலரின் திருவடிகளை இடைவிடாது வணங்கி நின்ற அகத்திய மாமுனிவர் பத்தாம் வீட்டின் பலன்களைக் கூறியருளும்படிவேண்டிட. முருகப்பெருமானும் அன்புடன் பத்தாம் வீட்டின் பலன் கூற முற்பட்டார்.

நற்கன்மன்

சொல்லும்பத் தாதி பெலமாய்ச் சுபருடன்
தோன்றிநா லேழிற்சென் மத்திருக்கிற்
றொடரும்பவ மடரும்படி கடவுட்பத மடையும்படி
சுருதிவழி நற்கன்மந் தான்புரிவான். 229

ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் வீட்டிற்குடையவன் சுபக்கிரகங்களுடன் கூடி 1,4,7, முதலிய வீடுகளில் தங்கியிருக்கப் பிறந்தவன், தனது பழவினைகள் தீரவும், மோட்சம் என்னும் கடவுளின் பாதங்களை அடையும் வகையில் தர்மத்தில் வேதநெறி மாறாமல் நின்று புகழ் பெற்று வாழ்வான் என்றவாறு.

தீர்த்த யாத்திரை

புரியுஞ் சனிகுரு நான்கி லிருக்கவும்
புகலும்மந் தன்பத்திற் றானிருக்கிற்
போதமன சாதகனுந் தீதகல காதலுடன்
புரிவன் தவம்தீர்த்த யாத்திரைபோய். 230

வியாழனும், சனியும் நான்காம் வீட்டில் இருந்தாலும், சனிபகவான் பத்தாம் வீட்டில் தங்கியிருந்தாலும், அப்போது பிறந்த ஜாதகனானவன் தனது முற்பிறவி பாவகர்மங்கள் தீரத்தக்க வகையில் பல புண்ணியத் தீர்த்தங்களுக்குச் சென்று யாத்திரை மூலம் புண்ணியபலம் தேடிச் சேர்ப்பான் என்றவாறு.

கங்கா ஸ்தானம் (ஸ்நானம்)

பொன்னவ னொன்பதிற் புங்கவர் வீடுறப்
புனிதர்பார்க் கச்சல ராசிதனில்
பொங்குமதி தங்கிடவுங் கங்கைதனில் முங்கிடவும்
புண்ணியன் போகவும் புந்திசெய்வான். 231

Koviloor Digital Library

ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் வீடு வியாழ பகவானுடை யதாகி அவரும் ஆட்சியாகி நிற்க, வேறு சுபக்கிரகங்கள் ஒன்பதாம் வீட்டைப் பார்த்திடவும், சந்திரபகவான் ஜலராசிகளில் ஒன்றில் தங்கினால், கங்கையெனும் புண்ணிய நதியில் நீராடும் பாக்கியம் செய்தவனானவான், தீர்த்தயாத்திரைகளும் செய்வான் என்றவாறு.

தீர்த்தமாடுபவன்

புந்தி தந்தையுச்சந் தான்பெற வும்பத்திற்
புகரு மிருக்கவிச் சாதகனும்
பொன்னியுறும் நன்னதிகள் தன்னிலிவன் துன்னியேநூல்
புகலும் படியாடும் புனித னென்பாய். 232

புதபகவானும், சூரியபகவானும் தத்தமது உச்சவீடுகளில் தங்கிட பத்தாம் வீட்டில் சுக்கிரபகவானும் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனும் காவேரி, கங்கை என்னும் புனித நன்னதிகளில் நீராடி மகிழும் பாக்கியம் பெற்ற புண்ணியவானாவான்.

சிவபூசை செய்பவன்

புனிதன்பத் தாதி சுபருடன் புக்குமவ்
வீட்டிரு பாற்சுபர் பூண்டிருக்கிற்
புவிமீதினில் தவமாகியே யிவனுந்தினம் சிவபூசைகள்
பொய்யறச் செய்யும்நற் சற்குணனே. 233

ஜென்ம லக்கினத்திற்கு பத்தாம் வீட்டில் சுபக்கோள்கள் தங்கிடவும் அவ்வீட்டின் அதிபதியாகியவனும் சுபருடன் சேர்ந்திருக்க மேலும், ஒன்பதாமிடம், பத்தாமிடம் பதினொன்றாமிடம் ஆகிய மூன்று வீடுகளிலும் சுபக்கோள்களே தங்கியிருந்திடப் பிறந்த ஜாதகன் இம் மண்ணுலகில் தலைசிறந்த சிவபக்தன் என்ற பெயர்பெறுவான், மேலும் யோகம், தவம், போன்றவற்றிலும் ஈடுபட்டு நற்கருமங்கள் செய்யும் புண்ணியனாயிருப்பான்.

சிவயோகன்

குருதிமந் தன்புதன் பொன்னவ னும்புகர்
கூடியோர் வீட்டி லிருந்திடவும்
கோதகலும் மாதவர்பாற் போதமுறச் சாதகனுங்
கூடிச் சிவயோக ஞானியாவான். 234

செவ்வாய், புதன், குரு சுக்கிரன், சனி ஐவரும் கூடி ஒரு வீட்டில் இருந்திடவும் வினைப் பயன்களைப் போக்கும் புண்ணியராகிய சிவபெருமானிடம் அச்சாதகன் சிறந்த பக்தி கொண்டு சிவயோகியாக வாழ்வான், ஞானியுமாவான் என்றவாறு.

யாகம் புரிவன்

யோககன் மாதிபதிசுப னாய்வலி
யுற்றுமீ ரைந்தினிற் கூடி நிற்கில்

Koviloor Digital Library

உத்தமர் பல் பத்திசெயும் புத்தியுநல் லுத்தியுளன்
ஒதும் வேதவழி யாகஞ் செய்வான். 235

ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பது, பத்தாம் வீடுகளின் அதிபதிகள் கூடி வலிமைபெற்று பத்தாம் வீட்டில் இருக்கப் பிறந்த ஜாதகன் உத்தமமான சிவ பக்தர்களிடம் பக்திபூண்டு சேவைசெய்தும், வேத நெறிகளின் படி யாகங்களைப் புரிந்து பெரும் ஞானியென்னும் பெயர் பெற்று உத்தமனாகி வாழ்வான்.

நற்கன்மன்

செய்யுங்கன் மாதி வியத்தாதி யுங்கூடி
சேர்ந்து சுபருடன் வியத்திருக்கில்
செல்வமுளான் கல்விவலன் நல்வழியைப் புல்கவறஞ்
செய்வன்நற் கன்மத்திற் சிந்தையுளான். 236

ஜென்ம லக்கினத்திற்கு பத்து, பன்னிரண்டாம் அதிபதிகள்கூடிப் பன்னிரண்டாம் வீட்டில் இருக்க அவருடன் சுபக்கிரகங்களும் கூடியிருக்கப் பிறந்த ஜாதகன் மிகுந்த செல்வம், சிறந்தகல்வி மற்றும் அறநெறி மாறாதபடி நல்ல தொழில் செய்பவனும் தீயவை போக்கி நல்ல விஷயங்களிலேயே மனதைச் செலுத்தும் பரபினனும் ஆவான்.

துர்க்கன்மன்

சிந்தைசெய் பத்திலெட் டோனும் பாவருடன்
சேரக்கன் மாதி பெலத்துப் பொல்லாத்
தீயர்வழி யாயவுநற் றூயவினை மாயவுவெந்
தீங்கு நெருங்குகன் மாதிவனாம். 237

ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் வீடாகிய கர்ம ஸ்தானத்தில் எட்டாம் வீட்டின் அதிபதியானவனும் பாபக் கிரகங்களுடன் கூடியிருக்க, அந்தப் பத்தாம் வீட்டின் அதிபதியானவன் பலம் பெற்றுப் பாபக்கோள்களின் நடுவில் நின்றிருக்கப் பிறந்த ஜாதகனானவன், நல்ல தூய்மையான வழிகள் பல இருக்க, குறுக்குவழியில் பணம் சம்பாதிக்க ஆசை கொண்டு தீயதொழில்களைப் புரிந்து வாழ்வான் என்று சுப்பிரமணியக் கடவுள் அகத்தியரிடம் உரைத்தவாறு.

நீசகன்மன்

நீசகன் மத்தனாய்ப் பாவர்தன் வீட்டினில்
நின்றிவன் கன்மத்தைப் பார்த்திடவும்
நேசமுமா சாரமிலான் தூஷணமும் பேசியிவன்
நீதமி லாதுர்க் கன்மத்தனாம். 238

பத்தாம் வீட்டிற்குரியவன் நீசம்பெற்றுப் பாபக்கோள்களின் வீட்டில் தங்கி பத்தாம் வீட்டையும் பார்ப்பானாகில் அப்போது பிறந்த ஜாதகனானவன், அன்பில்லாதவனும், நட்புடன் யாரிடத்தும் பழகாதவனும், மற்றவர்களை தீய

Koviloor Digital Library

வார்த்தைகளால் தூஷிப்பவனும், நீதிநெறிப்படி வாழாதவனும், தர்மமல்லாத தொழில் புரிபவனும் ஆவான் என்று கந்தக் கடவுள் அருளிச் செய்தவாறு.

சண்டாள கன்மன்

துட்டரா லக்கினத் தேழிற் சிகிகேந்த்ரத்
　　தூதன் சனிபுகர் கூடிநிற்கில்
துரிதங்களும் பெருகத்தினம் புரிவன்பல கருமங்களைத்
　　தொடர்புசெய் துஷ்டசண் டாளகன்மன். 239

ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் தீய கிரகங்கள் தங்கியிருக்க, பாவிகளில் ஒருவனான கேது 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் ஒன்றிலும், புதன், சுக்கிரன், சனி கூடி அவர்களும் கேந்திரவீடுகளில் தங்கிடப் பிறந்த ஜாதகன், தவறானவழியில், கொலை, களவு, கொள்ளை முதலிய சண்டாளத் தொழில்களையும் செய்பவனாவான் அல்லது, சுடுகாடுகாப்பவன், வெட்டியான், மாமிசவியாபாரம், போன்ற நீசத்தொழில்களைப் புரிவான் என்று முருகவேள் கூறியவாறு.

அநேக துர்க்கன்மன்

கன்மத்தி லூதியன் ஜென்மத்திற் பாக்கியன்
　　கதிஸ்ரந்தில் மூன்றாறிற் பாவர் நிற்கில்
கலைசொல்லிய நிலையன்றியே உலகிற்பல கொலைசூழ்பவ
　　கன்ம மநேகம் புரிபவனாம். 240

ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் வீட்டில் லாபாதிபதியும், லக்கினத்தில் ஒன்பதாம் வீட்டிற்குடையவனும், ஐந்தாம் வீட்டில் சூரியனும், 3,6 ஆம் வீடுகளில் தீய பாபக் கிரகங்களும் தங்கியிருக்கப் பிறந்தவன் அறநெறிகளின்படி எந்த நற்காரியங்களும் செய்யாமலும், கொலை, கொள்ளை, எனும் தீயதொழில்கள் அத்தனையிலும் ஈடுபட்டுத் தவறான வாழ்க்கை வாழ்பவனாவான்.

பதினொன்றாம் பாவகம்

பன்னிரு வாகு பரன்பாதம் போற்றிப்
　　பதினோராம் பாவம் முனிவினவப்
பையரவ மெய்யிலுறும் வையமுளர்க் கெய்துபலன்
　　பண்பா யுரைக்குதும் மாதவனே. 241

பன்னிரண்டு திருக்கரங்களையுடைய குமரகுருபரன் இணையடிகளை வணங்க அகத்தியர் பதினொன்றாம் வீட்டின்பலனைக் கூறியருளும்படிக் கேட்க அருளே வடிவான சர்பத்தைத் தன்துடலில் ஆபரணமாகத்தரித்த சிவபெருமனின் திருக்குமாரரும் தவஞானியாகிய குறுமுனிக்கு உபதேசிக்கலானார்.

லாப நஷ்டன்

மாகவ னேவியத் தாறெட்டு ளோர்களும்
　　மன்னிடப் பாவர்கள் பார்க்கிருக்கில்

Koviloor Digital Library

மதியாலுள் பதிதோறுமே கதிசெய்துவன் நிதிதேடிட
வல்லைய பாரத்தி லில்லை லாபம். 242

புதபகவானுடன் ஜென்மலக்கினத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய வீடுகளின் அதிபதிகளுடன் கூடியிருக்கப் பாபக் கிரகங்கள் பார்வையுடம் பெற்றிருந்தால் அப்போது பிறந்த ஜாதகனானவன் தனது புத்திசாமர்த்தியத்தால் பல இடங்களில் சென்றும், பலவித தொழில்களைச் செய்தும் லாபம் கிடைக்காது; அவதியுறும் துரதிருஷ்டனாவான்.

அதிலாபம்

லாபதி யுச்சனாய்ப் புங்கவர் மத்தியம்
நண்ணிட லாபத்திற் சுபரிருக்க
நஞ்சாதிகள் பஞ்சாதியில் செஞ்சாலியில் துஞ்சாததி .
லாபமா மெத்தொழி லூதியமே. 243

ஜென்ம லக்கினத்திற்குப் பதினொன்றாம் வீட்டிற் குடையவன் உச்சம் பெற்று இருக்க வியாழனும் அவனுடன் கூடியிருக்க, பதினொன்றாம் வீட்டில் சுபக்கிரகங்கள் தங்கியிருக்கப் பிறந்தவன், நன்செய், புன்செய்ப் பயிர்கள், ப்ருத்திசாகுபடி போன்ற விவசாயத்தொழில்கள் முதல் வியாபாரம் வரை எந்தத் தொழிலைச் செய்தாலும் பெரும் லாபம் ஈட்டும் வல்லமை படைத்தவனாய்த் திகழ்வான்.

பெரியோரால் லாபம்

ஊதி யாதிபதி யுச்சத் திருக்கவும்
உதித்தஜென் மாதிலா பத்திலெய்தில்
உயர்வாகிய பெயராலவர் தயையாலிவன் பயிலுந்தொழில்
ஓங்கிலா பங்களைப் பெற்றிடுவான். 244

ஜென்ம லக்கினத்திற்குப் பதினொன்றாம் வீட்டிற்குடையவன் தனது உச்ச வீட்டிலிருக்க, லக்கினாதிபதி பதினொராம் வீட்டில் சென்று தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனானவன், உயர்ந்த நிலையில் உள்ள பெரியோர் பலரின் உதவியைப்பெற்று செய்கின்ற தொழிலில் உயர்ந்து லாபங்களை ஈட்டி சுகவாழ்வு வாழ்வான்.

நேசர்களால் லாபம்

பெற்றலா பாதி யிருந்தவீட் டாதிபின்
கேந்திரத் தாகிநட் போருங்கூடில்
பெரும்பல நேசத்துளர் வாசத்திலே பூசித்தவன்
பெற்றிடுவான் லாபம் நற்றவனே. 245

தவத்தில் சிறந்த அகத்தியனே ஒருவனின் ஜாதகத்தில் லக்கினத்திற்குப் பதினொன்றாம் வீடாகிய லாபஸ்தானாதிபதி தங்கிய வீட்டிற்குடையவன்

Koviloor Digital Library

1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் தனது நட்புக்கிரகங்களுடன் கூடித்தங்கியிருந்தால், அவன் பல நண்பர்களைப் பெற்றவனும், அவர்களை அண்டியிருந்து பலவித லாபங்களை அடைவான் என்று கூறுவாயாக, எனத் தமிழ் முருகன் அருளிச் செய்தவாறு.

கிருஷிலாபம் (விவசாயம்)

நற்றவா லாபாதி லாபத் திருக்கவவ்
வீட்டோன் ரவிமதி கூடியன்னோர்
நல்லோருறு மில்லிற்புக நெல்லும்விளை சொல்லும்நிலம்
நானா விதத்தாலா தாயமென்பாய். 246

தவத்தில் சிறந்தவனே ஒருவனின் ஜாதகத்தில் லாபஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டின் அதிபதி ஆட்சிபெற்றிருக்க அவனுடன், சூரியனும், சந்திரனும் கூடியிருக்க நல்ல சுபக்கிரகங்கள் லக்கினத்தில் சென்று இருக்க, அச்சாதகன் தனது நிலத்தில் நெல் முதற்கொண்டு பலவித தானியங்களையும் பயிரிட்டு அத்தனையாலும் நல்ல லாபத்தை அடைவான் என்று கூறுவாயாக என்று வள்ளிநாயகன் உரைத்தபடியே.

வெகு தனலாபம்

ஆதவ னூதிய னாகி மதியுட
னாயி னுடுபதி லாப னாகி
அலவன்னுறும் நிலமாகவும் திலகன்குரு விலகும்வழி
யாகில் வெகுதன லாபமாகும் 247

ஒருவனின் ஜாதகத்தில் லாபாதிபதி சூரியனாகிச் சந்திரனுடன் கூடியிருக்கவோ, அல்லது லாபாதிபதி சந்திரனாகிச் சூரியனுடன் கூடியிருந்திட்டாலோ அவர்கள் தங்கிய வீடானது பூமி காரகனாகிய செவ்வாயின் வீடுகளாயிருக்க (மேஷம், விருச்சிகம்) வியாழபகவான் அவ்வீட்டைப்பார்த்தாலும் பெரும் செல்வம் தேடி இனிதுவாழ்வான்.

லாபமியல்பு

ஏற்றலா பாதி யெவர்வீட் டி லெய்தினும்
இன்புறப் புங்கவர் பார்த்திடினும்
என்னும்நவ மன்னர்பல துன்னுங்கிர கன்னோரவர்க்
கான தனலாப மாகுமென்பாய். 248

லக்கினத்திற்குப் பதினொன்றாம் வீடாகிய லாபஸ்தானத்திற்கு உடையவன் எந்த வீட்டில் தங்கியிருந்தாலும் தேவகுருவாகிய வியாழபகவான் லாபாதிபதியைப் பார்த்தால், மற்ற கிரகங்கள் எத்தகைய வீடுகளில் சென்று தங்கியிருந்தாலும் தோஷமில்லை இயல்பாகவே அச்சாதகனுக்கு செய்தொழில் விருத்தியம் நல்ல லாபங்களும் கிடைக்கும் என்றவாறு.

Koviloor Digital Library

லாபதிசை

ஆதவர்க் கேகிழக் காகும் புகர்க்குத்தா
னக்கினி திக்கிற் குஜற்குத் தெற்காம்
அத்திசையி லூற்றிடவு மெத்தினமும் வித்தகமா
மாதாய மென்றே அருள்செய்குவாய். 249

ஒருவனின் ஜாதகத்தில் லாபஸ்தானாதிபதி சூரியனானால் கிழக்குத்திசையும், சுக்கிரனுக்கு அக்கினியின் திசையாகிய தென்கிழக்கும் செவ்வாய்க்கு தெற்குத்திசையும், ஆதாயம் தரும் திசைகளாகும் அத்திசையில் சென்று எந்த ஒரு தொழிலும் மேற்கொள்ள நல்ல லாபம் கிடைக்கும் என்று செந்தில்வேலவர் அருளிச் செய்தவாறு.

இதுவுமது

அருளுஞ் சனிக்குமேற் காகும் மதிவாய்வி
லறிஞற்கு வடக்குவீ சானன்குரு
அந்தநிலத் துந்திடவுஞ் சிந்தைசெயில் வந்திடுநல்
லர்த்தலா பங்களுஞ் சித்திக்குமே. 250

அதே போல சனிபகவானுக்கு மேற்குத்திசையும் சந்திரனுக்கு வாயுவின் திசையாகிய வடமேற்கும், புதனுக்கு வடக்குத்திசையும், வியாழனுக்கு ஈசானன் திசையாகிய வடகிழக்கும், பயணம் மேற்கொள்ளவும், தொழில் மேற்கொள்ளவும் நல்ல ஆதாயமான பலன்கள் ஏற்படும் என்றவாறு குமரக்கடவுள் உரைத்தபடியே.

பன்னிரண்டாம் பாவகம்

அசுரசங் கார முருக னிணையடிக்
கன்புசெய் தேவியத் தானபலன்
அனகமுனி வினவினதற் கினிதுமறைக் கனிரசமும்
அஞ்செவி வாய்க்கமு தாய்ப்புகட்டும். 251

சூரபத்மன் முதலாகிய அசுரர்களை வதம் செய்த செந்திலம்பதியின் வேந்தனாகிய முருகப் பெருமானின் திருவடிகளை வணங்கியெழுந்த அகத்தியபெருமான் பன்னிரண்டாம் வீடாகிய விரையஸ்தானத்தின் பலனைக்கூறியருளும்படி வேண்ட கருணைக் கடலாகிய ஆறுமுக அண்ணலும் அகத்தியரின் செவிகளுக்கு அமுது படைக்கும் வகையில் வேலவரும் விரையஸ்தான பலன்களைக் கூறலானார்.

மஞ்சத்திற் சயனம்

புகலும் வியநாதன் சுபனாய்க்கேந் திரமுச்சம்
புக்க வியத்திற் சுபரிருக்க
பொங்குசுபர் தங்குமணி யங்கமதி லிங்கிதனும்
புனிதசா மனைவீசத் துயில்பவனாம். 252

Koviloor Digital Library

ஜனன லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் சுபக்கிரகமாகி 1,4,7,10 என்னும் கேந்திரவீடுகளில் ஒன்றில் தங்கியிருக்கப் பன்னிரண்டாம் வீட்டில் சுபக் கிரகங்கள் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகனானவன் தீபத்தின் சுடர்போன்ற நிறம் உடையவனாயும், மென்மையான மஞ்சத்தில், சேவகர்கள் சாமரம் வீச ஆனந்தமாக உறங்குபவன் (தற்காலம், ஃபேன், ஏர்க்கண்டிஷன் என்றுகொள்ளலாம்) ஆவான்.

நீச சயனம்

ஆறிரண் டாதியெட் டாறி லிருக்கவும்
அரிமகன் பாம்பும் வியத்திருக்கில்
ஐயாசுபர் மெய்யாவிழி செய்யாதெனில் வையத்திவன்
அரியசண் டாளர்போற் றுயில்செய்யுவான். 253

லக்கினத்திற்கு 2,6 ஆம் வீட்டிற்குடையவர்கள் 6,8, முதலிய வீடுகளில் இருக்கவும் 12ஆம் வீட்டில், சனியுடன் இராகு, கேதுக்கள் இருக்கவும், இவர்களைச் சுபக் கோள்கள் பார்க்காவிட்டால், அச்சாதகன், நீச, சண்டாளர்கள்போல கிழிந்த துணி பாய், தரை, மரத்தடி போன்ற இடங்களில் படுத்துத்தூங்குவான் என்றவாறு.

தனத்தாற் சுகம்

செய்யபாக் யாதிலா பத்தினி லாகிடச்
செல்லலா பாதிபாக் யாதிநட்பாய்
சேர்ந்துநவத் தேர்ந்துறமுன் னோர்ந்ததனந் தீர்ந்தகல்முன்
தேடித் தனத்தர சாயிருப்பான். 254

ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் வீடாகிய பாக்கியஸ்தானாதிபதி, லாபஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டில் சென்றிருக்கவும் அல்லது ஒன்பது பதினொன்றாம் வீடுகளின் அதிபதிகள் நட்புக் கிரகங்களாகிக் கூடி ஒன்பதாம் வீட்டில் நின்றிருக்கப் பிறந்த ஜாதகனானவன், தனது முன்னோர் சேர்த்துவைத்த செல்வம் தீர்ந்து போகும்முன் தனது முயற்சியால் மேலும் பெரும் செல்வம் சேர்ப்பான் எனவே அரசனைப்போல வாழ்வான் என்றவாறு.

இராஜ தெண்டத்தால் நஷ்டம்

ஈராறி லூதியன் எய்த வியன்தனத்
தேறத் தனத்தாதி பலவீனனேல்
எத்தனைமுன் சொத்துறுமே லத்தனைதுற் புத்தியினால்
இராஜதண் டத்தா லிழைப்ப னென்றார். 255

ஜெனன லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டில் லாபாதிபதி சென்று தங்கியிருக்கப் பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் தனஸ்தானமாகிய இரண்டாம் வீட்டில் தங்கிட அந்த தனஸ்தானாதிபதியாகிய இரண்டாம் வீட்டிற்குடையவன் பலமிழந்தவனாயிருக்கப் பிறந்த ஜாதகன் தனது முன்னோர் எத்தனைபொரு

Koviloor Digital Library

சொத்துச் சேர்த்து வைத்திருந்தாலும் தனுது தீயஅறிவினால் அவற்றை அழித்து விடுவதோடு நில்லாது அரச தண்டனைக்கும் ஆளாகித் தன்செல்வங்களை மேலும் இழப்பான்.

துரைகளால் நஷ்டம்

இளைக்கும் வியத்தாதி தனத்தி லிருக்கவீ
ராறிற் றனத்தோ னிருந்திடவும்
இகலாகிய பகைமன்னர்கள் நிகரிற்பொருள் தொகையத்தனை
இகலுந் துரைகளாற் கொள்ளையிற்போம். 256

ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் இரண்டாம் வீட்டிலும், இரண்டுக் குடையவன் பன்னிரண்டிலும் பரிவர்த்தனையாகி யிருக்கப் பிறந்தவன், தனது பகைவர்களாலும், துரைகளாலும் (தற்காலத்திற்கு அரசியலாளர்கள்) தனது செல்வங்களைக் கொள்ளை கொண்டுபோனது போல இழந்து தவிப்பான்.

கள்ளரால் நஷ்டம்

போகுந் தனாதி நவாங்கிஷத் தாதியும்
பொருதிவி யத்தில்விய னோடிருக்கில்
பொன்னும்பல வன்னம்பணி யென்னுந்தொகை சின்னம்பட
போக்குவன் கள்வரா லெனச்சொல்லுவாய். 257

இராசி சக்கரத்தில் இரண்டாம்வீட்டிற்குடையவனுடன், நவாம்ச இரண்டாம் அதிபதிகூடி ஜெனன ராசிச்சக்கரத்தில் பன்னிரண்டாம் வீட்டில் அதனதிபதியுடன் சேர்ந்திருக்கப் பிறந்த ஜாதகனானவன், தன்னிடத்திலுள்ள பொன், பொருள், அணிகலன்கள் அத்தனையும் கள்வர் திருடிப்போக நஷ்டம் ஏற்பட்டு வருந்துவான்.

துற்சிந்தையால் நஷ்டம்

சொல்லும் வியநாதன் தீயனாய்ப் பாவர்கள்
துன்னிட வும்மின்னோர் பார்த்திடவும்
தொலையாபவம் நிலைசிந்திதன் கொலைசெய்வினை புலையர்க்கிவன்
சொத்தளித் தெல்லாந் தொலைத்திடுவான். 258

விரைய ஸ்தானாதிபதியாகிய பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் பாபக்கிரகமாகி பாபர்களுடன் கூடியோ, பாபரால் பார்க்கப்பட்டோ இருக்கப் பிறந்த ஜாதகன் தனது முன்ஜென்ம வினையினால் தவறான சிந்தனையேற்பட்டு, கொலைபாதகர்க்கும், தீயவர்க்கும் தனது பொன், பொருள் ஆகியவற்றைக் கொடுத்து இழந்துபோவான்.

தரும வினையால் நஷ்டம்

துலையும் வியத்திற் குருபுகர் பூரணத்
தாய்மதி மாலுறத் தீர்பாரேல்

Koviloor Digital Library

சுருதிகள்நூ லறிபவனாய்ப் புரிதருமந் தருகரனாய்ச்
சொரிந்தே தனங்களைத் தோற்றிடுவான். 259

பன்னிரண்டாம் வீட்டில் வியாழன், சுக்கிரன், முழுமைபெற்ற பௌர்ணமிச் சந்திரன், புதன் இவர்கள் தங்கியிருக்கப் பாபக் கோள்கள் பன்னிரண்டாம் வீட்டைப் பார்க்காதிருக்கப் பிறந்த ஜாதகன் வேதநூல்களையும், சுருதிகளையும் ஆராய்வதில் ஆர்வம் கொண்டவனாய், தனது அத்தனை சொத்து சுகங்களையும், தானதருமங்கள் செய்து தொலைத்து நஷ்டமாகி இருப்பான் என்றவாறு.

தனம் புதைப்பன்

தோற்றும் வியத்தாதி பாவருடன் கூடிச்
சுபர்மனை யேறநற் சுபர்கள்பார்க்கில்
தூயபிறர்க் கீயவுயிர் மாயும்வரை நேயமிலான்
சொற்ற தனத்தைப் புதைத்துக் காப்பான். 260

லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன், தீய பாபக் கோள்களுடன் கூடிச் சுபக்கிரகங்கள் வீடுகளில் ஒன்றில் தங்கியிருக்க, அவனைச் சுபர்களும் நல்ல முறையில் பார்த்திடப் பிறந்தவன், தனது பொருளை நல்ல மனத்துடன் அளித்து மகிழாதவனும், கருமியுமாவான் தனது மரணகாலம் வரையில் தனது செல்வத்தைப் பூமியில் புதைத்து வைத்துக் காத்துவருவான் என்றவாறு.

கடன் கொடுத்திழப்பன்

பாக்ய தனாதைந்திற் பதியவைந் தாதியொன்
பானி லிரண்டுற் றிம்மூவர் ஜென்மம்
பற்றிடினு முற்றபொருள் சொற்றைகளும் பெற்றிடகைக்
கடன்கொடுத்தேயிவன் பாழ்பத்தும். 261

ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டிற்குடையவனும், இரண்டாம் வீட்டிற்குடையவனும், கூடி ஐந்தாம் விட்டில் நின்றாலும், ஐந்தாம் வீட்டிற்குடையவனும், ஒன்பதாம் வீட்டிற் குடையவனும் கூடி இரண்டாம் வீட்டில் நின்றாலும், 2,5,9 ஆம் விடுகளின் அதிபர்கள் மூவரும் கூடி லக்கினத்தில் நின்றாலும், அச்சாதகன் தான் சேர்த்த செல்வத்தை வட்டிக்கு ஆசைப்பட்டுக் கடன் கொடுத்து வாங்க வழியின்றி இழந்து போவான்.

நானாவித நஷ்டன்

பரிதி தனாதியுங் கூடிவியன் ரண்டில்
பதியிலா [illegible] ய்திடினும்
பலவாறிவ னுலையப்பொருள் செலவாக்கியே [illegible]
பரிவுடன் நூல்களைத் தேர்ந்து[illegible]ாய். 262

Koviloor Digital Library

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் வீடாகிய தனஸ்தானத்திற்கு உடையவனும், சூரியனும். கூடியிருந்தாலும், பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் இரண்டாம் வீட்டிலிருந்தாலும், லாபஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டிற்குடையவன் எட்டாமிடத்தில் நின்றாலும் அந்த ஜாதகன் தனது பெருமுயற்சியினால் சம்பாதித்த செல்வத்துடன், மற்றும் பலசெல்வங்களையும் பலவகையிலும் தொலைத்து கஷ்டப்படுவான் இன்னம் பலநூல்களில் கூறப்பட்ட பலன்களையும் ஆராய்ந்து பலன்கூறுவாயாக என்று அகத்தியரிடம் சுப்பிரமணியக் கடவுள் அருளிச் செய்தவாறு.

லோபன்

தேறும் புகர்குரு வம்புலியை நோக்கத்
    தீய சனிதுலை மீதிருந்தால்
செறியுந்தன முறினும் பிறர்க் கறமீயவு மறியானெனச்
    செப்புவர் லோபனென் றிப்புவியில். 263

ஒருவரின் ஜாதகத்தில் சனியானவன் துலாராசியில் நின்றிடவும், வியாழனும், சுக்கிரனும், சிம்ம இராசியைப் பார்த்திடவும் இருந்தால் அச்சாதகன் எத்தனைபெரிய பணக்காரனாக இருந்தாலும், பிறர்க்குத் தந்துஉதவாத லோபி, கருமியென்று இப்பூமியில் பெயரெடுப்பான் என்று குமரவேள் குறித்தவாறு.

தனம் புதைத்திழப்பவன்

இப்புவி யில்ஜென்மத் திற்குமீ ராறிற்சேய்
    இருந்திட வும்மவன் பார்த்திடவும்
எண்ணமுடன் திண்ணமதாய்ப் பண்ணியிவன் மண்ணில்புதைத்
    திடந்தெரி யாதுபின் னேங்குவனாம். 264.

ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டில் செவ்வாய் தங்கியிருந்தாலும் அல்லது அவ்வீட்டைப் பார்த்திருந்தாலும். அப்போது பிறந்த ஜாதகன் தான் தேடிய பொன், பொருளைக் காப்பாற்றுவதாக எண்ணி மண்ணில் புதைத்துவைப்பான் பின்பு வைத்த இடந்தெரியாமல் தவித்து ஏங்கித் திரிபவனாவான்.

இன்னு மநேகநூல் தேர்ந்துரைக் கும்வல்ல
    ரித்தமிழ்க் குத்துணை செய்வரென்றும்
எண்ணமுளத் தெண்ணியேபுன் பண்ணுமொயில் வண்ணமதாய்
    ஏழைசிற் .றறிவா லியற்றினேனே. 265

ஜோதிடத்தில் பல நூல்களை ஆராய்ந்து பலனுரைகூறும் தமிழ்ச் சான்றோர்கள் மத்தியில் நானும எனது சிற்றறிவிற்கு எட்டியவரை கூறியுள்ளேன். இதனை ஏற்று பெரியோர்கள் அடியேனை ஆதரித்து ஆசிர்வதிக்கவேண்டு என்று கேட்டுக் கொள்கிறேன்.

Koviloor Digital Library

சாலிய வாக சகாப்தஞ் சகஸ்திரந்
தன்னோடொண் ணூறுபன் னேழில்ஜெய
தனிவருடம் வனிதைமதி யினிதுமுதற் றினமதிலே
சாற்றுந் தமிழ்க்கும்மி முற்றியதே. 266

விஜயாற்புத சாலிவாகன வருஷம் ஆயிரத்து எண்ணூற்றுப் பதினேழாம் ஆண்டு தமிழ் ஜய வருஷம் புரட்டாசிமாதம் முதல்நாள் பாடப்பட்ட இந்த சோதிடத் தமிழ் ஒயிற்கும்மி என்னும் நூல் நிறைவறுகின்றது. ஆங்கிலக் கணக்குப்படி கி.பி. 1896 ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் இந்நூல் பாடப்பட்டு உள்ளது. அதாவது ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலம் என்று ஏற்படுகின்றது. இந்நூலில் பல சோதிட நுணுக்கங்களைப் பாடப்பட்டுள்ளது தனிச்சிறப்பு

சக சகோதரம்

மண்டலந் தன்னிற் றிரிபாகந் தன்னை
வழுத்திடு வேனொயிற் கும்மியினால்
மருவொன்றிய துள்வம்புனை மருமன்பத வுபபங்கய
மாமுடிக் கேமுடி யாகக்கொண்டே. 267

ஒவ்வொருவரின் ஜாதகத்தில் இராசிமண்டலத்தின் மூன்றாம் பாகமாகிய லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டின் பலன்களை துளசி மாலை அலங்கரிக்கும் அனந்த சயனனாகிய திருமாலின் அருமை மருமகன் திருவடிக்கமலங்களில் அர்ச்சித்த மலர்களை எனது தலையில் திருமுடியாக அணிந்து அவனருளாலே ஒயிற்கும்மியாகப் பாடுகிறேன். முருகவேள் எனக்கு அருள்புரிவாராக.

இதுவுமது

ஏழவன் நாலவன் கூடித் திரியிடை
யேகவத் தீரனுங் கண்டம்வர
எழிலந்தண னினிதைந்திடை நிலைநின்றிட வருவன்றுணை
யென்பதற் கைய மிலைகாணே. 268

லக்கினத்திற்கு நான்கு, ஏழாம் வீடுகளின் அதிபதிகள் கூடி மூன்றாம் வீட்டில் தங்கியிருந்தாலும், அந்த மூன்றாம் வீட்டிற்குடையவன் முன்கூறிய 4,7 ஆம் வீடுகளில்தங்கினாலும் வியாழன் ஐந்தாம் வீட்டில் நின்றாலும் அச்சாதகனுக்கு கட்டாயம் சகோதரன் பிறப்பான் என்றவாறு

இதுவுமது

சேய்க்கு மூன்றவ னுச்சம் பெறவதன்
தீரனுங் கோணத்தி லேறிடவே
[illegible] நன்சுடர் விழி[illegible]
[illegible] பலராமே. 269

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய் தங்கிய வீட்டிற்கு மூன்றாம் வீட்டிற்குரியவன் தனது உச்சவீட்டிலிருக்க, அந்த வீட்டிற்கு மூன்றாம்

Koviloor Digital Library

வீட்டிற்குரியவன் 1,5,9 எனும் திரிகோண வீடுகளில் ஒன்றில் நிற்க, லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்கதிபதி புதனாகி அவரைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் அவனுக்கு உடன்பிறந்த சகோதரர்கள் பலர் இருப்பார்கள்.

இதுவுமது

திரியோன் கோணத்தி லேறவே சேயுடன்
சிகண்டிசன் கூடிக் கண்டம்வரத்
திருமானிகர் துணைவீரர்கள் வருவாரென நிறைவாயுரை
செப்புவ தற்குத் தடையிலையே. 270

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் 1,5,9 என்னும் திரிகோண இராசிகளில் ஒன்றில் தங்கியிருக்க, செவ்வாயும், வியாழனும் கூடி 1,4,7,10 என்னும் கேந்திர வீடுகளில் ஒன்றில் நின்றிருக்கவும். பிறந்த ஜாதகனுக்குத் துணையாக சகோதரர்கள் பலர் பிறப்பார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றிக்கூறலாம். என்றவாறு.

இதுவுமது

சுகனும் நிதியுமி லாப முறவதன்
றுரையு மூன்றினி லேறிட்டவே
சுழல்சந்திர னழல்கண்டமு மெழுமன்றிரு விழிவந்துறில்
சோதரர் பேதமி லாதவரே. 271

சுகஸ்தானாதிபதியாகிய 4 ஆம் வீட்டிற்குடையவனுடன், நிதியென்னும் இரண்டாம் வீட்டிற்குடையவன் கூடிப் பதினொன்றாம் வீட்டில் சென்றுதங்கிட, அந்த பதினொன்றாம் வீட்டின் அதிப்தியானவன் மூன்றாம் வீட்டிலிருக்கவும், சூரியன், சந்திரன், செவ்வாய் இவர்கள் கேந்திரஸ்தானங்களில் ஒன்றில் நின்றிருந்தாலோ அல்லது சுபக்கோள்களால் இவர்கள் (4,11 க்கு அதிபர்கள், செவ்வாய் இவர்கள்) பார்க்கப்பட்டாலும் அச்சாதகனுக்கு உடன் பிறந்தவர்கள் நிச்சயம் ஏற்படுவர்.

இதுவுமது

இராசிக்கு மூன்றவன் மூன்றினைக் கூடியே
ஏறுறக் கோணத்தி லேயதன்மேல்
எழில்வேதியன் விழிமேவுறில் அழல்கோணம துறினேவரும்
எண்ணிய புண்ணிய சோதரரே. 272

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் சந்திராலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்கு அதிபதியுடன் கூடி 1,5,9 எனும் திரிகோணவீடுகளில் தங்கியிருக்க, அவரை வியாழபகவான் பார்வை செய்திட்டாலும், செவ்வாய் திரிகோண வீடுகளில் தங்கினாலும் அச்சாதகனுக்கு உதவி புரியும் சகோதரர்கள் உண்டென்றபடியே.

Koviloor Digital Library

நிர்ப்பலித சோதரம்

மூன்றிற் புதன்பனி ரண்டிற் சனியுற
மூன்றுக்கு மூன்றிடஞ் சூனியமேல்
முதிருத்தம வனுசற்கிறை விழிபத்திவை யெதினிற்கினும்
மூன்றிருந் துங்கடைக் கொஹ்றிலையே. 273

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில் புதனும் பன்னிரண்டாம் வீட்டில் சனியும் நின்றிட்டவும், மூன்றாமிடத்திற்கு மூன்றாமிடம் (5 ஆம் இடம்) கிரகங்களின்றியிருக்க பதினொன்று மூன்றுக்குடையவர்கள் எங்கிருந்தாலும் மூன்றாம் வீட்டைப் பார்த்து நின்றால் அச்சாதகனுக்குச் சகோதரர்கள் உண்டு என்றாலும், உதவிகரமாக இருக்க மாட்டார்கள் என்றவாறு.

இதுவுமது

சோதர நாயகன் சோதர காரகன்
தோஷச் சனியுட னேகவந்து
சுபமங்கள தலநின்றிடில் வருவன்றுணை யொருவன்படு
தோஷி யிருந்தும் பயனிலையே. 274

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவனும், சகோதரகாரகனாகிய செவ்வாயும் பாப தோஷம் பெற்றசனியும் கூடி சுபஸ்தானங்களில் நின்றிருந்திடப் பிறந்த ஜாதகனுக்கு ஒரேயொரு சகோதரன் உண்டு என்றும், ஆனால் அந்தச் சகோதரனால் எந்த ஒரு பயனும் இல்லை என்றவாறு.

இதுவுமது

சோதர காரகன் சோதர நாயகன்
துட்ட வட்டமங் கூடிநிற்கச்
சுடர்மாமுடி யவனீசமு. நிறைசோதஜ் தலநாசமுஞ்
சோதரஞ் சொற்பனங் காட்டாதே. 275

லக்கினத்திலிருந்து மூன்றாம் வீட்டின் அதிபதியாகி சகோதர ஸ்தானாதிபதியும், சகோதர காரகனாகிய செவ்வாயும், தீயவனாகிய எட்டாம் வீட்டிற்குடையவனுடன் கூடியொரு வீட்டில் தங்கியிருக்க, சூரியன் தனது நீச வீட்டில் இருக்கவும் பிறந்த ஜாதகனுக்குச் சகோதரர்கள் இருக்கமட்டார்கள். இருந்தாலும் கனவில் கண்டது போல உதவியில்லாத சகோதரர்களையே பெற்றிருப்பான்.

இதுவுமது

மூன்றவ னோயின் முழுகி விடமூன்றுக்
கூட்டமன் கூட முளைத்து நிற்க
முதிர்சோதர தலசூனியன் வரவாதிபன் விதிமேவிமல்
மூவருஞ் சாவரு முன்றொலைவார். 276

Koviloor Digital Library

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் ஆறாம் வீட்டில் சென்று மறைவு பெற்றிட மூன்றாம் வீட்டிற்கு எட்டாம் வீட்டிற்குடையவன் (10 ஆம் வீட்டிற்குடையவன்) அந்த மூன்றாம் வீட்டிற்குஅதிபனுடன் கூடித் தானும் மறைவுபெற மூத்தசகோதர ஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டிற்குடையவன் பலமற்றுநிற்கப் பதினொன்றாம் வீட்டிலும் பாபக் கிரகங்கள் தங்கிட அச்சாதகன் பிறக்கும் முன்பே மூன்று சகோதரர்கள் பிறந்து இறந்து போயிருப்பார்கள் என்றவாறு.

இதுவுமது

மூன்றுடைப் பாம்பு முளைத்தாட வதன்
மூன்றிடஞ் சூனிய மாய்க்கிடக்க
முதிருத்தம துணைவற்கிறை கொலுமட்டமன் வசமுற்றிடில்
முன்னிலை பின்னிலை சோதரரே. 277

மூன்றாம் வீட்டில் அதனதிபதியுடன் இராகு அல்லது கேது நின்றிருக்க அதற்கு மூன்றாம் வீடாகிய ஐந்தாம் வீட்டில் கிரகம் ஏதுமின்றி வெறுமையாக இருக்கப் பதினொன்றாம் வீட்டிற்குடையவன் எட்டாம் வீட்டில் அவனுடன் சேர்ந்து தங்கியிருக்கப்பிறந்த ஜாதகன் தனக்கு முன்பும், பின்பும் சகோதரர்களைப் பெற்றவனாவான்.

இதுவுமது

மூன்றுக் கிறைவ னிலாப முறமூன்றுக்
காயுளன் கோண முனைக்கேற
முடியாயுள னளிர்மாமதி யவனோடுறில் வருவானொடு
முத்துணை வந்தொன்றும் நிக்ஷயமே. 278

லக்கினத்திற்கு மூன்றாமிடத்திற்கு உடையவன், லாபஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டில் தங்கிட, சகோதர காரகனாகிய செவ்வாய் திரிகோண வீடுகளில் சிறந்த ஒன்பதாம் வீட்டில் நிற்க, லக்கினாதிபதி சந்திரனுடன் கூடியிருக்கப் பிறந்தவன் தனக்குத் துணையாக நிச்சயம் மூன்று சகோதரர்கள் தோன்றுவார்கள் என்றவாறு.

இதுவுமது

திரியோன் சேயுடன் கூடி வியமதிற்
சேரச் சனியு மதைநோக்க
திரிவீடதில் விதிமேவிட வருசோதர ருயிர்மாளுவர்
செத்தும் இருந்தும் பயனிலையே. 279

சகோதர ஸ்தானபதியாகிய மூன்றாம் வீட்டுக்குடையவனும். சகோதர காரகனாகிய செவ்வாயும் கூடி லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டில்

Koviloor Digital Library

தங்கியிருக்கச் சனி அந்தப் பன்னிரண்டாம் வீட்டைப் பார்க்க, மூன்றாம் வீட்டில், ஆயுள் ஸ்தானமாகிய எட்டாம் வீட்டிற்குடையவன் சென்று தங்கிடப்பிறந்தவனுக்குச் சகோதரர்கள் பிறந்து இறந்துபோவார்கள், அப்படியே உயிருடன் இருந்தாலும், அவர்களால் ஜாதகருக்கு எவ்விதப் பயனுமில்லை என்றவாறு.

இதுவுமது

காரி ரவியுமி லாப முறவதைக்
கண்டிட வேவிதி நாதனிவர்
கனபாவியர் வருவார்வரி லுயிர் கோறுவர் நிசமேயிவர்
காட்டுக் கிறைத்த நிலவாமே. 280

ஒருவரின் ஜாதகத்தில் சூரியனும் சனியும், கூடி லாப ஸ்தானத்தில் தங்கியிருக்க அவர்களை ஆயுள் ஸ்தானமாகிய எட்டாம் வீட்டிற்குடையவன் பார்த்திருக்க அச்சாதகனுக்குத் துணைவர்கள் (சகோதரர்கள்) வருவார்கள் ஆனால் உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள். இது உண்மைதான். அவர் சகோதரர்கள் மயானபூமிக்கு உரமாகப் போய் விடுவார்கள் என்றவாறு.

இதுவுமது

திரியுடன் கரிகூடி மேவ வியமேகச்
சேர விதியுந் திரிமீதிற்
செயலாலனை யுடல்வேதனை படுவாளல துளவோபயன்
தீவினை யோர்துணை யாகுவரே. 281

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் சனியுடன் கூடிப் பன்னிரண்டாம் வீட்டில் தங்கியிருக்க, எட்டாம் வீட்டிற்குடையவன் மூன்றாம் வீட்டில் தங்கியிருக்கப் பிறந்தவன் சகோதரர்கள் பிறந்து இறந்துபோவர் அல்லது நோயால் அவதியுற்றுக்கிடப்பர், ஜாதகருக்கு உபத்திரவமாக ஆகிப் போவர் என்றவாறு.

இதுவுமது

பத்தவன் மூன்றவன் கூடி விதியேகப்
பதியனுஞ் சேயுமாய்க் கூடிடவே
பனியானதை மழையாமென வுழவோர்துணி வதுபோலிவர்
பம்பிய தம்பியை நம்புவதே. 282

ஜென்ம லக்கினத்திற்கு மூன்று, பத்தாம் வீடுகளுக்கு அதிபதிகள் ஒன்று கூடிப் பன்னிரண்டாம் வீட்டில் தங்கி அந்தப் பன்னிரண்டாம் வீட்டுக்குடையவனும் செவ்வாயும் கூடி ஏதாவது ஒரு வீட்டில் தங்கியிருக்க, அந்த ஜாதகனின் தம்பியர் உபயோகமில்லாதவர்களாகுவர் விவசாயியானவன் பனிபெய்வதைப்பார்த்து மழைபெய்வதாக நம்பி பயிரிட்டால் என்ன விளையும்,

Koviloor Digital Library

அதுபோலப் பசப்புக்காரனாகிவிட்ட சகோதரனை நம்பி யாதொரு பயனும் இச்சாதகன் அடையமாட்டான் என்றவாறு.

ஆபரணம்

திரியினி லேபுக ரேறிட வேயந்தத்
தீரன் குருடன் பதியேகச்
செயமுத்தணி ர்வியொத்தொளிர் மணிவச்ரம ணிவர்நிச்சயஞ்
செம்பொன் னிலங்கிய மேனியரே. 283

மூன்றாம் வீட்டில் சுக்கிரன் நின்றிட, மூன்றாம் வீட்டிற்கு உடையவன் சுக்கிரன் வீட்டில் தங்கிப் பரிவர்த்தனையடையப் பிறந்த ஜாதகனிடம் பலவகை ஆபரணங்கள் இருக்கும் அல்லது சேர்ப்பான், ஜயகண்டி, முத்துமாலை, மாணிக்கமாலைகள் மற்றும் பொன்னாலான பலவகை ஆபரணங்களை அணிந்து மகிழ்பவனுமாவான் என்றவாறு.

இதுவுமது

வேந்தன் திரிதனி லேறப் புதனுடன்
மேவித் திரியோனுங் கோபமுற
மிளிராரலு மதுகாணுற மணிமாலிகை புனைவாரிவர்
வெள்ளியைச் சுள்ளியொன் றாமதியார். 284

வியாழபகவானும், மூன்றாம் வீட்டில் சென்றிருக்க, அந்த மூன்றாம் வீட்டிற்குரியவன், சூரியனின் வீடாகிய சிம்மத்தில் தங்கிட, அவனுடன் புதனும் சேர்ந்து தங்கியிருக்கச் செவ்வாயானவன் மேஷத்தில் ஆட்சிபெற்று நின்றிடப் பிறந்தவன் பலவகை ரத்தினங்கள் பதித்த ஆபரணங்களை அணிந்து மகிழுவன், வெள்ளிப்பொருட்களை அடுப்பிலிடும் விறகுக்கு இணையாகக்கூட மதியாதவனாவான் அத்துணை பெருஞ்செல்வந்தனாம்.

இதுவுமது

சாமியு டன்தனன் கூடியே கண்டத்திற்
றங்கிட மாலு மதைநோக்க
சர்மாலிகை நவமாமணி புனைவாரெனத் தடையோவொரு
சந்திரன் போல விளங்குவரே. 285

லக்கினாதிபதியுடன், இரண்டாம் வீட்டிற்குடையவன்கூடி 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் ஒன்றில் தங்கியிருக்கப் புதபகவான் அவர்களைப் பார்த்திடப் பிறந்தவன், நவரத்தின மாலைகள், ஹாரங்கள் அணிந்து மகிழ்வான், மேகங்கள் இல்லாத நிர்மலவானத்தில் பூரணச்சந்திரன் நிற்பதுபோலப் பிரகாசமாக இருப்பான் என்றவாறு.

Koviloor Digital Library

இதுவுமது

அம்புலி மூன்றினி லேதச் சுரகுரு
வைந்தினி லேகவிச் சாதகனார்
அடில் போலொளிர் முழுமாமணி யரிமாலிகை யணிவாரென
அச்சமில் லாமற்கை போட்டுரையே. 286

சந்திர பகவானானவர் மூன்றாம் வீட்டிலும், அசுரகுருவாகிய சுக்கிராச் சாரியார் ஐந்தாம் வீட்டிலும் சென்று தங்கியிருந்து விட்டால் அச்சாதகன், தீக்கனல் போலப் பிரகாசமான பொன்னாலான மாலைகளும், ரத்தினங்கள் பதித்த ஹாரங்களும் கட்டாயம் அணிவாரென்று சோதிடம் உரைப்போர் கைகளை உயர்த்தித் துணிந்து உரைக்கக் கடவர் ஏனெனில் இந்த உரை தப்பாது என்றவாறு.

இதுவுமது

பாம்புடனேதிரி நாயகன் கூடியே
பாக்கிய மாளிகை யேறிடினே
பசுமேதக வைடூரிய மணிமாலிகை யணிவாரெனப்
பட்டையந் தீட்டிக் கொடுப்பாயே. 287

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற் குடையவனுடன் இராகு கூடி ஒன்பதாம் வீட்டில் நின்றால் கோமேதகக் கற்கள் பதித்த ஆபரணமும், மூன்றுக்குடையவனுடன் கேது கூடி ஒன்பதாம் வீட்டில் நின்றால் வைடூரியக்கற்கள் பதித்த ஆபரணமும் அச்சாதகன் கட்டாயம் அணிவானென்று சோதிடர்கள் செப்புப்பட்டயத்திலே எழுதியே கொடுக்கக் கடவர், ஏனெனில் இந்த உரையும் நிசமாய்ப் பலிக்கும் என்றவாறு.

இதுவுமது

திரியினிற் கேதுவு மேறிட வேயுந்தத்
தீரன் தனன்கூடிக் கோணம் வரச்
செம்மாமணி பொன் மாமணி மெய்மாலையு மம்மாபுனை
செல்வ னிவனெனச் சொல்லுவையே 288

லக்கினத்திற்கு மூன்றாம்விட்டி கேது வானவன்விற்றிருக்க அந்த மூன்றாம் வீட்டுக்குடையவன் தனஸ்தானாதிபதியாகிய இரண்டுக்குடையவனுடன் கூடி, 5,9 எனும் திரிகோண வீடுகளில் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகன், பொன்னில் ரத்தினங்கள் பதித்த மாலைகளை அணியும் பேறுபெற்ற செல்வந்தனாவான் என்று கூறுவாயாக.

இதுவுமது

வேதன் திரியான் காமம்வர வந்த
வீரன் திரியினி லேறிடவே

Koviloor Digital Library

மிகவேயொரு ளுளனாய்வ மணியாயிவ மணியானிவன்
வீணுக்குப் பூனுக் குடையவனே. 289

வியாழபகவானுடன் லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவனும் கூடி ஏழாம் வீட்டில் நின்றிருக்க மூன்றாம் வீட்டின் காரகனாகிய செவ்வாயானவன் மூன்றாம் வீட்டில் தங்கியிருக்கப் பிறந்தவன் பெருந்தனவானாவான். அவனிடத்து ஏராளமான நகைகள் இருக்கும் அவைகளைப்பத்திரப்படுத்தி விட்டு சாதாரண ஆபரணங்களை அணிந்து இருப்பான் என்றவாறு.

இதுவுமது

ராசிக்கு முன்னோன் வியமேக வதை
நாடியே பூமனும் நோக்கமிட
நானாவகை பூரணமு ளானாயினும் பூணானிவன்
நாய்க்குச் சலங்கையுங் கட்டானே. 290

ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டில் இராசிக்குப் பன்னிரண்டாம் வீட்டிற்குடையவன் (சந்திராலக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீடு) சென்று தங்கி அவனைச் செவ்வாய் பார்த்திடப் பிறந்தவன், நால்வகை ஆபரணங்கள் உடையவனாக இருந்தும் எவ்வித ஆபரணமும் பூணாது கருமியைப்போல இருப்பான் என்றவாறு.

இதுவுமது

திரியோ னெட்டினி லேறிட வேயதன்
தீரன் குணத்தினிற் பாய்ந்திடவே
திருமாமணி மிசையாசைக ளுடையானல தொருகாசிடை
செம்பொன் னணிய விதியிலனே. 291

ஜென்மலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் எட்டாம் வீட்டில் சென்றிருக்க எட்டாம் வீட்டிற்குடையவன் மூன்றாம் வீட்டில் பரிவர்த்தனையாகி நின்றிருக்கப் பிறந்தவன் பொன்னாபரணங்கள் இல்லாதவனாக இருப்பான், அல்லது ஒரு காசெடை தங்கம் வாங்கக்கூட வகதியில்லாதவனாக இருப்பான் இது அவனது விதியேயாம்.

இதுவுமது

சுங்கன் வியமீதி லேகிட வேயந்தச்
சூரன் திரியினில் வந்திடவே
சுழல்வான்முன முழல்வான்மன மழல்வானொரு மணிபூண்லன்
துக்க மடைந்தா யிருப்பானே. 292

சுக்கிராச்சாரியானவன் லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீடாகிய விரையவீட்டில் சென்றிருக்க அந்த விரைய்ஸ்தானாதிபதியும் மூன்றாம் வீட்டில்

Koviloor Digital Library

சென்றிருக்கப் பிறந்த ஜாதகனானவன் கடும் சிரமப்பட்டுப் பொருளீட்டுவான். எனினும் ஒரு சிறு தங்க ஆபரணம் கூடப் பூண முடியாதவனாகித் துயருற்றவனாய் சதா கவலை கொண்டவனாகவே காணப்படுவான் என்றவாறு.

வீரியம்

மூன்றவன் பாப ருடன்கூடி விய
மோதப் பதியுச்ச மாகிடவே
முனைவீரியர் பொருபோரொரு தினையாமென நினைவானிவன்
மூதண்ட கோதண்ட வீரியனே. 293

லக்கினத்திற்கு மூன்றாம்வீட்டின் அதிபதி பாபக்கோள்களுடன் கூடிப் பன்னிரண்டாம் வீட்டில் நிற்க, அந்த விரைய ஸ்தானாதிபதி தனது உச்ச வீட்டில் சென்றிருக்கப் பிறந்த ஜாதகன் மிகுந்த வீரம் பொருந்தியவனாக இருப்பான். கோதண்டம் ஏந்திய இராம பிரானைப்போன்ற துணிச்சலும் பராக்கிரமமும் பெற்றுத் திகழ்வான். போர் புரிவதில் சளைக்காதவனும், பயம் என்பது தினையளவு கூட இவனிடம் இருக்காது என்றவாறு.

இதுவுமது

பூமன் திரியவ னாகிப் பெலன் கெடப்
புக்கிடப் பாபர் வியந்தனிலே
பொருவீமனும் வருகாமனு மிணையாமென வுயர்வீரியன்
புண்ணியன் றிண்ணியின் கண்ணியனே. 294

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குரியவன் செவ்வாயாகிப் பலமிழந்து நிற்க, விரையஸ்தானமாகிய பன்னிரண்டாம் வீட்டில் தீயபாபிகள் தங்கிட அச்சாதகன், வீரத்திலே பாண்டவர்களில் பலசாலியான பீமசேனனை நிகர்த்த வனென்றும், காமக் களியாட்டத்தில் மன்மதனை யொத்தவன் என்றும், சிறந்த வீரனென்றும் பெயர் பெறுவான் மேலும், சிறந்த புண்ணியவான், மனோபலம் நிறைந்தவன் குணக்குன்றாகியவன் கண்ணியவான் என்றும் புகழ்பெறுவான்.

இதுவுமது

சேயுட னேமதி கூடி வியமேகத்
தீரனு மாங்கதை நோக்கிடவே
திசைகாவல ரிசைமேவிய புஜவீரியன் விசையாதிபன்
தேசம் புகழுஞ் செயவீரன். 295

செவ்வாயுடன், சந்திரன் கூடி லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டில் நிற்க வீரயஸ்தானமென்னும் மூன்றாம் வீட்டிற்குடையவன் பன்னிரண்டாம் வீட்டைப் பார்த்திடப் பிறந்தவன், அஷ்டத்திக்குப் பாலகர்களையொத்த தோள்வலிமை

Koviloor Digital Library

கொண்டவன் அர்ச்சுனனை நிகர்த்த வீரன் எதிலும் வெற்றியையே பெற்றவன் என்று உலகத்தில் உள்ள யாவரும் போற்றிப் புகழும் பெருமை பெற்றவன் என்றவாறு.

இதுவுமது

அஞ்சவன் சேய்திரி யாதிபன் வேதியன்
மூன்றிடை கூடி யினிதிருக்கின்
அதிவீரமு மதியூகமு நிதியோகமு முதியோனென
வையமி லாமற் றெளிந் துரையே. 296

லக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டிற்குடையவன், செவ்வாய், மூன்றாம் வீட்டதிபதி சுக்கிரன் இவர்கள் கூடி மூன்றாம் வீட்டில் சுபபலம் பெற்றிருக்கப் பிறந்த ஜாதகன் பெரியவீரன், சிறந்த அறிவாளி, பெரும் தனவான் என்று எந்த ஒரு சந்தேகத்திற்கும் இடமின்றி சோதிடர்கள் துணிந்து உரைக்கக்கடவர் என்றவாறு.

இதுவுமது

மங்களன் காரிகருமந் திரியினில்
மன்னவத் தீரனும் கண்டம்வர
மறுவீரரு முளரோவென வரைகூறிடு நிறைவீரியன்
வஞ்சகர் நெஞ்சைப் பிளப்பவனே. 297

லக்கினத்திற்குப் பத்தாம் வீட்டிற்குடையவனுடன், செவ்வாயும், சனியும், கூடி மூன்றாம் வீட்டில் நின்றிட, அந்த மூன்றாம் வீட்டிற் குடையவன் 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் சென்று இருக்கப் பிறந்தவன், இப்புவியில் இவனுக்கு இணையான வீரர் எவருமில்லை என்றபெயர்பெறுவான். பெரிய வீரனாவான். எதிரிகளின் நெஞ்சைப் பிளந்து விடுமளவு பேராற்றல் பொருந்தியவனாவான்.

இதுவுமது

பாம்புட னேதிரி கூடிக்கோ ணம்வரப்
பார்த்திடப் பொன்னவ ருமதனைப்
பதிபெற்றுழல் திருடர்க்கொரு புலியொப்பவ னரசர்க்கொரு
பட்ச மிகுந்த துணையாவன். 298

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவன் இராகு அல்லது கேதுவுடன் கூடி 1,5,9 எனும் திரிகோண வீடுகளில் தங்கியிருக்கத் தேவகுருவாகிய வியாழபகவானும் அவர்களைப் பார்த்திடப் பிறந்தவன் புவியாளுநர் அரசர்களுக்குத்துணையாகத் தளபதியாயிருப்பான் மறைந்து வாழும் திருடர்களுக்கு இவன் ஒரு சிங்கத்தைப்போலப் பயந்தருபவனாவான் என்றவாறு.

Koviloor Digital Library

இதுவுமது

வீரியத் திற்சிந்தை கூரியன் கூரியன்
வேதியன் கோணத்தை மேவிநிற்க
விதிமுப்பதி யவரட்டம விரையத்தல முறவுற்றவன்
வீரியன் கூரியன் சீரியனே. 299

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில் புதபகவான் நிற்க, வாக்குஸ்தானமாகிய 2 ஆம் வீட்டிற்குடையவன், சுக்கிரனுடன் கூடி 1,5,9 எனும் திரிகோண இராசிகளில் கென்றிக்க, எட்டு, பன்னிரண்டாம் வீட்டிற்குரியவர்கள், 8,12 ஆம் வீடுகளில் பரிவர்த்தனை பெற்றுநிற்கப் பிறந்தவன், சிறந்தவீரன், கூர்மையான அறிவாளி, சிறந்த குணவான், கருணையுடையவன் என்றவாறு.

அவ வீரியம்

புகருந் தனன்திரி கூடியே கோணத்திற்
போகவைந் தோனு மதைநோக்பப்
புகனூலிடை யதிவீரிய னரிகூவினு மருள்வான்மனம்
பூவின் மெலிந்த மனத்தானே. 300

சுக்கிரனுடன், லக்கினத்திற்கு மூன்று, இரண்டாம் வீட்டிற்குடையவர்கள் கூடித் திரிகோண வீடுகளில் தங்கியிருக்க ஐந்தாம் வீட்டிற்கதிபதி அவர்களைப் பார்த்திருக்கப் பிறந்தவன், கோழையாயிருப்பான், நாய், நரி இவற்றின் ஓலத்தைக் கேட்டால் கூடப் பயந்து நடுங்குவான். வாடும் தன்மையுள்ள மலர் போன்ற மனம் படைத்தவனாவான்.

இதுவுமது

'ஆறவ னுந்திரி பஞ்சம னுங்கூடி
யந்த முடன்விய மேவிடவே
அரசானவர் சபைமேவினு முறவோர்சபை யிடைமேவினும்
அச்சம் படைத்திடு கொச்சையனே. 301

லக்கினத்திற்கு மூன்று, ஐந்து, ஆறு, பன்னிரண்டாம் வீடுகளின் அதிபதிகள் கூடி 12ஆம் வீட்டிலே தங்கியிருக்கப் பிறந்தவன், அரச சபையானாலும், தனது இனபந்துக்கள் கூடிய சபையானாலும், கூட்டத்தில் சென்றுவிட்டாலே பயந்து விடும் சிறுபிள்ளைத்தனமான கோழையாக இருப்பான் என்றவாறு.

இதுவுமது

அன்னைதிரிசேர்ந் ததிலொரு கோள்நீச
மாகியே அட்டமன் நோக்கமிட
அதியேழையு மதிகோழையு முடையார்களில் முதலாகுவன்
ஆந்தை குளறிற் பயமடைவான். 302

Koviloor Digital Library

லக்கினத்திற்கு மூனறு, நான்காம் வீட்டிற் குடையவர்கள் எங்காவது கூடிநிற்க, அவ்விருவருள் ஒருவர் நீசம் பெற்றிருக்க அவர்களை எட்டாம் வீட்டதிபதி பார்த்திடப்பிறந்தவன் மிக மோசமான ஏழை, மிகப்பயந்த கோழை, உலகிலுள்ள ஏழைகள் கோழைகளுக்கு இவன் முதல்தரமானவனாவான் அது மட்டுமல்ல ஆந்தை அலறும் சப்தம் கேட்டால் கூட அஞ்சி நடுங்கும் மகாகோழை.

போகம்

ஏழினி லேகரும் பாந்த ளிருந்திட
யேழவன் கேந்திர மேறிடவே
இனிதாயிவன் மனையாளொடு மதநூல்விதி புணர்லீலையன்
என்றென்றும் போக சுகத்தானே. 303

லக்கினத்திற்கு ஏழாம் வீடாகிய களத்திர ஸ்தானத்திலே கரும்பாம்பென்னும் இராகு நின்றிட ஏழாம் வீட்டிற்குடையவன் 1,4,7,10 எனும் கேந்திர வீடுகளில் சென்று தங்கிடப் பிறந்தவன், தனது இனிய மனைவியுடன் காமசூத்திர நூலில் கூறப்பட்ட அத்தனை லீலைகளையும் புரிந்து மன்மதனைப்போல போக வாழ்வு வாழ்ந்து சுகமாயிருப்பான்.

இதுவுமது

தனன் திரிகூடியே கோண முறவிதி
சார்ந்து திரிநின்று நோக்கிடவே
தானேபிறர் மானார்மன நோகாவண மேகூடுவன்
சந்ததங் காமலோ லாதிபனே. 304

லக்கினத்திற்கு இரண்டு, மூன்றாம் வீடுகளின் அதிபதிகள் கூடித்திரிகோண வீடுகளான 1,5,9 முதலிய இடங்களில் தங்கிட எட்டாம் வீட்டிற்குடையவனும் அதே வீட்டில் சேர்ந்து நின்றாலோ அல்லது மூன்றாம் வீட்டில் நின்று 2,3 ஆம் வீட்டதிபர்களைப் பார்த்திடப் பிறந்த ஜாதகன் தனது மனைவியல்லாத மற்றபெண்களையும் அவர்களை இன்பத்திலாழ்த்திச்சேர்ந்து காமலோலனாய்த் திரிகுவன் என்றவாறு.

இதுவுமது

மதிக்கு மூன்றிலே ழோன்வர வேயதன்
மன்ன னவனை விழிநோக்க
மலைபோல்வளர் விலைமாதரின் வலையேசுக நிலையாமென
மயங்கி வீழ்ந்து கிடப்பவனே. 305

லக்கினத்திற்கு 7 ஆம் வீட்டிற்குடையவன் சந்திரனுக்கு 3ல் வந்து தங்கியிருக்க அந்த் வீட்டிற்குடையவன் சந்திரனுக்கு 3 ஆம் வீட்டைப் பார்த்திருக்கப்

Koviloor Digital Library

பிறந்தவன் விலை மாதர்கள் தரும் சுகமே மலையளவு பெரிதானது என்றெண்ணி மயங்கி அவர்கள் (தாசிகள்) இல்லங்களிலேயே விழுந்துகிடப்பான் என்றவாறு.

இதுவுமது

புகருந் தனன்திரி கூடிக்கோ ணமேகப்
பொன்னவன் நோக்கிட வேயிவனைப்
புணர்மாமுகை மடவார்பலர் தொடர்வார்சுக மடைவாரிவன்
பூங்கணை மன்மதன் பாங்குடையான். .. 306

லக்கினத்திற்கு இரண்டு, மூன்றாம் வீடுகளின் அதிபதிகளுடன் சுக்கிரன் கூடி 1,5,9 எனும் திரிகோணவீடுகளில் ஒன்றில் தங்கியிருக்க அவர்களை வியாழபகவான் பார்த்திருக்க அச்சாதகனானவன் பருத்த தனங்களையுடைய பெண்கள் பலரை அணைந்து சுகம்பெறுவான் மன்மதன் மலர்க்கணை வீசுவது போலக் கன்னியருக்கு வலை வீசுவான் இவன்வலையில் விழுந்து பலபெண்கள்சுகம் அனுபவித்துப் போவர் எனவே இவன் காமலீலாவினோதனாவான் என்றவாறு.

அடிமை

அஞ்சவன் மூன்றவன் கூடிடக் கர்ரியும்
அச்சமில் லாமல் திரிக்கேக
அடியோர்பல குடியோர்மிகு நெடியோர்துணை யுடையோனிவன்
அண்டின பேர்குடி தாங்கிடுவான். 307

லக்கினத்திற்கு மூன்று, ஐந்தாம் வீடுகளின் அதிபர்கள் கூடி எங்காவது இருக்க சனியானவன் மூன்றாம் வீட்டில் பாபிகளின் பார்வையின்றி நின்றிருக்கப் பிறந்தவன் பல வகை வகுப்பினருக்கும் தலைவனாக விளங்குவான், இவனுக்குப் பலர் கொண்ட பலர் உதவியாக வருவார்கள், மேலும் இவன் தன்னைத் தஞ்சம் அடைந்தவர்களை வாழவைக்கும் மாண்பு உடையவனாகத் திகழ்வான் என்றவாறு.

இதுவுமது

சப்தம னும்தனன் கூடித் திரியினில்
தங்கவத் தீரனுச் சம்பெறவே
தலமீதிவன் விலையாகவே பல்சேவகர் கொளுவாழ்வினன்
சத்திரம் போலு மனையுடையான். 308

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, ஏழாம் வீட்டிற்குடையவர்கள் கூடி மூன்றாம் வீட்டில் நிற்க அந்த மூன்றாம் வீட்டிற்குடையவன் ஏழாம் வீட்டில் சென்றிருக்கப் பிறந்த ஜாதகன் தான் இட்டபணி செய்வதற்கெனப் பல வேலையாட்களை விலைகொடுத்து வாங்கி அடிமைகளாக வைத்திருப்பான்,

Koviloor Digital Library

மேலும் இவனது வீடானது அன்னச்சத்திரமோ என்று வியக்கும் வண்ணம் பலருக்கு உணவும் பொருளும் வழங்கி ஆதரிப்பான்.

இதுவுமது

பாக்கியன் மூன்றவன் பத்தவன் கூடியே
பஞ்சம மேகப் புதன்பார்க்கப்
பரதேசியாய் வருவார்களை நிறையாசையோ டருள்கூறுவன்
பஞ்சத்தைக் கெஞ்ச வடிப்பவனே. 309

3,9,10 ஆம் வீட்டதிபதிகள் கூடி 5 ஆம் வீட்டிலிருக்க அவர்களைப் புதனும் பார்த்திடில் பரதேசிகளாக வருவார் பலரையும் மனம் நிறைவாகும்படி வரவேற்று உணவளித்து உபசரிப்பான் இவனால் பலர் வாழ்வுபெறுவார்கள் என்பதால் பஞ்சம் என்ற சொல்லே இவனிடத்தில் எதிர்நிற்காது அந்தஅளவு தர்மவான் என்றவாறு.

இதுவுமது

சுகனும் திரிபுதன் கூடிக் கண்டம்மீதில்
தோன்றிட நீசம் பெறவொருவர்
தொடக்காகிய குலத்தோர்களை யடிக்காளென வதித்தோனிவன்
சுந்தர ரஞ்சித் சற்குணனே. 310

சுக்கிரனுடன் லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவனும், புதனும் கூடி 1,4,7,10 எனும் கேந்திரஸ்தானங்களில் நின்றிருக்க அவர்களில் ஒருவருக்கு அவ்வீடு நீச வீடாக இருக்கப்பிறந்த ஜாதகனானவன், தன்னைத் தொடரும் தனது குலமக்களை ஆதரித்துப் போற்றி அவர்களுக்குத் தொண்டுபுரிபவனும், குணத்தில் உயர்ந்த பண்பாளனும், அழகனுமாவான் என்றவாறு.

போகம்

மூன்றவன் சத்தம கேந்திரத் திலேறி
முதற்குரு வீக்ஷணம் பெற்றிருக்க
முதிர்சத்தமன் மலையுற்றொரு புதனைப்புக ழைவிழித்திடில்
முத்தினு முத்தமி போகனிவன். 311

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிற்குடையவர், கேந்திர வீடுகளில் சிறப்புப்பெற்ற ஏழாம் வீட்டில் ஏறிநிற்க லக்கினாதிபதி வியாழனின் வீட்டை அடைந்திருக்க பலம் பெற்ற ஏழாம் வீட்டிற்கதிபதி உத்தம கேந்திரஸ்தானத்தில் வீற்றிருக்க அத்துடன், அந்த ஏழாம் வீட்டிற்குடையவன், புதன், சுக்கிரன் இவர்களைப் பார்த்திடவும் பிறந்த ஜாதகன், மிகப்பெரிய யோகவானாவான் என்றவாறு.

Koviloor Digital Library

இதுவுமது

மூன்றிடைக் காமனும் பாக்கிய னும்புக்கு
மூதுரை வேதியன் கண்கிடைக்கில்
முகமாமதி மனையாரிரு சுகமாதர்க டருபோகமு
முற்றுற நாளுஞ் சுகிப்பவனே. 312

லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டில் 7,9 ஆம் வீட்டிற்குடையவர்கள் நின்றிருக்க சுக்கிரனானவன் அவர்களைப் பார்த்திருக்கப் பிறந்த ஜாதகன் இரண்டு மனைவிகளை உடையவனாவான், சந்திரனைநிகர்த்த முகலாவண்யம் கொண்ட அம்மாதர்கள் தரும் இன்பபோகத்தில் மயங்கித் தினமும் போகவானாகியிருப்பான்.

அடிமை

பஞ்சமன் மூன்றவன் சத்தம கேந்திரம்
பற்றத் தலைப்பதி பாக்யமுறப்
பரமன்றலை யுறவைந்திடை வளர்சந்திர னுறவந்தவன்
படியி லடிமையும் நூறுடையான். 313

லக்கினத்திற்கு 3,5 ஆம் வீட்டிற்குடையவர்கள் கேந்திரஸ்தானமாகிய 7ஆம் வீட்டில் நின்றிருக்க, லக்கினாதிபதி ஒன்பதாமிடத்தில் சென்றிருக்க, ஒன்பதுக்கு உடையவன் லக்கினத்திலும், ஐந்தாம் வீட்டில் வளர்பிறைச் சந்திரனும் தங்கிட அச்சாதகன் தனது வாயிலில் ஏவல்பணி புரிய நூறு அடிமைகளைப் பெற்று இருப்பான் என்றவாறு.

பாக்கியன் காரியன் மூன்றி லுறக்குரு
பார்த்து மனது மகிழ்ந்திருக்க
பருலாபப திசுகாலைய மொருராகுட னுறிலோவிவன்
பாரி லடியர் பலருடையான். 314

இன்னமொரு கருத்தும் உண்டு. ஒன்பதாம் வீடாகிய பாக்கிய ஸ்தானாதிபதியும், பத்தாம் வீடாகிய கர்ம (காரிய) ஸ்தானதிபதியும் கூடி மூன்றாம் வீட்டில் தங்கியிருக்க, அவர்களை வியாழபகவான் பார்த்திருக்க, லாபஸ்தானமாகிய பதினொன்றாம் வீட்டின் அதிபதி, சுகஸ்தானமாகிய நான்காம் வீட்டினதிபதி ராகு இவர்கள் எங்காவது கூடியிருக்கப் பிறந்த ஜாதகன். இவ்வுலகில் தனக்கு சேவை புரியப் பல அடிமை வேலைக்காரர்களைக் கொண்டிருப்பான்.

முதிர்ந்தது

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44952

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமரை

நூலகம்